# உண்மையின் நிழல்கள்

வேலணையூர் சுரேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன்

[illegible]

5-4-98.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வின் நிழல்கள்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

மல்லிகைப்பந்தல்

234பி, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைப் பந்தல் வெளியீடு
முதற்பதிப்பு : மார்ச் 1997

**விலை : ரூ. 36.00**

இந்தியாவில் கிடைக்குமிடம்
**குமரன் பப்ளிஷர்ஸ்,**
79, முதல் தெரு,
குமரன் காலனி,
வடபழனி, சென்னை - 600 026

அட்டை படம் : ரமணி

அச்சிட்டோர் : சித்ரா பிரிண்டோ கிராபி,
இராயப்பேட்டை, சென்னை - 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

ஜோதிலக்ஷ்மி ஜோசப்

பக்கம்


1. பேய்த்தேர் ........ 15
2. கரை தாண்டாத அலைகள் ........ 24
3. பிணைப்பு ........ 30
4. ஆசைகள் ஏக்கங்களாக... ........ 40
5. இரண்டு பௌர்ணமிகள் ........ 53
6. இதே நாடகம் அந்த மேடையில் ........ 60
7. சந்தர்ப்பவாதம் ........ 68
8. கண்ணீருக்கே விலை இல்லை ........ 76
9. அடுப்பு நெருப்பு ........ 86
10. நேசக்கரங்கள் ........ 93
11. இது எங்கள் காலம் ........ 105
12. எங்கு சென்றாலும் ........ 114
13. சொல்ல முடியாதது ........ 121
14. சோகங்களும் சுமைகளாகி... ........ 134



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சகோதரி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களை அவர்களது பல்கலைக் கழக புகுமுகக் காலத்திலிருந்தே நானறிந்து வைத்திருக்கின்றேன். அந்தக் காலத்தில் எனது இலக்கிய நண்பர்கள் பலர் நேர்ப் பேச்சுவாக்கில் இவரைப் பற்றி அடிக்கடி கதைத்துக் கொள்வதை நான் இடைக்கிடையே அவதானித்து வந்திருக்கின்றேன்.

ஆளை நேரில் தெரியாது. சந்தித்தது கூடக் கிடையாது. இருந்தாலும் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பெரிதும் ஆர்வமுள்ளவர் என இவரைப் பற்றி மனசுக்குள் எடைபோட்டு வைத்திருந்தேன்.

பின்னர் - பல காலங்களுக்குப் பின்னர் - இவர் மல்லி கைக்குத் தனது படைப்பொன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கதை மல்லிகையில் பிரசுரமாகியிருந்தது. அதைத் தொடர்ந்து அடிக்கடி இவர் மல்லிகைக்கு எழுதிக் கொண்டிருந்தார்.

அதிஷ்டவசமாக இவர் உத்தியோகம் பார்த்து வந்த மக்கள் வங்கி மல்லிகைக் கந்தோருக்கு வெகு அண்மையில் அமைந்திருந்தது. அதன் காரணமாக இருவரும் அடிக்கடி சந்தித்துக்கொள்ளும் வாய்ப்பு இயல்பாகவே ஏற்படத் தொடங்கிவிட்டது.

அந்தக் காலத்தில் இருந்த நண்பர் ராசையா மாஸ்டருடன் நான் வெகு நெருக்கமாகப் பழகி வந்திருக்கிறேன். மிக அடக்கமாக இருந்துகொண்டே காரியமாற்றி வருவதில் இவர் தனிப்பெருமை பெற்றவர். இவருடன் இலக்கியம் சம்பந்தமாகக் கலந்துரை யாடுவதுண்டு. அந்தச் சந்தர்ப்பத்தில் ஒருநாள் இவர்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கருத்தை என் மனசில் முதன்முதலில் விதைத்து வைத்தவர். "யோகேஸ்வரி சிறப்பாக எழுதி வரக்கூடிய ஒரு பிள்ளை. அவரின் கதைகளைத் தொகுத்து ஒரு புத்தமாக மல்லிகைப் பந்தல் வெளியிட்டால் என்ன?" என ஆர்வத்துடன் அவர் என்னைக் கேட்டார்.

உடனடியாக என்னால் அதற்குப் பதில் சொல்ல இயலவில்லை. அதே சமயம் அவரது ஆலோசனையையும் உடனடியாக நிராகரித்துவிடவும் மனசு இடம்தரவில்லை. "யோசிக்க வேண்டிய விஷயம்தான் மாஸ்டர். கொஞ்சம் அவகாசம் எனக்குத் தாருங்கள். யோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வரலாம்." என அவருக்கு அந்தச் சமயத்தில் பதில் சொன்னதாக இன்று ஞாபகம்.

காரணம் ஒன்றுமல்ல. வடமாகாணச் சூழ்நிலையில் அன்று மிக நெருக்கடியான காலகட்டம். தினசரி வாழ்வதே ஒரு போராட்டமாக அமைந்திருந்த வேளை. எங்கும் மரண ஓலம். சாவின் சாயல்கள் ஒவ்வொரு குடும்பத்தையும் ஆட்டிப் படைத்த சமயம். விரக்தியடைந்த மக்கள் கூட்டம் விமானங்கள் தங்களது வீட்டுக் கூரைகள் மீது குண்டுகளை வீசலாம் எனப் பயந்த மக்கள் பதுங்கு குழிகளில் இரவு வேளைகளில் தஞ்சமடைந்திருந்த யுத்தச் சூழ்நிலையில் புத்தகத்தை எப்படிப் போடுவது? - யாரிடம்கொண்டு சென்று விற்பது?

இருந்தாலும் மனத் தைரியத்தை நான் முற்றாக இழந்துவிடவில்லை. மல்லிகையைத் தொடர்ந்து நடத்தி வந்தேன்.

ஒருநாள் சகோதரியை வீதியில் சந்தித்த சமயம், "கதைகளைத் தேடியெடுத்துச் சேர்த்து வைத்திருக்கிறேன். அக்கதைகள் கை தவறிப் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறது. அதற்காகவாவது அவைகளைத் தொகுக்க வேணும்!" எனச் சொன்னார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் அது சரியெனப் பட்டது. "சரி, சரி. வேலையை இனிமேல் கடத்தக் கூடாது. ஆரம்பிக்க வேண்டியதுதான். ஆரைக்கொண்டு முன்னுரை வாங்குவம்?" என அவரது அபிப்பிராயத்தைக் கேட்டேன்.

"என்னை இனங்கண்டு ஊக்குவித்தவரே ராசையா மாஸ்டர்தான். எழுதுவதென்றால் அவரிடம்தான் முன்னுரை வாங்க வேண்டும். அப்பதான் எனக்குத் திருப்தி ஏற்படும்" என்றார் யோகேஸ்வரி.

நானும் சம்மதித்தேன்.

அடுத்த வாரம் கையெழுத்துப் பிரதிகளை என் வசம் கையளித்தார் அவர். அதைப் பெற்றுக்கொண்ட நான் அதற்கேற்ற அட்டைப்படத்தை எனது அன்பிற்குரிய 'ரமணி' அவர்களிடம் வரையச் சொல்லி விட்டுக் கொழும்பிற்கு ஓர் அவசர சோலியாக வந்துவிட்டேன்.

இடையில் தொடர்புகளே அறுந்துவிட்டது.

கூட்டம் கூட்டமாக யாழ்ப்பாணத்து மக்கள் புலம் பெயர்ந்து, இடம் நகர்ந்தனர். மல்லிகைக் காரியாலயத் திற்கு என்ன நடந்ததென்றே தெரியவில்லை. அச்சுக் கோப்பாளர் சந்திரசேகரத்திடமிருந்து எந்தவிதமான தகவலும் இல்லை. எனவே என்ன நடந்தது என்ற விபரமே கிடைக்கவில்லை.

சில மாதங்களுக்குப் பின்னர் சகோதரர் சந்திரசேகரும் தகவல் அனுப்பினார். இரும்பு அலமாரி உடைத்து வெளியே வீசப்பட்டிருந்ததென்றும் மழையில் நனைந்தபடி கண்டுபிடிக்கப்பட்ட பையில் சுதாராஜ், யோகேஸ்வரி கதைப் பிரதிகள், அட்டைகள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அந்தத் தகவலில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் காலம் காலமாகச் சேமித்து வைத்திருந்த முக்கிய இலக்கிய ஆவணங்கள், புத்தகங்கள், மற்றும் தஸ்தா வேஜுகள் தொலைந்து போயிருந்த சூழ்நிலையில் எனது சகோதர எழுத்தாளர்களது படைப்புக்கள் திரும்பவும் கிடைத்ததை எண்ணி உண்மையாகவே சந்தோசப்பட்டேன்.

இவைகள் உருப்படியாகக் கிடைக்கும் எனக் கொஞ்சமும் நான் எதிர்பார்த்திருக்கவில்லை. கையெழுத்துப் பிரதிகள் கிடைத்ததும் மகிழ்ச்சிதான். சரி. இவைகளை இந்த யுத்தச் சூழ்நிலையில் எவ்வாறு கொழும்பிற்கு எடுத்து வருவது?

இது ஒரு சங்கடமான பிரச்சினை.

இதற்கும் ஒரு வழி வகுத்துத் தந்தார், எனது இலக்கிய நண்பர் செங்கை அழியான். கொழும்பு வந்த தனது சக உத்தியோக நண்பரிடம் அவைகளைக் கொடுத்து வெகு பத்திரமாக அவைகளை என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும் எனச் சொல்லி என்னிடம் சேர்ப்பிக்க உதவியவர் அவர்தான்.

இந்த இருவரினது ஒத்துழைப்பும் தேடல் முயற்சியும் இல்லாது போயிருந்தால், சுதாராஜ், யோகேஸ்வரி சிறுகதைத் தொகுதிகள் நூலுக்குப் பெற்றிருக்கவே முடியாது என்பது திண்ணம். அந்த இருவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் உரியவை.

மல்லிகைப் பந்தல் வெளியீடுகள் நூலுருப் பெறுவதற்காக என்னுடன் ஒத்துழைத்து வரும் இளந்தோழர் க.குமரன் அவர்களுக்கும் எனது நன்றி. அத்துடன் அச்சுப் பிரதிகளை ஒப்பு நோக்கித் திருத்திய அவர்களுக்கும் மிக அழகாக அச்சமைத்து தந்துவிய அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள்.

*22-1-97* **– டொமினிக் ஜீவா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஒருநாள் பணிமனையில் வேலை செய்து கொண்டிருந்தேன். திரு. டொமினிக் ஜீவா அவர்கள் "கதையொன்றும் எழுதவில்லையா?" என்ற வழமையான கேள்வியுடன் வந்தார். அடுத்து "உங்கள் சிறுகதைகளை ஒரு தொகுதியாகப் போடுவோம்" என்றும் கூறிவிட்டுப் போய்விட்டார்.

திடீரென்று இவருக்கு இப்படி ஓர் எண்ணம் ஏன் ஏற்பட்டது?

எனக்குப் புரியவில்லை.

இதுபற்றி நான் எந்தவித முயற்சியும் எடுக்கு முன்பே, தனது பிறந்ததினத்தன்று 'பித்தன் கதை'களை வெளியிட்டு வைத்த திரு. ஜீவா அவர்கள் அந்தப் பிரதியைப் பெறச் சென்ற என்னிடம் "அடுத்தது உங்கள் சிறுகதைத் தொகுதி வெளியீடுதான்" என்று கூறிவிட்டார்.

இவர் என்ன மனிதரப்பா? கஷ்டங்களைத் தன் தலையிலே தூக்கிச் சுமப்பதில் இவருக்கென்ன சுகமிருக்கிறதோ? நன்றாகக் கஷ்டப்படட்டுமே, எனக்கென்ன?

"எனக்கு இந்தத் துறையில் எதுவுமே தெரியாது. என் இயல்பின் காரணமாக இந்தத் துறை சார்ந்தவர்களுடன் பழக்கமும் குறைவு. சிறுகதைகளைப் பிரதி செய்து தருகிறேன். ஏனையவை உங்கள் பொறுப்பு" என்று திரு. ஜீவாவிடம் கூறிவிட்டேன். அதைக்கூட, ஐம்பது தடவைகளுக்குமேல் அவர் கேட்டுத்தான் செய்து முடித்தேன்.

இந்த நூலிலே பதினான்கு சிறுகதைகளைத் தொகுத் திருக்கிறேன். நான் எழுதிய எல்லாக் கதைகளையும், ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மிக விரும்பும் சில சிறுகதைகளைக்கூட நான் இதிலே சேர்க்கவில்லை. அவற்றை இன்னொரு தொகுப்பில் சேர்த்துக் கொள்வேன்.

நான் மனதில் எழுதிக் குவித்தவற்றையெல்லாம் எழுத்தில் எழுதியதில்லை. அதற்குப் பல காரணங்கள். அதுபோன்றே இதுவும். காரைக்காலம்மையார் இறைவனைக் கண்டதுபோல, நானும் காண நேர்ந்தால் "நான் எழுத நினைப்பவற்றை எல்லாம் எழுதக்கூடிய காலமும் சக்தியும் எனக்கு வேண்டுமென்று கேட்பேன்" என நான் வேடிக்கையாகச் சொல்வதுண்டு.

'சுதந்திர'னின் 'வளர்மதி'தான் முதலில் எனது எழுத்தார்வத்தை வளர்த்தது. அவ்வேளை வளர்மதி மாமாவாக இருந்து எனக்கு ஊக்கமளித்த, நான் இதுவரை சந்தித்தேயிராத திரு. மனோகரன் மயில்வாகனம் அவர்களுக்கு எனது நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். அவரின் பின் அதே இடத்தை வகித்த திரு. இ. சங்கர் அவர்களுக்கும் எனது நன்றி.

இலங்கை வானொலியில் இளைஞர் மன்ற அண்ணா வாக இருந்த திரு. வ. இராசையா அவர்களுக்கும் இவ்வாறே எனக்கு ஊக்கமளித்து நெறிப்படுத்தியவர். எனது சிறுகதைகள் வெளியாகும் வேளைகளில் அவ்வப்போது தன் கருத்துக்களைக் கூறி உற்சாகம் தருபவர். இதனால் இத்தொகுதிக்கு முன்னுரை எழுதும் பணியையும் அண்ணனிடமே கொடுத்துவிட எண்ணி னேன். அவரது நெறிப்படுத்தல் தொடர்ந்தும் இருக்கு மென எதிர்பார்க்கிறேன்.

பின் அட்டைக் குறிப்பெழுதி உதவிய திரு. இரா. சிவச்சந்திரன் அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சிறுகதைகளை வெளியிட்ட 'ஈழநாடு', 'தினகரன்', 'வீரகேசரி', 'மல்லிகை', 'முரசொலி', 'ஈழமுரசு', 'ஈழநாதம்' ஆகிய பத்திரிகைகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சிறுகதைத் தொகுதிக்கு அட்டைப்படம் வரைந்த திரு. ரமணி அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இதனை வெளியிட்டு வைக்கும் மல்லிகைப் பந்தலுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

கோப்பாய்.

★ ★ ★

# முன்னுரை

'**உணர்வின் நிழல்கள்**' என்னும் இந்த நூலுக்கு முன்னுரை எழுதுவதில் எனது மனம் உவகையடைகிறது. இதற்குக் காரணம் உண்டு.

நான் அறுபதுகளிலும் எழுபதுகளின் முற்பகுதியிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துத் தமிழ்ச் சேவையிலே இளைஞர் மன்றம் என்னும் நிகழ்ச்சியைத் தயாரித்தளித்துக் கொண்டிருந்தேன். வளரிளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்தினருக்கு உரியதாகிய அந்த நிகழ்ச்சி அவர்களது கலைசார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்குரிய ஓர் அருமையான வாய்ப்பினை எனக்குத் தந்தது. அந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி இளைஞர் மன்றத்துத் தம்பி தங்கையரை படைப்பிலக்கியம், வானொலி நாடகம், இசை, ஒலிபரப்பு முதலிய துறைகளில் வளர்த்தெடுக்க முயன்றேன். அந்த முயற்சி பயன் தந்தது. இளைஞர் மன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களில் ஒரு கணிசமான தொகையினர் வியக்கத்தக்க வகையில் தமது திறமைகளை வெளிப்படுத்தினர். அவர்களில் யாழ். சுழிபுரத்தைச் சேர்ந்த ஒரு தங்கை குறிப்பிட்டுப் பாராட்டத் தக்கவர். அவர் மன்ற நிகழ்ச்சிகளில் நேரில் வந்து கலந்து கொண்டதில்லை. தமது ஊரில் இருந்தவாறு எழுத்து மூலமே பங்குபற்றிக்கொண்டிருந்தார்.

அந்தத் தங்கை இளைஞர் மன்றத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்த இலக்கிய ஆக்கங்களிலே விடயச் செறிவு, வீச்சான மொழிநடை, விவாதப் பாங்கு என்பன காணப்பட்டன. அந்தப் படைப்புகளில் அவருடைய வயதுக்கு மிஞ்சிய அறிவுப் புலமும் தென்பட்டது. தொடர்ந்து எழுதவேண்டும் என்ற அவரது ஆர்வத்தை யும் காணக்கூடியதாக விருந்தது. முயன்றால் படைப் பிலக்கியத்துறையில் சாதனை புரியக்கூடியவர் என்னும் நம்பிக்கையை அவர் நமக்கு ஏற்படுத்தியிருந்தார். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை.

அந்த இளைஞர் மன்றத்துத் தங்கை - யோகேஸ்வரி சில ஆண்டுகளின் பின் சிறுகதை எழுத்தாளராகப் படைப் பிலக்கியத் துறையில் காலடி பதித்திருப்பதைக் கண்டு கொண்டேன்!

பல்கலைக் கழகக் கல்வி, உத்தியோகம் என்பனவற்றின் நெருக்கடிகள் காரணமாகப் போலும் அந்த ஆரம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் இவர் அதிகம் எழுதவில்லை. தரமான சிறுகதை களை தம்மால் படைக்க முடியும் என்பதை அவ்வப் போது தாம் எழுதிவந்த கதைகள் மூலம் காட்டிக் கொண்ட அளவில் இவர் தமது எழுத்தார்வத்துக்கு அப்போது அணை போட்டிருந்தார். அதன்பின் கடந்த இரண்டு தசாப் தங்களாகத்தான் இவரது படைப்புகள் அதிகம் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது இவருடைய சிறுகதைகளின் முதலாவது தொகுப்பாகிய இந்த நூலும் வெளிவருகிறது!

இங்குள்ள கதைகளில் சில பத்திரிகைகளில் முன்பு வெளிவந்தவை. மற்றும் சில இந்நூலுக்கென்றே எழுதப்பட்டவை. இவற்றை எல்லாம் ஒருமித்து வைத்து நோக்குகின்ற வாய்ப்பினை இந்தப் பிரசுரம் வாசகனுக்கு அளிக்கின்றது.

சமுதாயம் என்னும் பரந்த தளத்தில் நின்று, மானிடத்தைப் பல கோணங்களில் நோக்கிப் புனையப்பட்ட கதைகள் இவை. படைப்பாளியின் பார்வையின் விரிவை இவை தெளிவாகக் காட்டுகின்றன. குழந்தைகளின் உள்ளப்பாங்கு, குடும்பத் தலைவியின் சுதந்திர எல்லை, இளமையின் ஏக்கம், மானுடத்தின் வெறியாட்டம், வறுமையின் நெருடல், போலிகளின் மாய்மாலம், சமுதாயச் சீரழிவு என்பனவற்றையும் எமது இன்றைய வாழ்வின் அவலங்கள் சிலவற்றையும் இவைபோன்ற மற்றும் சில கூரிய பிரச்சினைகளையும் இந்தக் கதைகள் எடுத்துச் சித்திரிக்கின்றன.

வாழ்க்கையின் பாரிய பிரச்சினைகளை மாத்திரமின்றி, சின்னஞ்சிறு பொறிகளைக்கூட யோகேஸ்வரி நுட்பமாக நோக்குகிறார் என்பதும், அவற்றுள் தமது உள்ளத்தைப் பாதித்த நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் உள்வாங்கி, பகுத்து ஆய்ந்து, புடம்போட்டு, உணர்ச்சிச் செறிவுகொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறுகதைகளாகப் படைத்திருக்கிறார் என்பதும் நன்கு புலனாகிறது.

ஒவ்வொரு நிகழ்விலும் இவர் பெற்ற அனுபவத்தாக்கத்தை - சிந்தனைக் கிளர்வை இக்கதைகள் நமக்கு அப்படியே வீச்சுடன் தருகின்றன. இந்தத் தொகுதியில் உள்ள கதைகளைப் படிக்கும்போது இந்நூலாசிரியர் தம்முடைய அனுபவத்தை வெளியிடு வதற்குச் சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தைக் கையாண்டிருக்கும் திறமை நமக்குப் பளிச்செனத் தெரிகிறது.

யோகேஸ்வரி இங்குள்ள கதைகளிலே சித்திரிக்கும் கதைக் கருக்கள் பெரும்பாலும் அவருடைய நேரடி அனுபவங்களாக இருப்பதை வாசகர்கள் இலகுவாக உய்த்துணர்ந்து கொள்ளலாம். அத்துடன் 'இவை எமக்கு அந்நியமானவை அல்ல; நமது சொந்த அனுபவங்களே' என அவற்றில் மெய்மறந்துவிடவும் நேரிடலாம். இந்தக் கதைகளின் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணி என நான் கருதுகிறேன்.

இந்தத் தொகுப்பிலே பதினான்கு கதைகள் இருக்கின் றன. இவை ஒவ்வொன்றிலும் அதற்கென ஒரு தனித்துவம் இருக்கிறது. இவற்றிலே ஆசிரியர் தம்முடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகை யில் அங்கே இவருடைய படைப்பாற்றலினது ஆளுமை யின் பல்வேறு பரிமாணங்களைக் காண முடிகிறது.

கதைகளின் சரளமான, எளிமையான சித்திரிப்பு; தளர்வு இல்லாத கம்பீரமான கதையோட்டம்; ம' '_மான சம்பவ விபரிப்பு; பிசிறு இல்லாத மொழி நடை - இவை எல்லாம் யோகேஸ்வரியின் கதைகளுக்கு வலுவும் வளமும் சேர்க்கும் சிறப்புகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம், தமது மனதில் எழுதிக் கொண்டவற்றை யெல்லாம் எழுத்தில் எழுதிக்கொண்டதில்லை என யோகேஸ்வரி கூறுகிறார். இந்த ஏக்கம் தீர்ந்துவிட வேண்டும். யோகேஸ்வரி வங்கிக் கிளையொன்றின் முகாமையாளர்; ஒரு குடும்பத் தலைவி. இவற்றுக்குரிய பொறுப்புகள், கடமைகளுக்கிடையே சிறுகதைத் துறைக்கென இவர் நேரத்தைக் கண்டுகொள்வது சிரமே. ஆயினும், பொருத்தமான சூழ்நிலை உருவாகும்போது யோகேஸ்வரியவர்கள் தம்முடைய மனத்தில் எழுதி வைத்திருக்கும் அந்தக் கதைகளை எல்லாம் எழுத்தில் வடிக்க வேண்டும். இது எனது விருப்பு.

இளைஞர் மன்றத்துக்கு எழுதுவதன் மூலம் இலக்கியப் படைப்புலகில் அடியெடுத்து வைத்த தங்கை யோகேஸ்வரி, இன்று தரம் உயர்ந்த ஒரு, சிறுகதைப் படைப்பாளியாக பரிணமித்து நிற்பது எனக்கு உள்ளார்ந்த பெருமையையும், மனநிறைவையும் தருகின் றது. அவருடைய இந்த நூலுக்கு - அவரது முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதியதில் உவகை கொள்கிறேன்.

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் சிறுகதைத் தொகுப்புகள் இன்னும் பல வெளிவர வேண்டும்.

தங்கை யோகேஸ்வரிக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!

**வ. இராசையா**

*கொழும்பு - 6*
*01-01-97*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேய்த்தேர்

கந்தசாமி பாயைத் தட்டிப்போட்டுவிட்டு அதன்மீது சரிகிறார். உறக்கம் அவரின் அருகே வரவிரும்பாதது போலத் தொலைவில் நிற்கிறது.

'வயது போகப்போக நித்திரையும் கிட்ட வரமாட்டே னென்கிறது. நித்திரை மட்டுமா? உறவினர், ஊரவர், அயலவர் எல்லோருமே கிட்ட வர விரும்புவதில்லை. அதனாலேதான் உயிர்கூட இந்தக் கிழட்டு உடம்போடை இருக்க விரும்பாமல் போய்விடுகிறதோ?'

"பிள்ளைக்கு இது பெறுமாதம் ஒருக்காப் போய்ப் பார்த்திட்டு வருவமே?" ஒரு மூலையிலே பாயிலே கிடந்தபடி அவரது மனைவி சரசு கேட்டாள்.

"போய்ப் பிள்ளையைப் பார்க்க முடியுமே?" அவ நம்பிக்கையும் ஏளனமும் அவரது குரலிலே கலந்து கிடக்கின்றன. "அதுக்காகப் போய்ப் பார்க்காம லிருக்கிறதே?" தாய்ப்பாசத்தின் தவிப்பெல்லாம் அந்தக் குரலிலேயே உருகிக் கலந்துவிட்டதோ?

அந்தக் குடிசையின் உள்ளும் புறமும் பரவிக்கிடந்த இருள் குபுகுபுவென்று தன் இதயத்துட்புகுந்து உறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துவிட்டது போன்ற ஓர் உணர்வு கந்தசாமிக்குள் ஏற்படுகிறது.

ஒரேயொரு மகள்; எவ்வளவு ஆசை அருமையாக வளர்த்தார்கள். அந்தக் குலக்கொழுந்து, செழித்துப் படர வென்று நல்லதொரு கொழுகொம்பைத் தேடி அதற்காகவே தங்கள் வீடு, நிலம், சொத்து எல்லாவற்றை யும் கொடுத்து வாழவைத்தார்கள். அவர்கள் தங்களுக் கென்று வைத்துக் கொண்டது அரைப்பரப்புக் காணியும் நான்கு பசுக்களுந்தான்.

இன்று அவர்களால் அந்த மகளைக் கண்ணாற் பார்க்கவும் முடியவில்லை. முதலிரண்டு பிரசவங்களுக்குங் கூட இங்கே அனுப்ப அவளுடைய கணவன் மறுத்து விட்டான். இந்தக் குடிசையிலே வைத்துச் சரியாகப் பிரசவம் பார்க்க முடியாதென்பது அவனுடைய கருத்து. ஆனால் இந்த முறை பிள்ளையைப் போய்ப் பார்க்கக் கூட முடியாத தடை.

மனமெல்லாம் சுமையாக அழுத்த மூச்சுக்கூட விடமுடியாததுபோல ஓர் அந்தரம். அவர் எழுந்து உட்கார்ந்து கொள்கிறார். வேதனைகள் முள்ளாய் மனதைக்குத்த அது போதாதென்பதுபோல் பனிக்குளிர் உடலைக் குத்துகிறது. அவர் போர்த்திருந்த பழைய வேட்டியை மேலும் இழுத்துப் போர்த்துக்கொள்கிறார்.

ஒரு மூலையிலிருந்து விசும்பல் ஒலி கேட்கிறது. சரசு வும் இந்த வேதனை நினைவுகளை இரை மீட்கிறாள் போலும். அவர் ஒரு குரல் கொடுத்தால் அந்தத் தாய்மை கோவென்று கதறியழும் என்பது அவருக்குத் தெரியும். வேதனையை அதிகரிக்கக் கூடாதென அவர் மௌன மாகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது நடந்து மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஏதோ மூன்று நாட் காய்ச்சல், குடிநீருடன் எல்லாம் சரியாகிவிடும், என்றுதான் அந்தக் காய்ச்சல் வந்தவுடன் அவர் நினைத்தார். பின்பு தான் அது நெருப்புக் காய்ச்சல் என்பது தெரியவந்தது.

அவரை வைத்தியசாலையிற் சேர்த்து வைத்தியஞ் செய் வித்து அங்குமிங்குமாக ஓடித்திரிந்து எல்லா வேலைகளை யுங் கவனித்து அவரை முன்புபோல் நடமாட வைப்பதற் குள் சரசு படாதபாடு பட்டுவிட்டாள்.

அந்த வேளையில் அவள் பட்ட மற்றக் கஷ்டங்களை விட பணத்திற்காக அவள் பட்ட கஷ்டந்தான் பெரியதா யிருந்தது. பசுக்களை வைத்துப் பால் வியாபாரத்தில் தங்களுக்கும், பசுக்களுக்கும் தேவையானதைப் பெறவே திண்டாடிக்கொண்டிருந்த அவளிடம் வைத்தியச் செலவிற்குப் பணமேது? சரசு எதுவுமே செய்யத் தோன்றாமல் மகளைத் தேடிப் போனாள்.

மருமகனுக்கோ இவர்களைக் காணவே பிடிக்காது. மகளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

பெற்று அருமையாக வளர்த்த தந்தை நோயுற்றிருக் கிறார். அம்மா கண்கலங்கி நிற்கிறாள். அருகிலேயிருந்து கவனிக்கத்தான் முடியாது; அவள் கேட்கிற பண உதவியைக்கூட செய்ய முடியாது விட்டால்.

இப்படியொரு வாழ்க்கை வாழும் பெண்ணாகி விட்டேனே என்று ஏங்கினாள்.

அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்துக் கட்டிய வீட்டில் அவர்களுக்கு உரிமையில்லை. அவர்கள் உழைத்துச் சேர்த்த பணமும், நகைகளும் அவர்களுக்கு உதவாமல், உதவமுடியாமல் கிடக்கின்றன. அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று வளர்த்த மகள் இவற்றையும் வைத்துக்கொண்டு எதுவுமே செய்ய முடியாமலிருக்கிறாள். ஒரு பெண்ணாய்ப் பிறந்ததற்காகவும் ஒரு பெண்ணைப் பெற்றதற்காகவும் இப்படித் தண்டனை!

அவள் ஏதாவது செய்தேயாவது என்ற முடிவிற்கு வந்தாள். "அம்மா, அட்டியிலைத்தாறன்; அடைவு வைச்சு காசை மாறுங்கோ"

"அவரிட்டை ஒரு சொல்லுச் சொல்லிப்போட்டுத் தாவன்"

"அம்மா நடக்கக் கூடியதாய்க் கதையுங்கோ."

வேறு வழியொன்றும் புரியாமல் அந்த அட்டியலை மீண்டு கொடுக்கத் திட்டங்கள் போட்டுக் கொண்டு வந்து சேர்ந்தாள் சரசு.

"நாகம்மா அக்காவிட்டைக் குடுத்துக் காசு மாறிக் கொண்டுவாறன்" என்று சொல்லிக் கொண்டு சரசு அட்டியலுடன் புறப்பட்டபோது கந்தசாமி தடுத்தார்.

"நாகம்மாவிட்டைக் கடன்பட்டு வட்டி கட்டி முடிப்பியே? பாங்கிலை வைச்சா வட்டி குறைவு."

அங்கைபோய்க் கால்கடுக்க இண்டு முழுதும் நிக்க வேணும். சரியான சனமாயிருக்கும்; சரசு வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நேரத்தை வீணாக்கத் தயங்கினர்ள்.

'அதுக்குப் பாத்து அறவட்டி கட்ட முடியுமே. முதலே எப்ப சேர்க்கப் போறமோ தெரியாது'

'வயித்தை வாயைக்கட்டி இறுக்கிப் பிடிச்சுக் கொஞ்சம் காசு சேர்த்து, இப்ப பாலெடுக்கிற மாட்டுக் கண்டும் வளர வித்துப்போட்டு மீண்டிடலாமெண்டு யோசனையிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அட்டியலை மறுக்காமல் வாங்கிக்கொண்டு வந்தனான்.

'நாகம்மாட்டைக் காசு மாறினியோ நீ சேர்க்கிற காசு வட்டிக்குத்தான் சரியாயிருக்கும்.'

'சரி, உங்கடை விருப்பம்போலை பாங்கிலை கொண்டு போய் வைச்சிட்டு வாறன்' - சரசுவும் உடன்பட்டாள்.

ஒரு மாதந்தான் கடந்திருக்கும், மச்சான் சின்னையா வந்து கதைத்துக் கொண்டிருந்தார்.

"சங்கானை பாங்கிலை இரும்புப் பெட்டியோட நகையளைக் கொண்டு போட்டாங்களாம். நானும் ஆஸ்பத்திரிச் செலவுக்கு ஒரு ஆளிட்டை நகையை இரவல் வாங்கி பாங்கிலை நான் வைச்சனான், இங்கையும் ஏதும் நடக்குமோவெண்டு யோசனையாயிருக்கு", - கந்தசாமி தன் மனப்பயத்தை வெளியிட்டார்.

"உங்களுக்குத் தெரியாதே, நகையள் களவுபோகாமல் இருக்கவெண்டு எல்லா பாங்கு நகைகளையும் கொழும்புக்குக் கொண்டுபோயிட்டினமாமெல்லே" - சின்னையா தெரிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் அதிர்ந்துவிட்டார்கள்.

சரசு அடுத்தநாள் அதிகாலையிலே வங்கிக்குப் புறப்பட்டுவிட்டாள். நகைகள் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டதாகவும், நகை மீட்கப் பணங்கூடச் செலுத்த முடியாதென்றும் வங்கியிற் கூறிவிட்டார்கள்.

"நம்பி அடைவு வச்சன், நாசமாய்ப் போவான்கள், நம்பிக்கை மோசஞ் செய்து நகையைக் கொண்டு போட்டாங்கள்"

"ஐயோ, என்ரை பிள்ளைக்கு நானென்ன சொல்ல? நான் பெத்த செல்வம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பாவுக்கு வருத்தமெண்டென் -

அட்டியலைத் தந்துவிட்டாய்,

அட்டியலும் கொழும்பிலையாம்

அநியாயப்படுவான் சொல்லுறான்...

என்ரை பிள்ளை, ஆபத்துக்கு உதவினாய்... இப்ப உன்னை ஆபத்திலை மாட்டிப்போட்டாங்களே, என்ரை கிளி, என்ரை ராசாத்தி நான் என்னடி செய்வேன்! அட்டியலுக்கு எங்கை போவன்? உன்ரை முகத்திலை என்னண்டு முளிப்பேன்!"

சரசு ஒப்பாரி வைத்துக் கொண்டேயிருந்தாள்: கந்தசாமிக்கு மூச்சுவிட முடியாதது போல ஓர் அந்தரம். வேதனைகளை மனதிற்குள் அடைத்துக் கொண்டால் இப்படி நெஞ்சை அடைக்குமோ?

அவர் எழுந்து பின்புறம் போகிறார், பிறை நிலாவின் ஒளி கருமுகில்களூடே கண்ணாமூச்சி காட்டுகின்றது.

அந்த அட்டியலும் இப்படித்தானே. இதோ கிடைக்குமென்ற மாதிரி இருக்கும். பின் கிடைக்காமலே போய்விடும், மூன்று வருடங்களாய் அவரும் சரசுவும் மாறி மாறி வங்கிக்குப் போவதும் வருவதுமாய்... ஆனால் அட்டியல் மட்டும் வருவதாயில்லை.

நகையைக் கொடுக்கப் பாதுகாப்பில்லையாம். பலாலி முகாமுக்கு வரச் சொல்லுகிறார்கள். நகை வந்தால் அவர் போகத் தயார், எப்படியாவது அதை எடுத்துக் கொடுப்பதற்கு அவர் சாகவுந்தயார். ஆனால் எல்லோரும் அப்படியா!

சும்மா சனம் பயப்பிடு தெண்டு சொல்லவுமேலாது. பலாலி முகாமடியிலை நகை எடுத்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானிலை வந்த சனங்களை ஹெலிக் கொப்ரரிலையிருந்து சுட்டு இரண்டு மூண்டு பேர் செத்தவை தானே. பிறகும் அந்தப் பக்கம் போறதெண்டாலும்... நாங்களும் எத்தினை உத்தரிப்புகள் உத்தரிக்கிறம்" - கந்தசாமி பெருமூச்சு விடுகிறார்.

மாட்டுத் தொழுவத்தில் அவரது பார்வை விழுகிறது. அந்த வெள்ளைப் பசு நிற்குமிடம் வெறுமையாக... நிரப்பப்படாமலே...

'லட்சுமிபோலை என்ன மாதிரி மாடு.'

அவர் பிள்ளை போலப் பாசம் வைத்திருந்த பசு, விற்றபோது அவரைவிட்டுஅகல மறுத்தது; கதறிக்கதறி அது சென்ற காட்சி அவரது மனதை இப்பொழுதும் ஏதோ செய்கிறது.

"நிண்டிருந்தா இரண்டு ஈத்து ஈண்டு மூண்டாவதுக்கும் ஆயத்தமாய் நிண்டிருக்குமா" - பொருளாதார ரீதியிலும் அவரது மனம் கணக்குப்போடுகிறது.

இப்பொழுது அதற்குப் பதிலாக வங்கி தந்த துண்டு ஒன்று பெட்டிக்குள் கிடக்கிறது. அது வட்டி தருமா? குட்டி போடுமா? பசு மட்டும் நின்றிருந்தால் அவரது ஜீவியத்திற்கே ஆதாரமாயிருந்திருக்குமே.

மீண்டும் பழைய நினைவுகள். பைத்தியக்காரி மாதிரி வங்கிக்கு அலைந்த சரசு, ஓரிரு மாதங்களின் பின் நகையை மீட்கப் பணஞ் செலுத்தலாமென்பதை அறிந்து நகையே கிடைத்த மாதிரிச் சந்தோஷத்துடன் வந்தாள்.

"காசுகட்டடக் காசுக்கு எங்கை போக? விக்க நினைச்ச, கண்டு இன்னும் ஊட்டுமறக்கேல்லை' - அவர் மூளையைக் குழப்பிக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெள்ளைப் பசுவைத்தான் விற்கவேண்டும். நான்கு மாதங்களில் கன்று ஈன்றுவிடும். இதைப்போல் இரண்டு மடங்கு விலைக்கு அப்போது விற்கலாம்."

சரசுவோ உடனடியாகப் பணம் செலுத்தியாக வேண்டுமென்று பிடிவாதமாக நின்றாள்.

அதை விற்றே பணஞ் செலுத்தினார்கள். ஆனால் சரசு நினைத்தமாதிரி நகை உடனே வரவில்லை. உடனே யென்ன மூன்று வருடங்களாயும் இதுவரை வரவில்லை.

திடுதிப்பென்று ஒருநாள் மகள் வந்துநின்றாள். "அம்மா வாற புதன்கிழமை செல்வி மச்சாளுக்கு கலியாணம். அட்டியல் விஷயம் அவருக்குத் தெரியவரப் போகுது".

பொம்பர் சுற்ற ஆரம்பித்த ஊரவர்கள் மாதிரிக் குழம்பித் தவித்தார்கள் சரசுவும் கந்தசாமியும். எதுவுமே செய்ய முடியவுமில்லை; செய்யத் தெரியவுமில்லை.

"உண்மையைச் சொல்லிப் போட்டுப் போறதம்மா, நீங்கள் செய்துதந்த அட்டியல்தானே. என்னுடைய மனச்சாட்சிக்கு சரியாகத்தான் நான் செய்தனான்." அவள் பிரச்சினையை எதிர்கொள்ளத் துணிந்துவிட்டாள்.

குண்டு விழுந்துவிட்டது. விழுந்த குண்டிற்கு வீடு சேதமாகி உயிர் பிழைத்தது போல் ஓர் ஆறுதல்.

நல்லவேளையாக 'வீட்டைவிட்டு வெளியேறு' என்னும் அளவிற்கு மருமகன் போகவில்லை. அவர் களுடன் கதைக்கவே கூடாதென்ற கட்டுப்பாட்டுடன் விட்டுவிட்டான்.

இப்படியெல்லாம் நடக்குமென்று தெரிந்திருந்தால் வைத்தியச் செலவுக்கு மாட்டையே விற்றிருக்கலாம். சீவனத்திற்கு மாடுவேண்டுமென்று அப்போது நினைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்கள். இறுதியில் மாடுமில்லை. அட்டியலுமில்லை, மகளின் உறவுமில்லை; மன நிம்மதியுமில்லை.

'வருங்கால நிகழ்வுகள் முன்கூட்டியே யாருக்கும் தெரிவதில்லையே!

மகளுக்கு குழந்தை பிறக்குமுன் அட்டியலை மீட்டுக் கொண்டுவிட்டால் அவளிடம்போய் ஆசை தீரப்பேசி வரலாம். அவரது ஆசையை நினைக்க அவருக்கே சிரிப்பு வருகிறது. இந்த எதிர்பார்ப்புடன் அவர்கள் எவ்வளவு காலம் இருக்கிறார்கள்!

எங்கள் நகைகளை எங்களிடம் பாதுகாப்பாகக் கொடுக்க முடியாதவர்கள் ஏதேதோ தரப்போகிறார்கள் என்றுகூட நாம் எதிர்பார்க்கிறோம்.

எமது எதிர்பார்ப்புகள் பேய்த்தேராக எம்மை ஏமாற்றிக்கொண்டே இருக்கின்றனவே!

ஏமாற்றம் அவருள்ளிருந்த பெருமூச்சாக வெளிவரு கிறது.

*முரசொலி 1987*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரை தாண்டாத அலைகள்

"மணி மணி" - சரசுவின் குரல் தோட்டத்தினுள்ளிருந்து தெளிவாகக் கேட்டபோதும், ஒன்றுமே கேட்காதது போல் சட்டையைத் தைத்துக்கொண்டிருக்கிறாள் இராசாமணி.

"அக்கா கூப்பிடுகிறாவெல்லே" - இராசம்மா மணியின் கவனத்தைத் திருப்ப முனைந்தாள்.

"நல்லாய்க் கூப்பிடட்டும். எனக்கிப்ப போகேலாது. நாளையின்டைக்குப் பிறந்தநாள் கொண்டாட்டம். இரண்டு சட்டையும் நாளைக்குக் கொடுக்கவேணும்" வேலையிலேயே கண்ணும் கருத்தும் இருக்கப் பதிலளிக்கிறாள் மணி.

"சொன்ன தவணைக்குக் கொடுக்கிற பழக்கம் இனியென்றாலும் இந்த வீட்டிலை வரட்டும். அது இல்லாததாலை தானே நான் இப்படி வந்திருக்கிறன்" மணியை அழைத்துச் செல்ல வந்த சரசு பட்டென்று பதிலளிக்கிறாள். இராசம்மா எதுவுமே பேசவில்லை.

சரசு மலரைத் திரும்பிப் பார்க்கிறாள். அவள் பாடம் சொல்லிக் கொடுக்கிறாள். டியூசன் வகுப்பைக் கெடுக்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிர்மலா, இங்கை வாங்கோ, கண்ணனைப் பார்த்துக்கொள்ளுறியளோ? ஆட்டுக்குக் குழையொடிக்க வேணும்" - அடுத்த தங்கையை நாடுகிறாள் சரசு.

"நான் கோழிக்குஞ்சுகளைப் பிடிச்சு அடைக்க வேணும், ஆட்டைக் கொண்டுவந்து கட்ட வேணும்" - நிர்மலா தன் கடமைகளை நிரலிடுவதன் மூலமே சரசுவின் வேண்டுகோளை நிராகரிக்கிறாள்.

"மூன்று நிரைக் கொழுந்தையும் கட்டி முடிச்சிடுவ மெண்டு பார்த்தன், சரி பரவாயில்லை: நான் குழை யொடிக்கிறன், நீ பிள்ளையை வைச்சிரு."

இராசம்மா இறுதியில் தானே உதவ முன்வருகிறாள்.

வெற்றிலைச் கொல்லையைப் பார்க்கிறாள் சரசு. நிரை நிரையாக வெற்றிலைக் கொடிகள் முருக்க மரங்களைத் தழுவி நிற்கின்றன. அந்தக் கொடிகளை முருக்க மரத்துடன் கட்டும் வேலையில்தான் இராசம்மா முதலில் ஈடுபட்டிருந்தாள்.

"அம்மா பாவம்; கொழுந்தை மட்டுமா கட்டி முடிக்க முடியாமலிருக்கிறாள்? தன்ரை குமர்களையும் தகுந்த கொழுகொம்புடன் இணைக்க முடியாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறாள். கட்டி வைத்த நானும் பிரிந்து வந்துவிட்டது, அவளுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும்!"

"அம்மா!" - பசுக்கன்று இருளும் பொழுதையும் பசியின் துடிப்பையும் புலப்படுத்துகிறது.

"அம்மா!" - தொடர்ந்து பாசத்தின் பரிதவிப்பாகத் தாய்ப்பசுவின் கதறல்.

மிருகங்களுக்கிருக்கும் பாச உணர்வுகூட சில மனிதர்களுக்கிருப்பதில்லையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வருடமாகத் தன் மகன் கண்ணனைக் கூடப் பார்க்க நினைக்காத தன் கணவனை அவள் நினைத்துக் கொள்கிறாள்.

அனைவரும் அவசர அவசரமாக வேலை செய்யும் அந்த நேரத்தில் தான் மட்டும் சும்மா இருப்பது என்னவோ போலிருக்கவே, சரசுவும் கொழுந்துக் கொல்லைக்குள் கண்ணனுடன் போகின்றாள்.

அம்மா குழையொடித்துக் கொண்டிருக்கிறாள். தாம் சார்ந்து நிற்கும் முருக்கம் மரங்கள் வெட்டுண்டு துடிக்கும் துடிப்பில் பங்கு கொள்வது போல் வெற்றிலைக் கொடிகளும் அசைந்தாடுகின்றன.

மனிதருக்கு மட்டுந்தான் பாசமில்லை போலும்!

கண்ணனை விளையாட அருகே விட்டுவிட்டு குழையைப் பொறுக்கத் தொடங்கிய சரசுவின் கண்ணில் அரியம் தென்படுகிறான்.

அம்மா கட்டி முடிக்காத கொழுந்துகளை அவன் கட்டிக்கொண்டிருக்கிறான்.

கொழுந்துகளைக் கட்டுகிறான்; குமர்களை..?

அது அவனால் முடியாது. விசித்திரமான ஒரு நூல்வேலி, சாதியென்ற பெயரில் அவர்களிடையே போடப்பட்டிருப்பதால்... இல்லாவிட்டால்... இல்லாவிட்டால் அதை அவள் நினைத்துப் பார்ப்பதே தவறு என்று இவளது மனம் சொல்கிறது.

தவறு என்று தெரிந்துகொண்டே, நினைத்துக் கொண்டே, அதே தவறுகளைச் செய்வது மனிதனது பலவீனமா?

துணிவோடு நேர்மையாக அவளது மனதைத் தொட்டுச் சொல்வதானால்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியத்தின் நினைவு அவளைப் பிரிந்ததில்லை.

திருமணத்திற்கு முன் அவனை நினைத்ததைவிட அதன் பின்புதான் அவள் அவனை அதிகம் நினைத்திருக்கிறாள்.

அரியத்தின் குண நலன்களை விரும்பி, வியந்து, பின்பு அவனை மணப்பது நடவாத காரியம் என்ற நினைவு தள்ளிய தள்ளலில் தூர நின்றவள் -

கந்தசாமி கணவனாக வாய்த்து நித்திய நரகத்துள் புகுந்தபோது கற்பனையிலேயே அரியத்துடன் கலந்து விடும் நிலைக்கு வந்துவிட்டாள்.

அப்படி நினைப்பது தவறு என்று அன்று முதல் இன்றுவரை அவள் நினைக்கிறாள்.

ஆனால் குடிவெறியுடன், சீதன வெறியும் கலக்க, சொல்லியபடி சீதனம் தரவில்லை என்ற காரணத்தை வைத்தே கந்தசாமி அவளை வேதனையில் வேக்காட்டிய போது, மானசீகமாக அவள் அரியத்துடன் நடத்திய வாழ்க்கைதான் அவளுக்குள் அவ்வப்போது இனம் புரியாத சிறு கற்பனை மகிழ்ச்சியையென்றாலும் அவளுக்கு அளித்து வந்தது.

அருமையாகச் சமைத்து வைத்திருப்பாள், சரசு; கந்தசாமியின் வெறியாட்டத்தில் அது மண்ணுடன் சங்கமமாகும்போது... அடியுதையும் சேர்ந்து அவளை வேதனைக்குள்ளாக்கும்போது... இதே இடத்தில் அரியமிருந்திருந்தால் என்ற கற்பனை நீள, வேதனை மெல்ல மறைந்து, மெல்லிய கற்பனா சுகத்தை அவளுக்குக் கொடுத்துவிடும்.

சீதனப்பிரச்சனையால் கந்தசாமி துரத்திவிட வீட்டிற்கு வந்தபின் அரியத்துடன் பழகும் சந்தர்பங்கள் அவளுக்கு அதிகரிக்கின்றன. மனமும் அலைபாய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா" - கண்ணன் அவளது கால்களைக் கட்டிக்கொள்கிறான்.

அவளைத் தடுத்தாட்கொள்ளும் முயற்சியோ?

கந்தசாமி சரசுவின் உடலுடன் கொண்ட உறவுக்கு மாறாத சாட்சியல்லவா அவன்.

"அரியத்தின் நினைவுகள் வரவிடக்கூடாது"

எத்தனையோ முறை அவள் எடுத்த தீர்மானம், இந்த முறை மட்டும் தோல்வி காணாதென்பது என்ன நிச்சயம்?

மணி நேற்று கந்தையா மாமாவின் வீட்டு ரீ.வி.யில் படம் பார்த்துவிட்டு வந்து சொல்லிய கதை நினைவிற்கு வருகிறது. அதன் கதாநாயகி ஒருவனைக் காதலிக்கிறாள். ஆனால், மற்றொருவன் அவளது உடலுடன் உறவு கொண்டுவிடுகிறான். அதனால் அவள் அவனையே மணம் முடிக்கிறாள்.

இது சரியான முடிவா?

எந்த உறவு உண்மையான உறவு?

கெடுக்கப்பட்டவளுக்கும், விதவைக்கும் வாழ்வு கொடுக்க, சில இளைஞர்கள் அவர்களை மனப்பூர்வமாக மணந்ததாக அவள் வாசித்த கதைகளும் நினைவில் வந்து போகின்றன.

கதைகள், பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் மனதில் நினைக்க எழுதும்போது ஒரு கதையாகவும், சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்தும்போது வேறொரு வகையாகவும் எழுதப்படலாம். அவை கதைகள்.

ஆனால், அவளது பிரச்சினை உண்மையான வாழ்க்கைப் பிரச்சினை.

உண்மையான வாழ்வில் மனைவியை விட்டு மற்றொருத்தியுடன் வாழும் ஒருவனை சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியொன்றும் ஒதுக்கித் தள்ளிவிடுவதில்லை. ஆனால், ஒரு பெண் அப்படி நடந்துவிட்டால்... உதாரணத்திற்கு அவள் அரியத்தை மணந்துகொண்டால்...

அப்பப்பா என்னென்ன எல்லாம் நடக்கும். இதைக் கற்பனை செய்யவே அவளுக்கு நடுங்குகிறது.

அப்படியென்றால் இப்படியான எண்ணங்கள் எந்தப் பெண்ணுக்குமே ஏற்பட்டிருக்காதா?...

என்னைப்போன்ற துரதிர்ஷ்டசாலிகள் சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால், சமுதாயத்தின் கட்டுப்பாடுகளை மீறும் துணிவுகொண்ட சிலர் மட்டுமே அதை வெளிக்காட்டி அதன் பலாபலன்களை அனுபவித்திருக்கிறார்கள்.

சரசுவைப் போன்றவர்கள்?

அரியத்தின் மேல் அவள் கொண்ட அன்பின் அறிகுறி தப்பித்தவறி அவனுக்குக்கூட தெரிந்துவிட அவள் நடந்துகொண்டதில்லை.

உலகத்தைப் பொறுத்தவரை கந்தசாமி கலைத்து விட்டிருந்தாலும், 'ஒருவரும் ஒன்றும் சொல்ல முடியாத தங்கக்கம்பி' அவள்.

அவள் என்ன செய்யப்போகிறாள்? அலைகள் கரையைத் தாண்டிப் போகப்போவதில்லைதான். ஆனால், அலை கடலினுள் எழுந்து எழுந்து மோதுவதைத் தடுத்துவிடவும் முடியாதுதான்!

*வீரகேசரி 1986*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணைப்பு

"அம்மா, அம்மா!"

மனதின் ஆவல் கைகளுள்ளும் கால்களுள்ளும் புகுந்துவிட்டது போலத் தவழ்ந்து வந்து காலைக் கட்டிக்கொண்டாள் மகள் மலர்விழி. அவளது கண்களிலே தேங்கிக் கிடந்த கெஞ்சுதலும் அந்த அணைப்பும் அவளது வேண்டுகோளை எனக்குப் புரியவைக்கின்றன. தன்னைத் தூக்கிச் சென்று வெளியுலகக் காட்சிகளைக் கர்ட்டவேண்டுமென்பது தான் அவளுடைய அந்த இதமான அணைப்பின் அர்த்தம்.

காலை ஐந்து மணியளவில் சமையலறையினுள் நுழைந்த நான், காலைக்கோப்பி, காலை ஆகாரம், மதிய உணவு எல்லாவற்றையும் தயாரித்து முடித்து கணவர் காரியாலயத்திற்கு எடுத்துச் செல்ல, மதிய உணவுப் பொட்டலம், மற்றும் தேவையான பொருட்கள் ஆகியவற்றை எடுத்து வைத்து, மகன் மோகனைப் பாலர் பாடசாலைக்கு அனுப்ப ஆயத்தஞ்செய்து அனுப்பி வைத்து, நானும் குளித்து உணவருந்தி, இப்பொழுதுதான் சற்று ஓய்வாக வந்திருந்தது அவளுக்குப் புரிந்து விட்டதோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்கிடை என் கவனிப்புக் கிடைத்தாலும் அம்மம்மாவின் மேற்பார்வையில் இருந்தவளுக்கு அம்மாவைக் கண்டதும் ஓர் ஆவல்! ஒரு மகிழ்ச்சி!

"முதலிலை குளிச்சிட்டு வருவம்" என்று சொல்லி நான் அவளைத் தூக்கிச் சென்று குறிப்பாட்டி, சட்டைபோட்டு உணவூட்டும்போது வேடிக்கை காட்ட பின்புற ஜன்னலருகே கொண்டு செல்கிறேன்.

வளர்ந்த தென்னை மரங்கள் குடைபிடிக்க, புற்றரை விரிந்து கிடக்கிறது.

கையைத் தட்டி ஏதோ புரியாத மொழி பேசி மகள் மலர்விழி சிரிக்கிறாள். வெளியுலகைப் பார்ப்பதில் அந்தப் பிஞ்சிற்குத்தான் எவ்வளவு ஆசை!

குழந்தைக்கு மட்டுமல்ல மனித குலத்திற்கே உரித்தான ஆசைதான் அது.

"ம்மா... ம்மா..."

ஓ! அடைபட்டுக் கிடக்காமல் வெளியேறி வெளி யுலகைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை மனிதருக்கு மட்டுமல்ல எங்களுக்குமுரியதென்று அந்தப் பசு கூறுகிறதா?

"ம்மா... ம்மா..."

'பக்கத்தே புல்வெளியிருந்தும் வயிறு நிறையப் பசியிருந்தும் போய் மேய முடியவில்லையே' என்று கு,ல்கொடுக்கும் பசு.

"உனக்கும் எங்களைப்போல் ஆசையிருக்கிறதென்று நீ ீறுகிறாய். நாங்களும் உன்னைப்போலிருக்கிறோ மென்று நான் நினைக்கிறேன்" நான் எனக்குள்ளேயே அந்தப் பசுவுடன் கதைத்துக்கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மம்மா வாசித்துக் கொண்டிருந்த பத்திரிகையைப் பறிக்கவேண்டுமென்று மலர்விழி சிணுங்கத் தொடங்குகிறாள்.

இந்த வயதிலும் எனது அம்மாவிற்கு வாசிக்கும் ஆர்வம் நிறைய இருக்கிறது. ஆனால், அவள் படித்தது நான்காம் வகுப்பு வரையிலேதான். அவர்கள் காலத்தில் பெண்கள் படிப்பது அவசியமற்றதாகவே கருதப்பட்டது. எனது அம்மம்மாவுக்கு எழுத வாசிக்கவே தெரியாது. ஆனால் இதிகாசங்களும், புராணங்களும் அவள் கதையாகவே சொல்லி நான் பயின்றவை. படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் எப்படி இருந்திருப்பாள்!

மகளுக்கு உணவூட்டி முடிந்ததுமே நான் படிக்க ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த நினைவுகளிடையே மனத்தினுள் தலைநீட்டுகின்றது.

பதவி உயர்விற்கான பரீட்சையொன்றிற்குப் படிக்க வேண்டுமென்றே அலுவலகத்தில் விடுமுறை பெற்றுக் கொண்டு இன்று வீட்டில் நிற்கின்றேன். அதற்காகவே மதிய உணவையும் அதிகாலையிலேயே தயாரித்து விட்டேன்.

“அம்பா... அம்பா...” என மலர்விழி தன் பிஞ்சுக்கையை ஜன்னல் கம்பிகளினூடே நீட்டி மா'ட்டை அழைக்கிறாள்.

தம்பி, மாட்டைப் புல்வெளியில் மேயவிடக் கொண்டு செல்வதை இப்போதுதான் நான் அவதானிக்கின்றேன். அதன் பார்வையில் அந்த வெளியிலே பசிதீர மேய வேண்டுமென்ற வேட்கையும், அதன் நடையிலே தன் கட்டுக்கள் அகன்ற ஆனந்தமும் புலப்படுவதுபோல எனக்குத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ரை செல்லம் இங்கை வாங்கோ. பேப்பர் வாசிப்பம். அம்மாவைப்போலப் பிள்ளையும் படிக்க வேணும்." அம்மா மலர்விழியை அழைக்கிறாள்.

அம்மா இப்படி 'படிக்கவேண்டும், படிக்கவேண்டும்' என்று சொல்லிச் சொல்லித்தான் என்னையும் படிக்க வைத்தாள். இன்று பெண்கள் படிக்கத் தேவையில்லை என்ற எண்ணம் தளர்ந்துவிட்டது. படித்துப் பட்டம் பெற்று பல துறைகளிலும் அவர்கள் பங்கேற்கிறார்கள்.

"அம்பா... அம்பா..." அம்மம்மாவிடம் செல்வதில் அசிரத்தை காட்டி, மீண்டும் பசுவை அழைப்பதில் கவனமாகிறாள் என் மகள்.

மிக அவசரமாக ஆவலுடன் அது புல்மேய்ந்து கொண்டிருக்கிறது.

"இப்படியே இவளை வைத்து விளையாடிக் கொண் டிருந்தால் நான் படித்த மாதிரித்தான்" இன்னும் இரண்டே நாட்களில் நடக்கவிருக்கும் பரீட்சையை எண்ணி என் மனம் அந்தரப்படுகிறது.

"குஞ்சு, அம்மம்மாவோடை போயிருந்து விளை யாடுங்கோ"

"அம்மா" அவள் என்னை இறுகக் கட்டியணைத்துக் கொள்கிறாள்.

"நான் லீவெடுத்தது உன்னைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருக்கவே?" படிக்கவேண்டுமென்ற அந்த மன ஆவேசத்தில் எனது குரலில் உஷ்ணம் ஏறுகிறது.

"குழந்தைக்கும் உன்னோடையிருக்க ஆசையாயிருக்குந் தானே..." அம்மா அவளுக்காகப் பரிந்துகொண்டு வருகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமம்மா, நானும் படிக்கவேணுந்தானே. இந்த நேரத்தையும் விட்டால் எப்ப படிக்கிறது? இன்னும் கொஞ்ச நேரத்திலே மோகன் வந்தால் இரண்டுமாய்க் குளப்படி செய்யுங்கள்."

"மலர், அம்மம்மாவிட்டை வாங்கோடா, என்ரை செல்லமெல்லோ" அம்மா அவளை அழைத்துச் செல்லப் பெருமுயற்சி செய்தும் முடியவில்லை.

நான் ஜன்னலருகே ஒரு நாற்காலியைப் போட்டு மலர்விழியை அதிலே நிற்கவைத்து வேடிக்கை பார்க்க விட்டுவிட்டு, அவளை அணைத்தவாறு அதிலமர்ந்து புத்தகத்தைப் பிரிக்கிறேன்.

மனம் புத்தகத்தில் முழுமையாக நிலைக்க முடியாது மெல்ல நழுவுகிறது.

மகளின் மெத்தென்ற பிஞ்சு விரல்களின் மென்மையான வருடல்கள். இன்பத்தைக் குலைத்துக் கொஞ்சும் இனிய மழலை.

யார் யாரோ பெற்ற குழந்தைகள் மழலை பேசியபோது ஆசையாக இரசித்திருக்கிறேன். திரைப்படத்தில் ஒரு குழந்தை மழலை பேசிக் குறும்பு செய்தால் ஆவென்று பார்த்துக் கொண்டிருந்திருக்கிறேன். ஆனால், நான் பெற்ற குழந்தைகளின் மழலையையும், குறும்பையும் இரசிக்கவே நேரமில்லாமல்.. இது என்ன வாழ்க்கை!

"அம்மா" மலர்விழி என் பக்கத் திரும்பிவிட்டாள். கழுத்தைக் கட்டிக்கொண்டு புத்தகத்தைப் பிடுங்க ஆரம்பிக்கின்றாள்.

"புத்தகத்தைக் கிழிச்சுப் போடாதேங்கோ" என நான் சொன்னதும் அவள் புத்தகத்தைப் படிக்கும் பாவனையில் அமர்ந்துவிடுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய படங்கள் போட்ட புத்தகம் ஒன்றைக் கொண்டுவந்து அவளிடம் கொடுத்துவிட்டு எனது புத்தகத்தை மீட்டு ஒருமாதிரிப் படிக்க ஆரம்பிக்கிறேன்.

என் கவனம் அடிக்கடி மலர்விழி என்ன செய்கிறாளென்பதிலே போகிறது. படிப்பதென்றால் அதில் முழுமையாக ஈடுபட்டு அதிலேயே ஆழ்ந்துவிடும் பழைய நாட்கள் நினைவிற்கு வருகின்றன.

"மிஸ். தட்சணாமூர்த்தி, மிஸ். கந்தசாமி எல்லோரும் மிஸ்ஸாக இருப்பதால் இப்படிப்பட்ட பிரச்சனை களில்லாமல் படிப்பார்கள்."

என் மனத்தில் ஏக்கமா? பொறாமையா?

"இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" என் அறிவு சிரிக்கிறது.

மாட்டின் நினைவு வந்ததும் அது வளவிற்குள் நிற்கிறதா? என எட்டியும் பார்க்கிறேன். அப்படி யொன்றும் அது அதிக தூரம் போய் மேயவில்லை. அது ஒன்றும் சுயேச்சையாக விடப்படவில்லை. ஒரு நீண்ட கயிற்றில் பிணைத்துத்தான் தம்பி அதை மேயவிட்டிருக் கிறான் என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது.

'சர்ர்ர்.'

புத்தகம் கிழிக்கப்படும் சத்தம்கேட்டுத் திரும்புகிறேன். தன் தவறு புரிந்தோ, சரிவரக் கையாளத் தெரியாமல் அழகிய படமொன்றைக் கிழித்துவிட்டதைப் பொறுக்க முடியாமலோ மலர்விழி விம்மிப் பொருமி அழ ஆரம்பிக்கிறாள்.

அவளைத் தூக்கி ஆசுவாசப்படுத்துகிறேன். அப்படியே அவளைத் தோளிற் சாய்த்தவாறே நடந்துகொண்டே மீண்டும் படிக்க ஆரம்பிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா, பா... பா..."

"சரி, இதிலை இருங்கோ. பால் கொண்டுவாறன்."

பாலைக் கரைத்துக் கொடுத்துவிட்டு, அவளை மடிமீது கிடத்தித் தட்டிக்கொடுத்தவாறே படிக்க ஆரம்பிக்கிறேன். அவள் மடியிலிருந்து இறங்கித் தவழ்ந்து போகிறாள். நல்லவேளை! பொம்மையுடன் சிறிது நேரங் கழிகிறது. பின்னர் அடுத்த சமிக்ஞை.

எல்லாம் முடித்து அவளைக் கழுவித் துடைத்து, பௌடர் போட்டு, வந்து புத்தகத்தை எடுத்து பத்து நிமிடங்கள் ஆகியிருக்காது.

"அம்மா, நீங்கள் வேலைக்குப் போகேல்லையே?" மகன் மோகன், பாலர் பாடசாலையிலிருந்து வரும்பொழுதே ஆச்சரியமும், ஆனந்தமுமான கேள்வியுடன் வருகிறான். கட்டியணைத்துத் துள்ளிக்குதித்து,

"அம்மா என்னைத் தூக்குங்கோ. நீங்கள்தான் எனக்குச் சாப்பாடு தீத்தவேணும்." என்று கட்டளையும் போடு கிறான்.

அவன் கொண்டுவந்த பொருட்களைச் சரிபார்த்து, உடை மாற்றச் செய்து, இருவரதும் குட்டி யுத்தங்களை யும் சமரசஞ் செய்து, இருவருக்கும் உணவூட்டி முடிவதற்குள் போதும் போது மென்றாகிவிடுகிறது.

'இருவரையும் உறங்கச் செய்தால் சிறிது நேரம் படிக்கலாம்.'

என் முயற்சி பலிக்காத கோபத்தில் மோகனுக்கு ஓர் அடி போடுகிறேன்.

'அம்மம்மா' என்று அவன் கதறிக்கொண்டுபோய், அம்மம்மாவின் அருகே சாதுப்பிள்ளையாக விம்மிக் கொண்டே படுத்துவிடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் பிள்ளை குழந்தையை அடிக்கிறாய்? அவன் தன்பாட்டிலை படுக்கிறவன். அம்மா நிற்கிற சந்தோசத்திலை ஓடித்திரிகிறான். பிள்ளைகளை பாசமாய் வளத்தால்தான் நல்ல பிள்ளையளாய் வளருங்கள்" அம்மா அவனை அணைத்தபடி சொல்கிறார்.

'ஒருநாள் லீவு முடியுது. காலமை மூன்றரை மணிக்கு எழும்பி என்ன பிரயோசனம்? இன்னும் பத்துப்பக்கம் கூடப்படிக்கேல்லை." நான் கோபத்தோடு கத்துகிறேன்.

மோகன் மிரண்டு விழித்தபடி விம்முகிறான். அந்தப் பிஞ்சு முகத்தைப் பார்த்தவுடனேயே கோபம் போய் ஒரு குற்ற உணர்வு என்னுள் தலையெடுக்கிறது.

இந்த ஆர்ப்பாட்டத்திலேயே சாதுப்பிள்ளைபோல் மலர்விழி என் மடியில் படுத்துவிடுகிறாள்.

அதிகாலையில் எழுந்து அரைமணி நேரம் படித்திருப்பேன். அதற்கிடையில் மலர்விழி எழுந்து, பசியினால் அழ ஆரம்பித்துவிட்டாள். அவளைக் கவனித்து முடித்ததும் சமையலை ஆரம்பித்தேன். அதிகாலைப் படிப்பு அத்துடன் நின்றுவிட்டது. பின்பு நேரம் இப்படிக் கழிகிறது.

இரு பிள்ளைகளும் உறங்கிவிட்டார்கள். நிம்மதியாகப் படிக்கத் தொடங்கி அதிலே ஆழ்ந்துவிடுகிறேன்.

"ராஜி" என்ற எனது கணவரின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்கிறேன்.

"என்ன நேரத்தோடை வந்திட்டீங்கள்?"

"ராஜி லீவெண்டபடியால் நேரத்தோடை வந்திட்டன்"

அவர் குறும்பாகச் சிரித்தபடி கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாப்பிட்டிட்டீங்கள்தானே. இப்ப ஏதாவது குடிக்கத் தரட்டே?"

"எலுமிச்சம் பழமொண்டு கரைச்சுக்கொண்டு வாருமன். இந்த வெயிலுக்கு நல்லாயிருக்கும்."

எலுமிச்சம் பழ ரசத்தைத் தயாரித்துக் கொண்டுவந்து கொடுக்கிறேன். அதை வாங்கிப் பருகிக்கொண்டே அவர் தொடங்கிய கதை, காரியாலயத்திலிருந்து அரசியலுக்குப் போய், உறவினருக்கு வருகிறது. என் மனமோ படிக்க வேண்டுமென்று பறப்பதை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"நான் போய்ப் படிக்கட்டே?"

தன் கயிற்றின் நீளம்வரை மேய்ந்துவிட்டு, அப்பாலுள்ள புல்லை மேய்வதற்குப் பெருமுயற்சி செய்யும் பசு என் கண்களிற் படுகிறது.

"இவ்வளவு நேரமும் படிச்சனீர்தானே. கொஞ்சநேரம் என்னோட இருந்து கதையுமன்."

"இந்தப் பிள்ளையளோடை படிக்க முடியுமே? இனிப் பின்னேரமாக நாலுபேர் வந்து போவினம். இரவு எல்லா வேலைகளும் முடிய நித்திரை வரும். நேற்றிரவு மலரைக் கட்டிலிலை படுக்கவிட்டு தட்டிக்கொடுத்துக் கொண்டு பக்கத்திலை நிலத்திலை இருந்து படிச்சனான். அப்பிடியே இருந்தபடி கட்டிலிலை சரிஞ்சு நித்திரையாயிட்டன். எழும்பிப் பார்த்தால் இரவு ஒரு மணி." என் கட்டுப் பாட்டையும் மீறி, குரலிலே கொதிப்பு ஏறுகிறது.

"இனிப் படிக்கிறது கஷ்டமப்பா"

"அம்மா.." தன் பிணைப்பிலிருந்து விடுபட முடியாமல் தாய்ப் புல்வெளியில் மேயும் மாடுகளைப் பார்த்து பசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறுகிறது. தானும் அப்படி மேயவேண்டுமென்ற ஆதங்கம்.

"மற்றவை படிக்கினந்தானே, சந்திரன், கேசவன் எல்லாரும் விரல் நுனியிலை விஷயங்களை வைச்சிருக்கினம். அவ்வயளோடை போட்டி போடுற தெண்டால் படிக்க வேண்டாமே?"

"அவை ஆம்பிளையள். அந்த மாதிரி உம்மாலை இனிப் படிக்க ஏலுமே?"

சுரீரென்று ஓர் ஆணி! அது மூளையிலா இதயத்திலா இல்லை என் உயிரிலா அறையப்பட்டது?

"என்னாலை இவ்வளவு வீட்டுவேலைகளோடையும் படிக்கேலாது ராஜி. நான் அப்பிளிக்கேஷனே போடேல்லை" என்னோடு வேலை செய்த சகுந்தலா எடுத்த முடிவு நினைவிற்கு வருகிறது.

ஆனால், என்னால் அப்படியும் முடிவெடுக்க முடியவில்லையே! பாடசாலையிலோ பல்கலைக் கழகத்திலோ ஒதுங்கிப் பின்னின்றவளில்லையே. இப்போது பின்நிற்க என் மனத்தைப் பழக்குவதென்றால்...? அந்தக் கஷ்டம் அந்த வேதனை எனக்கு மட்டுந்தான் தெரியும்.

"அம்மா."

தன்னைப் பிணைத்திருந்த கயிறு இழுத்துப் பிடிக்க, அப்பாலுள்ள புல்வெளியைப் பார்த்து ஏக்கத்துடன் அந்தப்பசு கதறுகிறது.

***வீரகேசரி 1987***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைகள் ஏக்கங்களாக...

'கணகண'வென்று பாடசாலை மணியொலி கேட்கிறது. அவசர அவசரமாக, புத்தகங்கள், கொப்பிகள், பென்சில், கலர் சோக் பெட்டி ஆகிய எல்லாவற்றையும் புத்தகப் பையினுள் அடைத்துக்கொண்டாள், கலா.

''பள்ளிக்கூடத்திலேயிருந்து வெளிக்கிடுகையில் எல்லாம் இருக்கோ என்று பார்த்து வெளிக்கிடவேணும்.'' அம்மாவின் சொற்கள் நினைவில் வர அதைச் செயற்படுத்த முனைந்தும், முடியாதவாறு அதனைக் குழப்பும் ஓர் அவசரம் அவளுள் வியாபிக்க, தோழியிடம், "நில் இந்து. நானும் வாறேன்" என்று கூறியவாறு ஓட்டமும் நடையுமாக இந்துமதியைப் பின்தொடர்ந்து வகுப்பை விட்டு வெளியேறுகிறாள் கலா.

பாடசாலை முகப்பில் இந்துமதியின் அம்மா அவளை அழைத்துப் போகக் காத்துநிற்பது தெரிகிறது.

'அம்மா, இன்டைக்கு எல்லாக் கணக்குஞ் சரி' இந்து ஆவலுடனும் ஆனந்தத்துடனும் தன் அன்றைய வெற்றியைக் கூறுகிறாள்.

'கெட்டிக்காரி, ஒவ்வொரு நாளும் எல்லாத்துக்கும் சரி வாங்க வேணும் என்னடா' இந்துவின் அம்மா அவளை அணைத்தபடி கூறுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா எதுவுமே பேசாமல் பார்த்துக்கொண்டு நிற்கிறாள். அவளுக்கும் அன்றைக்கு எல்லாக் கணக்குகளும் சரிதான். கலா சொல்வதெழுதலில் கூட எல்லாம் சரி வாங்கியிருந்தாள். அதை யாருக்குச் சொல்வது?

"வீட்டை போவமே இந்து?" என்று இந்துவின் கையைப் பற்றிக்கொண்டே அவளுடைய அம்மா, கலாவைப் பார்க்கிறாள்.

"கவனமாய் வீட்டை போவீங்களே கலா"

"ஓ நான் போவேன்."

வழமையாக இந்துமதியின் அம்மா கேட்கும் கேள்விக்கு வழமையான பதிலைக் கலாவும் கூறுகிறாள்.

கலா திரும்பி எதிர்த்திசையில் நடக்க ஆரம்பிக்கிறாள். சஸிதரன் தன் அண்ணனின் சைக்கிளிலும் அனுஷா மாமாவின் சைக்கிளிலும் ஏறிச்சென்றார்கள்.

கலாவின் மனதில் ஓர் ஏக்கம் படர்கிறது!

"கலா! கலா!"

கலா திரும்பிப் பார்க்கிறாள். நாவரசனின் அம்மாதான் கூப்பிடுகிறார்.

கலாவின் அப்பாச்சி வீட்டைக் கடந்துதான் நாவரசனின் வீட்டுக்குப் போகவேண்டும். நாவரசனின் அம்மாவைப் போல் அந்த வழியால் செல்பவர்கள் கலாவை அழைத்துச் செல்வதுண்டு. அவர்களை எதிர்பார்க்காமலே அவள் தனியாகவே நடந்தும் போய்விடுவாள். அதில் அவளுக்குப் பயமொன்றுமில்லை. ஒரு பெருமைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா தனது வீட்டிற்குக்கூட நடந்து போய்விடுவாள்! அவளுடைய வீடு அப்பாச்சி வீட்டைப்போல் அருகிலா இருக்கிறது! அம்மாவுக்கும் அப்பாவுக்கும்தான் அவள் தனியாக நடந்து வீட்டிற்குப் போவதில் பயம். அதனால்தான் பாடசாலைக்கு அருகில் இருக்கும் அப்பாச்சி வீட்டில்போய் நிற்குமாறு கூறி, மாலையில் வந்து அப்பா அழைத்துப் போகிறார்.

"அம்மா நான் நெருப்புப் பெட்டியிலை செய்த காரை நல்ல வடிவெண்டு ரீச்சர் சொன்னவ. வகுப்பறையிலை கைப்பணிப் பொருட்களோடை வைச்சிருக்கிறா"

நாவரசன் தன் அன்றைய மகிழ்வைத் தன் அம்மாவிடம் சொல்லிப் பெருமைப்படுகிறான்.

"கெட்டிக்காரன், இதிலையெல்லாம் கெட்டித்தனமாய் இருக்கிற மாதிரி படிப்பிலையும் கெட்டிக்காரனாய் இருக்க வேணும்" நாவரசனின் அம்மாவின் புத்திமதி இது.

கலா தன் நினைவோட்டங்களை ஊடறுத்த அவர்களின் பேச்சை ஒரு நிமிடம் கவனிக்கிறாள். அவள் செய்துகொண்டு போன கதிரை மேசைகளையும் ரீச்சர் பாராட்டிவிட்டு, கைப்பணிப் பொருட்களுடன் வைத்திருந்தார்.

இந்துமதியும் நாவசரனைப்போல் தன் திறமைகளை தாயாரிடம் சொல்லி மகிழ்வது அவளது நினைவில் மின்னி மறைந்தது.

மீண்டும் அவளது மனதில் ஏக்கம் படர்கிறது!

அவளையும் அவளுடைய அம்மா வந்து கூட்டிக் கொண்டு போகவேண்டும். அவளும் இப்படித் தன் திறமைகளையும் அன்றாட நிகழ்ச்சிகளையும் அம்மா விடம் கூறிக்கொண்டே நடந்து செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்... ஆனால்... அது நடக்காத ஒன்று. கலாவினுடைய மனதிலே கற்பனையாகவும் கனவாக வுமே இருந்துவரும் ஆசை!

அவளும் தன் திறமைகளை அம்மாவிடம் ஒவ்வொரு நாளும் சொல்லத் தவறுவதில்லைத்தான். மாலையில் அவள் வீட்டுக்குப்போன பின்தான் பெரும்பாலும் களைத்து விழுந்து அம்மா வந்து சேருவாள். அம்மாவைப் பார்க்க அவளுக்கே பாவமாயிருக்கும்.

சில சமயம் கலா தன்னை மறந்து, அம்மா வந்ததும் வராததுமாக ஏதாவது சொன்னாலும் "பொறு ராசாத்தி அம்மா களைச்சுப் போயெல்லே வந்திருக்கிறா. அவ உடுப்பு மாத்திக்கொண்டு வந்த பிறகு எல்லாம் சொல்லலாம்" என்று அப்பா சொல்வார்.

அம்மா இரவுச் சாப்பாட்டை அவளுக்கு ஊட்டும்போதுதான் அன்று நடந்த நிகழ்ச்சிகளை அவள் கூறுவாள். அப்போது அம்மா அவளை முத்தமிட்டுப் பாராட்டத் தவறுவதில்லை.

என்றாலும், அவளுடைய மனதில் அந்த ஏக்கத்தின் அடிப்படையிலிருந்து எழுந்து பரந்த ஒரு அதிருப்தியின் சாயல் எப்பொழுதும் இருக்கிறதோ?

அவள் தன் ஆசையை அம்மாவிடமே அடிக்கடி கூறுவாள்.

"அம்மா, இந்துவை ஒவ்வொரு நாளும் அவவின்ரை அம்மா வந்து பள்ளிக் கூடத்தாலை கூட்டிக்கொண்டு போறா. அம்மாவைக் கண்ட உடனேயே தனக்கு கணக்குச் சரி, சொல்வதெழுதல் சரி என்டெல்லாம் இந்து சொல்ல அவவின்ரை அம்மா கட்டிப்பிடிச்சுக் கொஞ்சியெல்லாம் விடுவா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானும் பிள்ளையைக் கொஞ்சி விடுகிறனான் தானே!" அவளுடைய முறையீட்டிற்கு அம்மா இப்படிப் பதில் கூறிச் சமாதானஞ் செய்வாள்.

"எண்டாலும் நீங்கள் பள்ளிக் கூடத்துக்கு வந்து ஒருநாளும் கூட்டிக்கொண்டு வாறேல்லை" அவள் தன் ஏக்கத்தை அம்மாவிடம் விடாப்பிடியாகப் புலப்படுத்து வாள்.

"அம்மா வேலைக்குப் போறனானெல்லே. எப்படியடா உங்களை வந்து கூட்டிக்கொண்டு வாறது? என்ரை கண்ணனுக்கு எல்லாம் விளங்குமெல்லே. அம்மா வேலை செய்து நிறையக் காசு கொண்டுவாறதாலை தானே பிள்ளைக்கு சொக்கா, பிஸ்கற், அச்சாச் சட்டை எல்லாம் வாங்கித் தாறனான்."

"உண்மைதான். அம்மா வேலைக்குப் போறதாலை தான் எனக்கு இதெல்லாம் கிடைக்குது." கலாவும் தன்னைத்தானே சமாதானம் செய்ய முயல்வாள்.

வருஷப்பிறப்புக்கு ரமேஷுக்குப் புதுச்சட்டை வாங்கிக் கொடுக்கேல்லையாம்.

"புதுச்சட்டை எல்லாருக்கும் வாங்கித்தர அப்பா விட்டை காசில்லை. எனக்குப் புதுச் சாரம்தான் அம்மா தைச்சுத் தந்தவ."

ரமேஷ் சொன்னது கலாவின் நினைவில் வந்து போகிறது. மஞ்சுளாவுக்குப் புதுச்சட்டையே தைக்கேல்லையாம். கலாவுக்கு அம்மா புதுச் சட்டை யொன்றும் புது மக்ஸி ஒன்றும் தைத்துத் தந்தவ. அவளுடைய தங்கச்சிக்கும், தம்பிக்கும் கூட இரண்டு இரண்டு புதுச் சட்டைகள் தைத்துக் கொடுத்தவ. அம்மா வேலைக்குப் போகாட்டால் இப்படியெல்லாம் புதுச் சட்டைகள் வாங்க முடியுமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டாலும் அம்மா ஒரு நாளைக்கென்றாலும் வந்து கூட்டிக்கொண்டு போனால் எவ்வளவு நல்லாயிருக்கும்!

இந்த அப்பாச்சி வீடு கிட்ட இருக்கிறதாலைதானே அம்மா லீவெடுத்து நிக்கேக்கை கூட என்னை வந்து கூட்டிக்கொண்டு போகமாட்டாவாம். அம்மா லீவெடுக்கிற தென்டாலும் ஏதாவது வேலை, தம்பிக்கு வருத்தம் என்றுதான் லீவெடுப்பா. பிறகு வர நேரமில்லையென்று சாட்டுச் சொல்லுவா.' கலா தனக்குள்ளே நொந்து கொள்கிறாள்.

அப்பாச்சி வீடு அண்மித்து விட்டது.

"பிள்ளையைப் பார்த்துக்கொண்டு நிற்கிறா அப்பாச்சி."

வாசலில் அவளை எதிர்பார்த்து நிற்கும் அப்பாசியைப் பார்த்து நாவரசனின் அம்மா சொல்கிறார்.

"பிள்ளை தனியா வாறது. அதுதான் பார்த்துக் கொண்டு நிற்கிறன் பாருங்கோ" அப்பாச்சியின் பதில் இது.

"நாங்கள் கூட்டிக்கொண்டு வந்துவிடுவம். நீங்கள் யோசிக்காதையுங்கோ. வெய்யிலா இருக்கு வரட்டே" நாவரசனின் அம்மா விடைபெற்றுச் செல்கிறார்.

கலா வீட்டினுள்ளே போய்ப் புத்தகங்களை வைக்கிறாள். செம்பில் தண்ணீர் எடுத்து கைகால் கழுவிக் கொண்டு அறையினுள்ளே போய் சட்டையை மாற்றுகிறாள்.

"அப்பாச்சி பாவம். அவவைக் கஷ்டப்படுத்தாமல் எல்லாம் செய்ய வேணும்." அம்மாவின் இந்தப் போதனையில் ஊறி அவள் இவற்றையெல்லாம் செய்யப் பழகியிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பையில் அப்பாச்சி போட்டு வைத்திருந்த சோற்றைச் சாப்பிடவே அவளுக்குப் பிடிக்கவில்லை.

"அப்பாச்சி கஷ்டப்பட்டு உங்களுக்கென்று சமைக்கிறதைச் சாப்பிட வேணும்" அம்மா அடிக்கடி சொல்வது நினைவிற்கு வரவே அவள் சாப்பிடத் தொடங்கினாள்.

அப்பாச்சி பாவம். எவ்வளவு வருத்தத்தோடையும் கஷ்டப்பட்டு எனக்கு விருப்பமான கறி பொரிய லெல்லாம் செய்திருக்கிறா. அவள் மனம் அப்பாச்சியின் அன்பிற்காக உருகினாலும் அவளால் சாப்பிட முடியவில்லை.

அம்மா இருந்து கதை சொல்லிச் சொல்லி சோறூட்டி விட்டால் அவள் தன்னையும் மறந்து நிறையச் சாப்பிட்டு விடுவாள்.

'சனி, ஞாயிறில்கூட இப்ப அம்மா கதை சொல்லுறேல்லை. இந்தத் தம்பி பெரிய குளப்படி. அவன் அங்கையுமிங்கையும் ஓட அவனுக்குப்பின்னாலை கெஞ்சிக் கொஞ்சிக் கொண்டு திரியவேணும். பிறகெப்படிக் கதை சொல்லுறது. தங்கச்சி மாலா இவனைப்போல குளப்படி இல்லை. மாலா தம்பியளவாய் இருக்கேக்கை அம்மா கதை சொன்னால் கேட்டுக் கொண்டிருந்து சாப்பிடுவாள். அம்மா அப்படிக் கதை சொல்லிச் சாப்பாடு தீத்திவிட்டா எவ்வளவு நல்லா யிருக்கும்."

கலாவால் சாப்பிடவே முடியவில்லை. ஏனோ அழவேண்டும் போலக்கூட ஒரு தவிப்பு அவளுள் எழுந்தது.

"அப்பாச்சி எனக்குக் காணும். மிச்சத்தை ஜோனுக்கு வைக்கட்டே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கெண்டு மினைக்கெட்டு நானும் சமைக்கிறது தான். எப்பதான் சாப்பிடுகிறாய்?" அப்பாச்சியின் இந்தப்பதிலையே அனுமதியாக எடுத்துக்கொண்டு அவள் சோற்றைக் கொண்டுபோய் நாய்க்குப் போடுகிறாள். ஜோன் வழக்கம்போல் அதற்கென்றே காத்து நின்று, வாலை ஆட்டியாட்டிச் சாப்பிடுகிறது.

கோப்பையைக் கழுவிக் கொண்டு போய் வைத்து விட்டு கலா அப்பாச்சிக்கு அருகிலே வந்தமர்கிறாள்.

"குளப்படி செய்யாமல் சாப்பிட்டு நித்திரை கொண்டு அச்சாப்பிள்ளையாய் இருந்ததெண்டு அப்பாச்சி சொன்னால் நான் பிள்ளைக்குச் சொக்கா தருவேன்."

நேற்று அவள் செய்த குளப்படிகளை அறிந்த அம்மா காலையில் அவளிடம் சொல்லியனுப்பியது திடீரென மின்வெட்டாக அவள் நினைவில் பளிச்சிடுகிறது.

அவள் சோறு முழுவதும் சாப்பிடாமல் கொட்டி விட்டாளே! பொய் சொன்னாலும் அம்மாவுக்குக் கோபம் வரும்.

"அப்பாச்சி, அப்பாச்சி" அவள் தயக்கமும் கெஞ்சலு மாக அப்பாச்சியை அழைக்கிறாள்.

"என்ன மேனை சொல்லடா."

"நான் கொஞ்சச் சோறுதானே ஜோனுக்குப் போட்டனான். இன்டைக்குக் கனக்கச் சாப்பிட்டிட்டு கொஞ்சந்தான் கொட்டினதெண்டு அப்பாவிட்டைச் சொல்லுங்கோ."

"ஏன் மேனை?"

"அப்பதான் அம்மா சொக்கா தருவ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி" அப்பாச்சி சிரித்துக்கொண்டே சம்மதிக்கிறார்.

"அச்சா அப்பாச்சி நல்ல அப்பாச்சி." கலா அப்பாச்சியைக் கட்டியணைத்து முத்தமிட்டுவிட்டுக் குதிக்கிறாள்.

தலைவாசலில் இருந்த கதிரையில் கலா போய் அமர்ந்து கொள்கிறாள். இப்போது என்ன செய்யலாம்? வீட்டுக் கணக்குச் செய்ய வேண்டும். அவள் அப்பியாசப் புத்தகத்தை எடுத்துக் கணக்குகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

முன்பெல்லாம் வீட்டிலே போய் அம்மாவிடம் கேட்டுத்தான் அவள் படிப்பது வழக்கம்.

அம்மா வேலையால் வந்தது முதல் "அம்மா வீட்டு வேலை ரீச்சர் தந்தவ செய்யவேணும்" என்று அம்மாவின் பின்னாலேயே திரிவாள்.

"போயிருந்து படியுங்கோ. பிறகு வந்து தெரியாததைச் சொல்லித்தாறன்" இந்தப் பதிலை மூன்று நான்கு தடவைகள் கூறிக் கூறிப் பொறுமையிழந்த பின் "நானில்லாமல் படிக்க ஏலாதே. போயிருந்து படியென்று எத்தனை தரம் சொல்லுறது. படிக்கக் கள்ளம். சும்மா படிக்க வேணுமென்டு எனக்குப் பின்னாலை தரியிறதுதான்" என்று அம்மா எ:ந்து விழுவாள்.

"எனக்குத் தனிய இருந்து படிக்கப் பயமாயிருக்கும்". கலாவின் கண்களே அவளின் பயத்தை பிரதிபலிக்கும்.

"எப்பவும் இதொரு நல்ல சாட்டு. இந்த மனிசன் பாடம் சொல்லிக் குடுக்காட்டிலும் பக்கத்திலையாவது இருக்காது. என்ரை தலைவிதி. சரி சரி. தங்கச்சியும், தம்பியும் இருக்கினம்தானே. போய்ப் படியுங்கோ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் வற்புறுத்தலுக்காகத் தங்கையுடனும் தம்பியுடனும் போயிருந்தாலும் கேட்கும் சிறுசப்தங்கள் கூட கள்ளன் வரும் ஒலியாகப் பிரமை தட்ட, கணக்கும் புரியாமல் எழுத்தும் புரியாமல் அவள் போராடும்போது, தம்பி புத்தகத்தை இழுத்துப் போராடத் தொடங்கி விடுவான்.

இந்த அமர்க்களத்தினிடையே அம்மா அவர்களுக்கு உணவூட்டும் நேரத்தையே பாடம் சொல்லிக் கொடுக்கும் நேரமாக்கிக்கொண்டு வருவாள்.

கலா படிக்க ஆரம்பிக்க, "அம்மா நான் எழுதின ஆனாவைப் பாருங்கோ" என்று மாலாவும் ஏதோ எழுதிக் காட்டத் தொடங்குவாள்.

"அம்மா பஞ்சில் பஞ்சில்" என்று பென்ஸிலைப் பறித்துக் கொள்வான் தம்பி. பென்ஸிலும் புத்தகமும் கொடுக்காவிட்டால் வீடே அதிரக் கத்தி அழத் தொடங்குவான் அவன்.

அவர்களைச் சமாளித்து அந்த ரகளையில் இரண்டு தரம் கோபித்துத் திட்டி, இப்படித்தான் அம்மா பாடம் சொல்லித்தருவது இருக்கும்.

"இந்தப் பிள்ளைக்கு ஆறுதலாயிருந்து பாடம் சொல்லிக் குடுக்கக் கூட நேரமில்லை. பொழுதுவிடிஞ்சு பொழுதுபட்டால் இருக்கக்கூட நேரமில்லாமல் என்ன வாழ்க்கையோ?" அம்மா இப்படி அடிக்கடி அலுத்துக் கொள்வாள்.

அவளுடைய வகுப்பில் மலர்வேந்தன்தான் கெட்டிக் காரன். அவனுடைய அம்மா ஒவ்வொரு நாளும் பாடம் சொல்லிக் கொடுப்பாவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலாவும், தம்பியும் உறங்கிய பின் அம்மா ஓய்வாக இருக்கும்போது சில வேளைகளில் பாடம் சொல்லித் தருவது அவளது நினைவில் வருகிறது. "அம்மா வீட்டிலேயே இருந்தா ஒவ்வொரு நாளும் அப்பிடிச் சொல்லித்தருவா.

ஆனால் அச்சாச்சட்டை சொக்கா, பிஸ்கற் எல்லாம் அம்மா வேலைக்குப் போறதாலை தானே கிடைக்குது?

கலா அப்பியாசப் புத்தகத்தை மூடி வைக்கிறாள்.

"குளப்படி செய்யாமல் சாப்பிடு. நித்திரை கொண்டு அச்சாப்பிள்ளையாய் இருந்ததெண்டு அப்பாச்சி சொன்னா நான் பிள்ளைக்குச் சொக்கா தருவேன்."

அம்மாவின் சொற்கள் நினைவிற்கு வரவே, அப்பியாசப் புத்தகத்தை மீண்டும் திறக்கிறாள். கணக்குகளைச் செய்துவிட்டு நல்ல பிள்ளையாய் உறங்கி எழும்ப வேண்டும். கலா பரபரவென்று கணக்குகளைச் செய்கிறாள். தலைவாசலில் படுத்திருந்த அப்பப்பாவின் பக்கத்தில் போய் அவளும் படுத்துக் கொள்கிறாள். அம்மா வந்த உடனை நல்ல பிள்ளையாய் இருந்ததெண்டு சொல்லவேணும். கணக்கு, சொல்வதெழுதல் எல்லாம் சரிவாங்கினது சொல்ல வேணும். மற்றது. நெருப்பு பெட்டியிலை செய்த கதிரை மேசைகளை ரீச்சர் வடிவெண்டு சொன்னதைச் சொல்ல வேணும். கலா மனம் நிறைந்த ஆசைக் கனவுகளுடன் உறங்கிவிடுகிறாள்.

வீட்டிற்குப் போனது முதல் அம்மாவின் வரவை அவள் எதிர்பார்க்கிறாள்.

"மாலா குழப்படி செய்தீங்களெண்டால் அம்மாதாற சொக்காவிலை உங்களுக்குத் தரமாட்டன்". மாலா குழப்படி செய்தபோது கலா அவளை மிரட்டவும் அந்தச் சொக்கா நினைவுதான் பயன்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா வந்து உடைமாற்றி சமையலறைக்கும் போய்விட்டாள். கலாவின் ஆவல் கரை கடந்துவிட்டது. அம்மா வந்த சிறிது நேரத்திலேயே 'கலா இண்டைக்குக் குழப்படி செய்தனீங்களா?' என்று கேட்டவுடனேயே அவள் தன் சாதனைகளைக் கூறி முடித்திருந்தாள். ஆனால் சொக்காவை அம்மா மறந்துவிட்டாவோ?

கலா சமையலறைக்குள் எட்டிப் பார்க்கிறாள். அம்மா அடுப்பிலிருந்த கேத்திலை இறக்கிவிட்டு அடுப்பில் பானையை வைக்கிறாள்.

அம்மம்மா கேத்திலை எடுத்து அருகே வைத்துக் கொண்டு அளவாக மாவை எடுத்து இடியப்பத்திற்கு மாக் குழைக்கத் தயாராகிறார்.

"அம்மா"

"என்ன கலா"

"அம்மா இண்டைக்கு நான் நல்ல பிள்ளையாய் இருந்தனான் சொக்கா தாறனென்ட நீங்கள்". கலா மகிழ்வும், தயக்கமும், எதிர்பார்ப்புமாகச் சொற்களை உதிர்கிறாள்.

"சொக்கா, சொக்கா. எந்த நேரமும் சொக்கிளேற்றும் விசுக்கோத்துமாய் இதுகளுக்குச் செல்லம் மெத்திப் போச்சு". அம்மம்மா பட்டென்று சொல்கிறாள்.

"அம்மா..." அம்மம்மா சொல்லி முடிக்கு முன்பே கலா வீரிட்டாள். கேத்திலிலிருந்த கொதி நீரை மாவிலூற்றும் போதே அம்மம்மா அவளது மனதிலும் ஊற்றி விட்டாளே!

"நான் என்ன செல்லம்? இந்துமதிக்கும், நாவரசனுக்கும் மாதிரி எனக்கு அம்மா வந்து பள்ளிக் கூடத்திலையிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிக்கொண்டு வாறவவே? ஒருநாள்கூட ஆசைக்கு வரமாட்டா. உடுப்பு மாத்தி, சாப்பாடு தாறவவே? மலர்வேந்தன்ரை அம்மா மாதிரி ஒவ்வொரு நாளும் பாடம் சொல்லித் தாறவவே? சொக்காவும் வாங்கித்தரக் கூடாதென்றால் ஏன் வேலைக்குப் போறவ?"

அடுப்பிலிருந்த தீயின் தகிப்பிற்கு ஈடுகொடுக்க முடியாது பொங்கிக் குபுகுபுவென்று வழிந்த பாலைக் கூடக் கவனிக்க மறந்து, தன் பிஞ்சுமனத்து ஆசைகளின் தகிப்பைத் தாழாது பொங்கி வந்த ஏக்கங்களின் பிரதி பலிப்பாகக் கண்ணீர் பிரவகிக்க நின்ற தன் மகளின் உணர்ச்சிகளில் இலயித்து, அவளை அணைத்துக் கொண்டாள் கலாவின் அம்மா.

தன்தாயின் நெஞ்சில் முகம் புதைத்து விம்மிய அந்தக் குழந்தையின் விம்மல்கள் "உணவும் உடையும் கிடைக்கா விட்டால் மட்டுமே ஒரு குழந்தை ஏங்கி அழுமென்றில்லை" என்று அந்தத் தாயின் உள்ளத்திற்குக் கூறினவோ?

*வீரகேசரி 1982*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பௌர்ணமிகள்

இருளின் மறைவில் வேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டு மெல்ல மெல்லத் தன்னை வெளிக் காட்டி, யுத்த மொன்றிற்குத் தயாராவது போல் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை தானென்றாலும் சில முக்கிய வேலைகளிருந்ததால் காரியாலயம் செல்ல வேண்டியிருந்தது. மூளாயிலிருந்து யாழ்ப்பாணஞ் செல்ல நேரமாகுமாகையால் அதிகாலையிலேயே நான் புறப்பட்டுவிட்டேன். பஸ் வருவது கண்ணிற்பட்டதும், தரிப்பிடத்திற்குச் செல்லலாமென்ற எண்ணத்துடன் கேற்றருகில் நிற்கிறேன். பஸ்ஸைக் காணவில்லை.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையிலிருந்து ஒரு கார் வீதியிலேறி வருகிறது.

"ஐயோ என்ரை ராசா என்னை.."

இதயத்தைக் கலங்கவைக்கும் ஒரு குரல் காருடன் என்னைக் கடந்து மறைகிறது.

யாரோ வைத்தியசாலையில் இறந்திருக்க வேண்டும். என்னுள் ஓர் ஊகம். மனதிலே இனம்புரியாத சஞ்சலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இளங்காலையே மரண ஓலத்துடன் தொடங்கியது மனதினுள் என்னவோ போல...

'கடவுளே! பிள்ளையாரே!' வீதியின் மறுபுறத்தை நோக்கி மன ஆறுதலுக்காக மூளாய் சித்தி விநாயகரை மனதினுள்ளே கூவி அழைக்கிறேன். என் தோழி சக்தி, வீட்டிலிருந்து என்னைப் பார்த்துவிட்டு வெளியே வருகிறாள்.

"என்ன ஈஸ்வரி வேலைக்கா?"

"ஓமோம்."

"என்ன யோசித்துக்கொண்டு நிற்கிறீர்?"

"இல்லை. பஸ்ஸைக்காணேலை. முதல் 82 பஸ் வந்தால் நல்லது. சுழிபுரத்தாலை 86 போகாது. 82 பஸ்ஸெண்டால் சுழிபுரத்திலை மயூரனும் வருவார். அங்காலை நடந்து போகத் துணையாயிருக்கும்."

"மெயின் ஸ்ரீற்றுக்கு நடக்கிறனீரே?" சக்தியின் கேள்வி.

"பஸ்ஸுக்குக் காக்கிறநேரம் வேறை ஆக்களும் வந்தால் நடக்கலாம்."

நான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பொன்னாலைப் பாலத்தில் பஸ் வருவது தெரிகிறது.

"பஸ் வருகுது; அப்ப நான் வாறன்." நான் சக்தியிடம் விடைபெற்றுக்கொண்டு பஸ்தரிப்பிடத்தை நோக்கி விரைகிறேன்.

நல்லவேளை 82 தான் முதலில் வந்திருக்கிறது. பஸ்ஸில் அதிகம் கூட்டமில்லை. கிடைத்த ஓரிடத்தில் அமர்ந்து கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் காளுவன் சந்தியைக் கடக்கும்போதே மயூரன் வந்து நிற்பாரா என்பதை அறிய என் கண்கள் அலாவுகின்றன. காந்தி கடையில் அவர் நிற்கிறார்.

"குட்மோர்னிங் மிஸ்". சிரித்தபடி மயூரன் வந்து எனக்குப்பின் உள்ள ஆசனத்தில் அமர்கிறார்.

"குட்மோர்னிங் நீங்கள். இந்த பஸ்சைப் பிடிப் பீங்களோ என்னவோ எண்டு யோசிச்சன்."

"நான் ஒரு நாளும் லேற்றாகிறதில்லையே." அவர் சிரித்துக்கொண்டு கூறுகிறார்.

அது உயிரற்ற சிரிப்பு. ஆள் உருமாறி, உடல் மெலிந்து சோகமாய்;

அவரது ஒரேயொரு அன்பு மகளின் பிரிவு அவரை அவ்வளவு தூரம் பாதித்திருந்தது. காரியாலய வேலையில் மட்டும் ஈடுபாடில்லாமலிருந்தால் அவர் பைத்தியமே யாகி இருக்கக்கூடும்.

மயூரன் தன் மனைவி பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, தாய் தகப்பனற்ற தன் சகோதரர்களுக்கும் பொறுப்பாக இருப்பது எனக்குத் தெரியும். அவருக்கு ஏதாவதென்றால் அந்தக் குடும்பத்தின் கதி?

பஸ் சங்கானை பஸ் நிலையத்தில் நிற்கிறது. அந்தக் காலையின் சுறுசுறுப்பு சந்தையும் கடைகளும் சூழ்ந்த அவ்விடத்தில் துல்லியமாகத் தெரிகிறது.

"பூரணை விரதத்துக்கு மரக்கறி வாங்கி, நாலு கறியள் வைச்சு, வீட்டிலை சாப்பிட வேணுமெண்டு என்ரை மிஸிஸ் சொன்னவ. நான் இண்டைக்கு வேலைக்கு வெளிக்கிட்டது அவவுக்கு அவ்வளவு விருப்பமில்லை. சந்தையைப் பார்த்தவுடனை அவ சொன்னது நினைவுக்கு வருகுது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூரன் கூறியதுந்தான் பௌர்ணமியின் நினைவு எனக்கு வருகிறது. "அடுத்த பூரணைக்கு நல்லூர் மஞ்சமாயிருக்கும். அது ஆடிப்பூரணை. அடுத்து ஆவணிப் பூரணை. இல்லையா?"

"மஞ்சத்துக்குப் போற யோசனையோ?"

"இல்லை மயூரன். இப்ப எனக்கு நல்லூர் மஞ்சமெண்டால் அழகிய மஞ்சத்திலே ஒளிவிளக்குகள் ஒளிர முருகன் பவனி வருகிற காட்சி நினைவுக்கு வாறேல்லை. பஸ் ஒண்டு எரிகிற ஒளியிலே உயர்த்திய கைகளோடு ஓடுகிற ராஜாவை துப்பாக்கியோடை ஒருவன் நிண்டு சுட்டு வீழ்த்துகிற காட்சிதான் நினைவுக்கு வருகிறது."

என் காரியாலய சகா ராஜாவின் நினைவுப் படம் மனதில் விரிந்து ஓர் உணர்ச்சிக் குமுறலை ஏற்படுத்த என் கண்கள் மெல்லக் கலங்குகின்றன.

அணிசேரா நாடுகளின் மகாநாடு இங்கு நடந்த நாட்கள். அவர்களின் கவனத்தைக் கவர அந்த பஸ் திசை திருப்பப்பட்டுத் தீ மூட்டப்பட்டது. நல்லூர் மஞ்சத்திற்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த, ஒரு பாவமும் அறியாத ராஜா அவ்விடத்தில் சுடப்பட்டு உயிரைக்கொடுத்துப் பழியைச் சுமக்க நேரிட்டது. அந்தப் பழியைச் சுமப்பதற்காகப் பிணமான பின் அவன் கை துப்பாக்கி ஏந்தியதாகக்கூட யாரோ கூறினார்கள்.

பிணமானபின் கொடுக்கப்பட்ட இந்தத் துப்பாக்கியை அவர் மறுபிறவி எடுக்கும்போது கைகளிலேயே கொண்டுவந்து விடுவாரோ என்னவோ?

"உண்மைதான் மிஸ்ர. ராஜாவை எவ்வளவு அநியாயமாய்ச் சாகக் கொண்டாங்கள். அவரைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டவனுக்கு சட்டம் தண்டனை கொடுக்க சட்டத்தை நடைமுறைப்படுத்திறவை மாலை மரியாதை செய்ததாய்க் கூடப் பேப்பரிலை இருந்தது".

மயூரன் ராஜாவை நினைத்து வேதனைப்பட்டார்.

"ராஜாவுக்கு நடந்தது எங்களுக்கு நடக்காதெண்டது என்ன நிச்சயம்? எங்கடை ஸ்தாபன ஊழியர் ஒருத்தருக்கு அங்காலை ஒண்டு நடந்திருந்தா நாங்கள் கூட வேலைநிறுத்தஞ் செய்திருப்பம். இங்கை நடந்ததாலை.." எங்கள் இயலாமையை எண்ணி ஏக்கத்துடன் கூறுகிறேன்.

"நாங்கள் அப்படி விட்டது சரியான பிழை மிஸ்", மயூரன் உணர்ச்சி வசப்பட்டு ஆட்காட்டி விரலை அசைத்து கையை ஆட்டிக்கூறியபோது, ராஜா இறந்த செய்தி கிடைத்ததுமே அவர் அதற்குத் தொழிற்சங்க ரீதியில் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென இதேபோல் உணர்ச்சி வசப்பட்டு வாதாடியது என் நினைவிற்கு வந்தது. ஆனால், வலிமை கொண்டெழக் கூடிய அந்த வர்க்க உணர்வுகள் எம் நாட்டில் வெகு சாதுரியமாக, மொழி, மதம் என்ற வாள்களால் அறுக்கப்பட்டுக் கிடந்ததை என்னால் அன்றுதான் புரிந்துகொள்ள முடிந்தது.

பஸ்ஸினுள் பரவிய ஒரு பரபரப்பு எங்கள் உரையாடல்களையும், உணர்வுகளையும் ஊடறுக்கிறது.

பஸ் ஓட்டுமடத்தடியில் நிற்பதைக் கவனிக்கிறேன்.

"தின்ன வேலியிலை ராத்திரி ஜீப்பை பிரட்டிப் போட்டாங்களாம். கனபேர் சரியாம்." பஸ் கலகலக்கிறது.

"அப்பிடிச் செய்யேலுமே?" அந்த முதலாவது கண்ணிவெடிச் சம்பவத்தின் அறிமுகத்தை நம்ப முடியாத நிலையிற் பலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் வந்த வழியே திரும்புகிறது.

"போறது நல்லதில்லையாம். இருக்கிற கோபத்திலே என்னவும் நடக்குமாம்."

பயம் மெல்ல மனதைச் சூழ்வது எனக்குப் புரிகிறது. வீடு போய்ச் சேர்ந்தால்தான் நிம்மதி என்பதுபோல் உணர்வு.

"என்ன யோசிக்கிறீங்கள் மிஸ்?"

"வீட்டை போறதுக்கிடையிலை செக்கிங் எண்டு வந்தாலும்..." திகிலும் பயமும் என் குரலிலேயே குந்தியிருக்கின்றன.

"ஒண்டும் நடக்காது. பயப்பிடாதையுங்கோ."

பஸ் ஓடாமல் ஊர்வதுபோல் ஓர் அந்தரம்.

"இன்னும் மானிப்பாயே வரேல்லை." மனம் அவசரப்படுகிறது.

பஸ் ஒரு குலுக்கலுடன் நிற்கிறது!

ஏன்? என்ன? அவங்கள் தான்!

சில்லிட்ட ஓர் அமைதி! எல்லோருமே என்னைப் போலப் பயத்தின் பிடியில் மனம் மட்டுமல்ல, கையும் நடுங்குவது எனக்குப் புரிகிறது.

"பயப்படதேங்கோ மிஸ். வழக்கமான செக்கிங்தான். ஐடென்ரிகாட் இருக்குத்தானே?" மயூரன் தெம்பூட்டுகிறார்.

அந்த தெம்பு காதாலே போய் மனதில் இருக்காமல் மறுகாதால் வெறியேற, அனைவருடனும் நானும் இறங்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் அனைவரும் வரிசையாக நிறுத்தப்படு கின்றனர்.

"பொம்பிளை எல்லாம் போ... ம்... யண்ட யண்ட..."

மற்றப் பெண்களுடன் நானும் நடக்கிறேன். எங்காவது ஒதுங்கிவிட வேண்டுமென்ற உத்வேகம். ஓட நினைக்கிறேன். அடியெடுத்து வைக்கவே முடிய வில்லையே! ஒழுங்கை யொன்றுள் திரும்புகின்றேன்.

மயூரன் வரக்காணவில்லையே. அவர்களை ஏன் வைத்திருக்கிறார்கள்? எங்களை ஏன் பஸ்ஸினுள் ஏறவிடவில்லை? அந்தக் கேள்விகள் அப்போதுதான் மெல்லத் தலைகாட்டிய வேளையில்...

"பட பட பட் பட்..."

இயந்திரத் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்! அதேயிடத்திலி ருந்து தொடர்ந்து வரும் அவலக் குரல்கள்...

அப்படியென்றால்... அதுதான் அந்தக் கேள்விகளுக்குப் பதிலா?

கைகளைத் தூக்கியபடி நின்ற மயூரன், அவரருகே நின்ற பாடசலைப் பையன்கள், மற்றவர்கள்...

ஆவணிப் பௌர்ணமியுடன் ஆடிப் பௌர்ணமியும் என் மனதில் துயர ஓவியங்களை உதிரத்திலே தீட்டத் தொடங்குகிறது!

*முரசொலி 1987*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதே நாடகம் அந்த மேடையில்

நீண்ட காலத்திற்குப் பின் கொழும்பிற்கு வந்திருக்கிறேனென்பது காலி வீதியைக்கடக்க நான் பட்ட அவஸ்தையிலே எனக்குப் புரிந்தது.

"சுமி அதே இடத்திலே தான் வேலை செய்கிறா என்று நிச்சயமாகத் தெரியும் தானே. இடமாற்றம் கிடைத் திருந்தால் வீட்டை வாடகைக்குக் குடுத்துட்டுப் போயிருப்பினம்." என் கணவர் தன் சந்தேகத்தை வெளியிட்டார்.

"சுமி அதேயிடத்திலே வேலை செய்கிறா. எனக்கு நல்லாத் தெரியும்." நானும் அதே நிறுவனத்தின் கிளையில் பணிபுரிவதால் நான் திடமாகக் கூறினேன்.

"இருந்தின மெண்டால் உதவி செய்வினம். லக்ஷ்மனும், சுமியும் மாதிரி உதவி செய்யிற ஆக்களைக் காணேலாது. நான் வீட்டுக்கு அந்தரிக்கேக்கை உதவி செய்தினம். வீட்டிலை ஒண்டாய் இருக்கேக்கையும் எவ்வளவு உதவி" என் கணவர் முன்பு அவர்கள் செய்த உதவிகளை நினைவு கூர்ந்தார்.

"சுமி என் பல்லைக்கழகத் தோழி. வேலையும் இருவருக்கும் ஒரே நிறுவனத்திலே கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமான பின்புதான் எனக்கு வேலை கிடைத்தது. என் கணவரும் கொழும்பில் வேலை பார்த்து வந்தார். எனக்கும் அங்கு வேலை கிடைத்ததும் வீடு தேடுவது பெரும்பாடாகி விட்டது. அப்போதுதான் சுமி தன் வீட்டிலேயே ஒரு பகுதியை வாடகைக்குத் தர முன்வந்தாள்.

நீண்ட காலம் ஒன்றாக வாழ்ந்த நாங்கள் அவர்களது அன்பும், பண்பும் காரணமாக நல்ல நண்பர்களாகி இருந்தோம். இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் சென்ற பின்கூட இடைக்கிடை சுமியும் நானும் கடிதம் மூலமும், தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு வந்தோம்.

“நிச்சயமாக அவை உதவி செய்வினம். இப்படி உதவி செய்யத் தொடங்கித்தான் சுமி என் தோழியானவள்.” நான் எமது நட்பின் ஆரம்பத்தை நினைத்துக் கொள்கிறேன்.

பல்கலைக் கழகத்திலே படித்த காலத்தில் மாணவிகள் சேர்ந்து ஒரு நாடகத்தைத் தயாரித்துக் கொண்டிருந் தோம். அன்று விடுதியில் எனது அறையில் நாடகத்தைப் பழகிக் கொண்டிருந்தபோது சுமி அறையின் பின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

அவளுடைய படிப்புக் குழம்பிவிட்டதாக ஏதாவது கூற வந்திருக்கிறாளோ என நான் பயந்தேன். அவளோ நடிப்பதை வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள். பின்னர் நாடகக் கதையைக் கேட்டு புரிந்துகொள்ள முற்பட்டாள். அப்போதுதான் அவளுக்கும் நாடகத் துறையில் ஈடுபாடு உண்டு என்பது தெரியவந்தது.

நாங்கள் நாடகம் பழக இடவசதியின்றி இடர்ப் படுவதைக் கண்ட அவள், விடுதி வார்டனிடம் சென்று, பொது அறையில் நாடகம் பழக அனுமதி பெற்றுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தாள். இவ்வாறு அந்த நாடகம் அரங்கேறப் பல உதவிகள் செய்தே எம் நட்பை வளர்த்துக் கொண்டவள் அவள்.

பழைய நினைவுகளுடன் சுமியின் வீடுவரை வந்துவிட்டேன். அழைப்பு மணியை அழுத்தியதும் கதவைத் திறந்தவள் சுமிதான். எதிர்பாராத எங்கள் வரவு அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அவள் எங்களை வரவேற்று, இருக்கவைத்து சுகநலம் விசாரிக்க ஆரம்பித்தபோது அவளது கணவன் லக்ஷ்மனும் வந்திருந்து உரையாட ஆரம்பித்தார்.

இடையில் ஓர் இளைஞன் உள்ளே வந்தான். சுமித்ரா அவனை அழைத்து அறிமுகப்படுத்தினாள்.

"இவன் தான் சரத். இவர்கள் ஜெயம் அங்கிளும், மாலா அன்ரியும். உனக்கு நினைவிருக்கிறதா? முன்பு எங்கள் வீட்டில் இருந்தவர்கள்."

சுமியின் மகனின் வளர்ச்சி அடையாளம் காண முடியாது கஷ்டப்படுத்தியது.

பட்டென்று எடன் மகன் சுதனின் நினைவு என்னிடம் ஓடி வருகிறது.

"அன்ரி, சுதன் வரவில்லையா?" சரத்திற்கும் தன் நண்பனின் நினைவு உடன் வந்தது போலும்.

"என்ன பதிலைச் சொல்லலாம்?"

உண்மையைச் சொல்லத்தானே வேண்டும். சுமியும் அவளது குடும்பதினரும் அதை எப்படி எடுத்துக் கொள்வார்களோ?

இடையே ஏற்பட்ட கால இடைவெளியும், அதனுள் ஏற்பட்ட கோலங்களும் அவர்களது மனங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும் ஏற்படுத்தியிருக்குமோ?

பதிலளிக்க நான் தயங்கித் தடுமாறினாலும் - அந்த நினைவு தந்த வேதனை என் கண்களில் வெளிப்பட்டு விட்டது.

"ஏன் அழுகிறீர்கள் மாலா? என்ன நடந்தது?" சுமி என் கண்ணீரைக்கண்டு பதறிவிட்டாள்.

"ஒன்றுமில்லை. சுதன் பூசாவில் இருக்கிறான். அதுதான்" என் கணவர் கண்ணீரின் காரணத்தைக் கூறினார்.

"பூஸாவிலா? ஏன்?" லக்ஷ்மண் பதற்றத்துடன் கேட்டார்.

"புலியாகி விட்டானா?" சரத் இயல்பாகவே எழக்கூடிய சந்தேகத்தை வெளியிட்டான்.

"அப்படியொன்றும் இல்லை. ஆனால், இப்ப நடந்த பிரச்சினைகளில் பிடித்துவிட்டார்கள்." நான் விம்மலும் பொருமலுமாக கூறினேன்.

"ஒரு தொடர்புமில்லாமலா?" சுமி ஆச்சரியப் பட்டாளா?, சந்தேகப்பட்டாளா? என்றெனக்கொரு சந்தேகம்.

"உங்களுக்கு தெரியாமல் -ஏதாவது..." லக்ஷ்மன் தயக்கத்துடன் இழுத்தார்.

"இல்லை. அப்படியொன்றுமில்லை. என்ரை பிள்ளையைப் பற்றி எனக்குத் தெரியும்" வேதனையை மிஞ்சிய ஒரு சினம் எனக்குள் தலையெடுக்கின்றது.

இப்ப அங்கை நடக்கிறது உங்களுக்குத் தெரியாது. அதை நாங்கள் சொல்லி உங்களுக்கு விளங்காது. நீங்கள் அனுபவித்தால் மட்டும் தான் விளங்கும்." என் கணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஆரம்பித்து ஒரு தலையாட்டியின் தலையாட்டலுக்கு என் மகன் பலியானதை விபரித்தார்.

"நீங்கள் விளங்கப்படுத்தி விடுவிக்க முயலவில்லையா?" சுமி கேட்டாள்.

"நாங்கள் விளங்கவைத்து எவரும் புரிந்துகொள்ள மாட்டேனென்கிறார்கள்."

"நீங்கள் இதைப் புரிந்துகொண்டு இங்கே விளங்கப் படுத்தி, அவனை விடுவிக்க வேண்டும். அதைத்தான் உங்களிடம் நாங்கள் இப்ப எதிர்பார்க்கிறம்."

"உங்களால் இந்த உதவியைச் செய்ய முடியுமா? அப்பாவி இளைஞர்கள் இப்படிப் பழிவாங்கப்படுவதைத் தடுக்க ஏதாவது செய்யமுடியுமா?" அவர்களிடம் இதைக் கேட்கும்போதே என்னையும் மீறி என் துக்கம் பீறிட்டுக் கண்ணீராக வடிகிறது.

சுமி என்னைத் தேற்றி, எப்படியும் சுதனை மீட்டுத் தருவதாக ஆறுதல் கூறுகிறாள். லக்ஷ்மனும் சுமியும் மாறிமாறி ஊட்டிய நம்பிக்கையின் பலத்துடன் நாம் விடைபெறுகிறோம்.

நாங்கள் விளங்கவைத்துக் கிடைக்கும் பயனைவிட அவர்கள் புரிந்துகொண்டபின் அதை விளங்க வைப்பதாலே கூடியபலன் கிடைக்கும் என நாம் கருதினோம்.

உண்மைதான். பல்கலைக் கழகத்தில் நாம் நாடகத்தை மேடையேற்றியபோதுகூட அப்படித்தானே நடந்தது.

நாட்டிற்கேற்ற முற்போக்குக் கருத்துகள் கொண்ட அந்நாடகம் தமிழ் மாணவர் மத்தியில் அரங்கேறி அவர்கள் வரவேற்பையும் பெற்று வெற்றியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், மறுபகுதி மாணவர்கள் - அக்கருத்துக்களைப் புரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதைப் புரிந்து கொண்ட சுமியோ அக்கருத்துக்கள் சிங்கள மாணவர் மத்தியிலும் பரவவேண்டுமென விரும்பினாள்.

அதே கதையும் கருத்தும் கொண்ட அதே நாடகம்; ஏற்கனவே எம்மால் கையாளப்பட்ட அதே மேடை நெறியாள்கை; எம்மைத் தொடர்ந்ததால் அவளுக்கு இவை இலகுவில் கிட்டின. எமக்குக் கிட்டாத - எம்மைப் புரிந்து உதவிய அவளால் மட்டும் சிற்சில சமயம் சிறிதளவே எமக்குக் கிட்டிய மேலிடத்து உதவிகள் அவளுக்குத் தாராளமாக கிட்டின. மேடை வசதி, வேண்டிய உபகரணங்களின் வசதி போன்றவையும் அவளுக்கு நிறையக் கிடைத்தன. இதனால் அந்த நாடகம் எங்களைப் போலச் சிரமங்களை எதிர்நோக்காமலே வெற்றிகரமாக மேடையேறியது.

அகப்பை பிடிப்பவன் ஓரவஞ்சகனாயிருந்தால் இப்படித்தானிருக்கும் என நான் எனக்குள் வேதனைப் பட்டுக்கொண்டேன்.

ஆனால் ஒன்று. அந்த நாடகம் அவளால் அரங்கேறியதால் ஒரு பெருந்தொகை மாணவர் களிடையே அக்கருத்துகளின் தாக்கமேற்பட்டது.

"என்ன பேசாமல் வாறீர்? பிள்ளையார் கோவிலடி யாலை போறம். போய் கும்பிடுகிற யோசனையில்லையே?" என் கணவரின் குரல் பழைய நினைவுகளிலிருந்து என்னை மீட்டது.

சுமி கூறியவாறு நாளை மறுநாள் அவளது வீட்டிற்குச் செல்லும்போது சுதனைப் பற்றிய விபரமும், அவனது விடுதலை பற்றிய நிச்சயமும் கிடைக்கவேண்டுமென வேண்டிக்கொண்டே கோவிலுனுள்ளே சென்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு இரண்டு நாட்களைப் பிடித்துத் தள்ளிய பின் சுமியின் வீட்டிற்கு ஆவலுடன் நாங்கள் சென்றோம்.

அழைப்பு மணியை அழுத்தியபோது வேலைக்காரப் பெண் கதவைத் திறந்தாள்.

"லக்ஷ்மண் இருக்கிறாரா?"

நாங்கள் விசாரித்துக் கொண்டிருக்கும்போதே அவர் வருகிறார். மகிழ்ச்சியுடன் எமக்கு நல்ல முடிவு கூற வருவாரென எதிர்பார்த்த என் மனம், ஈயாடாத அந்த முகத்தைப் பார்த்ததுமே நம்பிக்கைத் துகள்களை உதறி எறிந்துவிடுகிறது.

"வாருங்கள், இருங்கள்" என உபசரிக்கிறார். முகத்தில் அதே இறுக்கம்.

"சுமி, ஜெயம் அங்கிளும், மாலா அன்ரியும்" அவர் உள்ளே பார்த்துக் கூறுகிறார்.

சுமி வந்த வேகத்தில் என்னைக் கட்டிக் கொள்கிறாள். அவள் கண்களில் கண்ணீர்.

அப்படியென்றால்?

என் சுதனுக்கு ஏதாவது..?

ஐயோ!

"என்ன நடந்தது?" என் கணவர் பரபரக்கிறார்.

"சரத்தை நேற்றுக் கைது செய்துவிட்டார்கள்" சுமி விம்முகிறாள்.

"என்ன!"

நாங்கள் அதிர்ந்து விடுகிறோம்! நாங்கள் படும் துன்பம் எங்கள் எதிரியும் படக்கூடாது. அவ்வளவு வேதனையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்துவிட்டோம். அதே வேதனை இவர்களுக்குமா? ஐயோ வேண்டவே வேண்டாம்!

"தடை செய்யப்பட்ட ஒரு கட்சியில் சரத் உறுப்பினராக இருந்தானென்று கூறி.." மெல்லக் கூறி முடிக்கு முன்பே..

"இல்லை இல்லை. பொய் சொல்கிறார்கள். என் பிள்ளையைப் பற்றி எனக்குத் தெரியாதா?" என்று வீரிட்டுக் கதறி அழுகிறாள், சுமி!

நான் அவளை அணைத்துக் கொள்கிறேன். அன்று நாடகத்தில் என் பாத்திரத்தை ஏற்ற சுமி, இன்று நிஜ வாழ்விலும் என் பாத்திரத்தை ஏற்கிறாளா?

அப்படியானால் அந்த நாடகங்கள் போல.. நான் சிந்தனையில் மூழ்குகிறேன்.

*வீரகேசரி 1987*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்ப்பவாதம்

"இண்டைக்கு வேலைக்குப் போறதில்லையே? மணி ஆறரையாகுது எழும்புங்கோவன்." மனைவி சித்திராவின் குரல் கேட்டுக் கண்விழிக்கிறான் சுதாகரன்.

ஓ!.. வேலைக்கு வேளிக்கிட வேண்டும் என்ற நினைப்பு வரும்போதே, இன்றைக்கு ஹர்த்தாலெல்லோ என்ற நினைப்பும் இணைந்து எழுகின்றது.

"இன்றைக்குக் ஹர்த்தாலெல்லோ"

"அப்ப வேலைக்குப் போகேல்லையே?" சித்திரா கேட்கிறாள்.

"யோசிச்சுச் செய்வம். முதலிலை கோப்பியைத்தா"

"இந்தாருங்கோ கோப்பி. அதோடை தான் திருப்பள்ளி எழுச்சி பாடவந்தனான். இனி உமாவை எழுப்பவேணும். "உமா, உமா எழும்புங்கோ. பள்ளிக்கூடம் போகவேணுமெல்லே?" மகளை எழுப்பத் தொடங்குகிறாள்.

"அவள் இண்டைக்குப் பள்ளிக்கூடம் போக வேண்டாம். ஹர்த்தாலெல்லே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை அப்பா, இண்டைக்குப் போக வேணும். ஊர்வலத்துக்கு வரச்சொன்னவை" கண்விழித்து உமா பதிலளிக்கிறாள்.

"அதுதான் போக வேண்டாமென்னுறன். உந்த வெய்யில் எல்லாம் திரிஞ்சுபோட்டு காய்ச்சல் வந்தால் என்ன செய்யிறது? அவர்கள் ஹெலிக்கொப்ரரிலை வந்து சுட்டால் என்ன செய்யிறது?" சுதாகரன் சிறிது கோபமாகவும், கண்டிப்பாகவும் கூறுகிறான்.

"சரி. இண்டைக்கு நான் போகேலை. நாளைக்கு நான் பள்ளிக்கூடம் போறன். அவன் ஹெலிகொப்ரரிலை வரத்தேவையில்லை. அங்கையிருந்து ஷெல்லொண்டு தட்டிவிட்டா நான் பள்ளிக்கூடத்திலை செத்துக் கிடப்பன். ஊர்வலத்திற்குப் போய்க் காய்ச்சல் வந்தால்தானே உங்களுக்குக் கஷ்டம். இப்படியெண்டால் சிலவேளை செத்தவீடு கொண்டாடுகிற கஷ்டங்கூட இல்லாமல் செய்து போடுவன்." உமா அப்பாவைவிட உரத்த குரலில் உணர்ச்சிவசப்பட்டுப் பொரிந்து தள்ளினாள்.

"ஓ... நீங்கள் ஊர்வலம் போன உடனை எல்லா நடவடிக்கைகளையும் அவன் மூட்டை கட்டி வைச்சிடுவான். உங்கடை கோரிக்கை எல்லாத்தையும் கேட்டிடுவன். சும்மா, பொம்பிளைப் பிள்ளையள் அடக்க ஒடுக்கமாய் வீட்டிலை இருங்கோவன். அதை விட்டிட்டு என்ன குதி குதிக்கிறியள்?" சுதாகரனின் குரலில் ஏளனமும் கோபமும் இழைந்தன.

"அடக்க ஒடுக்கமாய் இருந்துதான் உயிரே அடங்கி, அடங்கி ஒடுங்கிற நிலைக்குப் போயிட்டம். உங்களைப் போல ஆக்கள் இருக்கிறதாலை தான் நாங்கள் இப்படி இருக்கிறம். உங்களின்ரை காலம் அடங்கி ஒடுங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுது. எங்களின்ரை காலமும் அப்பிடியிருக்க முடியாது." உமா விட்டுக்கொடுப்பதாயில்லை.

"உமா, அப்பாவை எதிர்த்துப் பேசிறியோ" என்று கேட்க எழுந்த நினைவு உமாவின் பேச்சினாலேயே அடங்கிவிட, "நாங்கள் அம்மா, அப்பா, கணவன், பிள்ளை என்று சிந்தித்து சிந்தித்துத்தான் இன்று இந்தக் குடும்பத்துடனேயே கருகிச் சாம்பராகும் நிலைக்கு வந்துவிட்டோம். எங்கள் சுயநல விருப்புத்தான் எங்களை எரித்தழிக்கக் காரணமாகிவிட்டது'' என்ற ஒரு நினைவுடன் சித்திரா குசினிக்குள் நுழைகிறாள்.

"உங்களோடை கதைச்சு வெல்லேலாது. என்னத் தையோ செய்து துலையுங்கோ." சுதாகரன் கோபமும் வெறுப்புமாக கத்திவிட்டு, பற்பொடியை எடுத்துப் பல்துலக்கத் தொடங்குகிறான்.

வீதிப்பக்கம் போய் நிலைமை என்ன மாதிரி இருக்கிறதென்று பார்க்க வேண்டும். சைக்கிளிலை போக இயலுமென்றால் கந்தோருக்குப் போய், கையெழுத்துப் போட்டுவிட்டு வந்து, இந்த வேலிக்கதியால்களைப் போட்டு வரிச்சுப்பிடிக்க வேண்டும்.

சுதாகரனின் மனம் பல் துலக்கி முகம் கழுவும்போதே அன்று செய்யவேண்டிய வேலைகளை அட்டவணைப் படுத்திக்கொள்கிறது.

"நீங்கள் வேலைக்குப் போறீங்ளே? சாப்பாடு கட்டவே-" சித்திரா குரல் கொடுத்தாள்.

"சாப்பாடு கட்டவேண்டாம். நான் உடனை வந்திடு வன். மத்தியானம் சுடச்சுடச் சாப்பிடுவம். இந்த எல்லை வேலிக்கதியால்களும் போடவேணும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுடச்சுடச் சாகிறத்துக் கிடையிலை, சுடச்சுடச் சாப்பிடவும் ஆசை. எல்லை பறிபோகுது, எல்லை வேலிக்குக் கதியால்.." உமா முணுமுணுத்துக் கொண்டு போவது இருவருக்கும் கேட்கிறது.

அவளை எரித்துவிடுவது போல் பார்த்த சுதாகரன் "சாப்பாட்டைப் போடு, சாப்பிட்டிட்டு வேலைக்குப் போக வேணும்" என்கிறான்.

"இன்டைக்குப் போகத்தான் வேணுமே?" சித்திரா கேட்கிறாள்.

"எடிவிசரி, ஒருத்தரும் வேலை செய்யாங்கள். ஏன் வீணாய் லீவிலை போகவிடுவான்? போய் கையெழுத்தைப் போட்டிட்டு வருவம்."

"அதுதானே பார்த்தன், சோழியன் குடுமி சும்மா ஆடுமே." சித்திரா கூறிக்கொண்டே சாப்பாட்டைப் பரிமாற ஆரம்பித்தாள்.

புறப்பட்டு வீதியில் வந்து பார்த்தபொழுது கலகலப்பின்றி ஒரு வெறுமை தெரிந்தது. வாகனங்களைக் காண்பது அரிதாக இருந்தது. சிலர் நடந்தும் சிலர் சைக்கிளிலும் சென்றுகொண்டிருந்தார்கள். சுதாகரனும் சைக்கிளில் கந்தோரை நோக்கிப் புறப்பட்டான்.

"அண்ணை கந்தோருக்கோ?" அருகில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த வாலிபன் கேட்டான்.

"இல்லை.. சும்மா.. ஒரு வீட்டுக்கு" சைக்கிள் வாலிபன் யாராய் இருக்கலாம் என்று சிந்தனை ஓடுகிறது.

'இந்தக் பக்கம் பார்த்த முகமாய் இல்லை. பெடியங்கள் நோட்டம் விடுகிறாங்களோ?' சந்தேகம் மனத்தில் எழ, அதிலிருந்து ஒரு பயம் மனமெல்லாம் வியாபிக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இப்பென்ன வேலையே செய்யப்போறன்' நொண்டிச் சமாதானமொன்று. ஒரு பயமின்மை ஏற்படுத்துவது போன்ற பிரமையை ஏற்படுத்துகிறது.

கந்தோரில் இரண்டு மூன்று பேராக நின்று அரசியலை அலசிக்கொண்டிருக்கிறார்கள்.

வரவுப்பதிவேட்டில் கையொப்பமிட்டதால் கடமையை நிறைவேற்றிய மனநிறைவோடு சுதாகரனும் ஓர் கூட்டத்தில் சேர்ந்துகொள்கிறான்.

"என்ன மச்சான் இண்டைக்கு வேலை செய்யிறது சரியில்லை என்ன?" சுதாகரனின் பேச்சில் ஒரு முடிவு கண்டுவிட்டு வீடு திரும்பும் ஆவல் தொனித்தது.

"மானேஜர் வேலை செய்யச் சொல்லுறார்டா மச்சான்" சுதாகரன் இந்தப்பதிலை எதிர்பார்க்கவேயில்லை.

"அப்படி இண்டைக்கு வேலை செய்யிறது சரியான பிழை மச்சான். இண்டைக்கு நாங்கள் எந்த நிமிஷமும் உயிர் போகலாம் எண்ட நிலையில் இருக்கிறம். இதுக்குக் கூட எதிர்ப்புத் தெரிவிக்காட்டால்..." சுதாகரன் ஓர் போராட்ட வீரனின் உணர்ச்சித் துடிப்புடன் படபடவென்று பொரித்துத் தள்ளுகிறான்.

"நாங்கள் வராமல் இருந்திருக்கலாம். வந்தபடியால் வேலை செய்யவேணுமாம்" நண்பனொருவன் முகாமையாளரின் பக்க நியாயத்தை எடுத்துரைக்கிறான்.

"வந்து கையெழுத்துப் போடாட்டால் ஏன் வரேல்லையெண்டு எக்ஸ்பிளனேஷன் கேட்கக்கூடும். சிலவேளை வேலையே போகக்கூடும் எண்டுதான் வந்தனாங்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதே மாதிரி இவ்வளவு பேரும் வந்த இடத்திலை ஏன் வேலை செய்யேல்ல எண்டு என்னட்டை எக்ஸ்பிளனேஷன் கேட்டால்.." சுதாகரனின் பேச்சை ஊடறுத்து முகாமையாளரின் குரல் கேட்கிறது.

சுதாகரன் திகைத்துத் திரும்புகிறான். அவன் முகாமையாளரை அங்கே எதிர்பார்க்கவில்லை. என்றாலும் சமாளிக்க முயல்கிறான்.

"இல்லை · சேர்.. இன்றைய சூழ்நிலையிலை வேலை செய்ய முடியேல்லை. பெடியங்கள் பொம் எறியலாம்! பிரச்சினைகள் வ்ரலாம் என்று நீங்கள் சொல்லலாம் தானே."

"இண்டைய சூழ்நிலையிலை வேலைக்குவர முடியேல்லை போக்குவரத்து வசதியிலையெண்டு நீங்கள் சொல்லலாந்தானே." முகாமையாளர் அவனது பாணத்தையே அவன் மேல் மீள விடுகிறார்.

சுதாகரன் அதற்குப் பதில் தேடிக் கொண்டிருக்கும்போதே முகாமையாளர் மெல்லச் சிரித்துக்கொண்டே நகர்கிறார். அந்தச் சிரிப்பில் ஆயிரம் அர்த்தங்கள் இருப்பதாகச் சுதாகரனிற்குத் தோன்றியது.

'லீவைக்கூட விட்டுக்கொடுக்காமல் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்கிறானே, இவனது போராட்டமே போராட்டம்' என்று அந்த முகாமையாளர் நினைத்துக்கொண்டு போகிறாரோ என்ற சந்தேகம் தோன்றினாலும், அவன் தன்னை சுதாகரித்துக் கொள்கிறான்.

நேரம் நகர்கிறது. பொறியினுள் அகப்பட்ட எலி போலச் சுதாகரன் பரபரக்கிறான். அவனைப் போலவே மற்றும் பலர். எவருமே எந்த வேலையையும் தொடவில்லை. தங்களிடையே சுற்றிவரும் முகாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளரையும் அலட்சியம் செய்துவிட்டு கதை.. கதை.. ஒரே அலட்டல்!

"மச்சான் சுதாகரன் மெல்ல மானேஜரை கேட்டுப்போட்டுப் போவமே. நீதான் நல்லாய்க் கதைப்பாய் மச்சான்." பூனைக்கு மணிகட்டும் பொறுப்பு சுதாகரனின் தலையில் கட்டப்படுகிறது.

"சேர், நாங்கள் போவமே? பெடியள், தற்சமயம் வந்தாலும் பெரிய கரைச்சல்." சுதாகரன் முகாமையாளரிடம் மெல்லப் பேச்சை ஆரம்பிக்கிறான்.

"என்னப்பா எல்லாத்தையும் பெடியளின்ரை தலையிலை போடுறியள். உங்களுக் கெண்டு சுயமான செயல், சிந்தனை இல்லையே? அவர்கள் வந்தால் நான் கதைக்கிறேன். வந்தனீங்கள் வேலையைச் செய்யுங்கோ" அதே புன்னகையோடு முகாமையாளர் பதிலளிக்கிறார்.

"இல்லை... ஊர்வலங்கள் தொடங்கிவிடும். பிறகு போனால் ஊர்வலத்திற்கு வரச்சொல்லுவாங்கள். இப்ப இங்கை வந்து கூப்பிட்டாலும் பிரச்சனைதானே"

"எந்த நிமிஷமும் உயிர் போற நிலையிலை இருக்கிற நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கத்தானே வேணும்."

முகாமையாளரின் பதில் சுவரில் எறிந்த பந்து மீண்டும் வந்து முகத்தில் அறைந்ததுபோன்று அவனுக்கிருந்தது.

ஒருவாறாக முகாமையாளரின் அனுமதி பெற்று அவர்கள் வீட்டுக்குப் புறப்படுகிறார்கள்.

"என்ன மச்சான் இண்டைக்கு இந்த மனிசன் உடும்புப் பிடி பிடிச்சிட்டுது. நாங்க ஹர்த்தாலண்டு வேலைக்கு வராமல் ஊர்வலம் போக வேணும் எண்டு நினைக் கிறாரோ? அல்லது ஹர்த்தாலண்டு எங்களை கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்விச்சு புறமோசன் எடுக்க யோசிக்கிறாரோ?" சுதாகரன் தன் நண்பனிடம் தன் வயிற்றெரிச்சலைக் கொட்டுகிறான்.

"விபீஷணனாயில்லாமல் கும்ப கர்ணனாயிருந்தாலும் பறுவாயில்லை. சுதாகரனாய் இருக்கத்தான் எனக்கு விருப்பமில்லை." எந்த நேரமும் அவர்களிடையே சுற்றிவரும் அந்த முகாமையாளர் உடன் பதிலளிக்கிறார்.

*மல்லிகை 1986*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருக்கு விலை இல்லை

வயல்வெளி பச்சைப் பசேலென்று விரிந்து கிடந்தது. பயிர் அடர்ந்து வளர்ந்து பசுமையாகக் கிடப்பதுபோல் கண்ணுக்குக் காட்சி அளித்தாலும், களையும் பயிருங் கலந்து கிடப்பது அண்மையில் பார்க்கையிலே புரிகிறது.

களையகற்றும் வேலை அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தது.

மீனாட்சியை சுற்றி நின்று அவளுடன் களை பிடுங்கிக் கொண்டிருந்தவர்களின் கைகள் வேலையில் ஈடு பட்டிருக்க, வாய்கள் ஊர் புதினங்களை அலசுவதில் ஈடுபட்டிருந்தன.

மீனாட்சியால் அவர்களுடன் சேர்ந்து அரட்டை அடிக்க முடியவில்லை. சேறும் வெள்ளமுமாகக் கிடந்த வயலுள் நின்று வேலை செய்தாற்போலும் கால்கள் வலி யெடுக்கத் தொடங்கின. கைகளால் வேலை செய்ய முடியாதபடி அவை விறைக்க ஆரம்பித்தன.

சுரணையற்றுப் போகும் கைகளுக்கு உணர்வு கொடுப்பதற்காக அவள் இடைக்கிடையே விரல்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்டி மடித்து கையை உதறிக்கொண்டாள். இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்துத் தேய்த்துக் கொண்டாள்.

பச்சை உடம்புக்காரி பச்சைத் தண்ணீருக்குள் நின்று வேலை செய்ய வேண்டுமென்றால் இயலாத காரியம்தான்.

பசியும் பட்டினியும், கண்ணீருக்குட் கிடப்பதைவிடத் தண்ணீருக்குள் நிற்கலாமென்ற நிலைக்கு அவளைத் தள்ளிவிட்டிருந்தன.

அவள் பசியுடன் கிடக்கலாந்தான். ஆனால், வயோதிபத்தால் தளர்ந்துவிட்ட அவளது தாயும், இரண்டு வயது நிரம்பிய அவளது மகனும் பசியால் வாடும்போது அவளால் பச்சையுடம்பென்று படுத்திருக்க முடியவில்லை.

காலத்தின் ஓட்டத்தில் எத்தனை மாறுதல்கள் நடந்துவிடுகின்றன.

இது இரண்டாவது பிரசவம். முதலாவது மகன் தவம் பிறந்தபோது அவள் எப்படியெல்லாம் சீராட்டப் பட்டாள்.

அவள் தாயாகப் போகிறாளென்பதை அறிந்ததில் இருந்தே அவளது கணவன் செந்தில் அவளைப் பூவை வைத்திருப்பது போலவே வைத்துப் பேணினான்.

"தம்பி, பிள்ளைத்தாச்சி நல்லாய் வேலைசெய்ய வேணும். இல்லாட்டாப் பிரசவம் கஷ்டமாயிருக்கும்" என்று பொன்னம்மா அடிக்கடி கூறுமளவிற்கு அவன் அவளை எந்த வேலையுஞ் செய்யவிடாமல் வைத்திருந் தான்.

தவம் பிறந்தபோது செந்திலின் ஆனந்தம் அளவு கடந்துவிட்டது. செலவுக்கு மட்டுமட்டான ஊதியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபவன் தான் என்பதை மறந்ததுபோலச் செலவு செய்தான்.

"உடம்பு இந்த நேரம் கெட்டுப்போகக் கூடாது; பிறகு வருத்தக்காறியாய்ப் போய்விடுவாய்; பிள்ளைக்குப் பால் குடுக்கிற தாய் நல்லாய் இருக்க வேணும்" என்று சொல்லி அவளுக்கு விதவிதமான உணவு வகைகளைக் கொண்டு வந்து கொடுத்தான்.

தந்தையின் சீராட்டலையும் தாயின் பாலூட்டலையும் பெற்ற குழந்தையாகத் தவம் வளர்ந்து வந்தான்.

ஆனால் இந்தப் பிள்ளை?

பாவம் செய்த உயிர்தான் பெண்ணாய்ப் பிறக்குமென்று சொல்வார்களே, அது உண்மை யாயிருக்குமோ?

பெண்கள் படும் பாட்டைச் சொல்லி மற்றவர்களுக்கு விளங்கவைக்க இயலுமா?

பாவம் அந்தப் பெண் குழந்தை! இந்தப் பாடுகள் பட முன்பே, இப்பொழுதே எவ்வளவு கஷ்டப்படுகிறது?

வயிற்றிலே கருவானதுமே தகப்பனைத் தின்று விட்டது.

பாவம்! அது என்ன செய்யும்?

அதுவா தின்றது?

நெருப்பல்லவா தின்றது.

அதை நினைத்தால் அவளுடைய வயிற்றிலேயே நெருப்பைப் பற்றி எரிவது போலிருக்கிறது!

எல்லா உடல்களையும் மரணமான பின் நெருப்பு மூட்டி எரிக்கத்தான் செய்கிறோம். அதையே எம்மால் தாங்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவரை உயிரோடு நெருப்பு மூட்டி விட்டார்கள் என்றால். லொறியிலை கிளீனராய் கொழும்பிற்கென்று போன அவரை லொறியோடேயே வழியிலேயே எரித்துவிட்டார்கள் பாவிகள்!

அந்த உடலைக் கூடக் கடைசியாகப் பார்ப்பதற்கும் அவள் கொடுத்து வைக்கவில்லை.

வேதனையான அந்த நினைவுகளிலே கண்ணீர் பிரவகிக்க, அவள் மூக்கை உறிஞ்சிக்கொள்கிறாள்.

"என்ன மீனாட்சி அழுகிறியே?" பார்வதி கேட்கிறாள்.

"இல்லை இல்லை." மீனாட்சி சமாளிக்கிறாள்.

"பழைய நினைவுகள் வந்திருக்கும்." சின்னம்மா பரிதாபத்துடன் கூறுகிறாள்.

"பழசையே நினைச்சு அழுதென்ன பிரயோசனம்? எதுவோ அந்தக் குஞ்சுகளாவது வாழ வழிபண்ண வேணும்." பார்வதி அறிவுரை கூறுகிறாள்.

இதே காரணத்திற்காகத்தான் மீனாட்சியும் கூலி வேலை செய்யத் தொடங்கினாள். அவளுடைய தாய் பொன்னம்மாக் கிழவி ஏதோ பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வாள். அதற்கு மேல் எதுவுஞ் செய்ய அவளால் இயலாது. மீனாட்சிக்கு ஆதரவு காட்ட அண்ணனா? தம்பியா?

அதனாலேதான் வயிற்றிலும் வாயிலுமாக இருக்கும் போதே கூலி வேலைக்குப் போகத் தொடங்கினாள் அவள். இந்தக் குழந்தையைப் பெற முதல் நாட்கூட அவள் வேலைக்குப் போய்வந்தாள்.

குழந்தை பிறந்து 40 நாட்கள்கூட ஆகவில்லை. வறுமை அவளைப் பிடரியிற் பிடித்துத் தள்ளி வந்து இங்கே வேலை செய்ய விட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சிக்கு தலை சுற்றுவதுபோல இருந்தது. மெல்லச் சமாளித்துக் கொண்டாள்.

'தண்ணி கொண்டந்தாச்சு வாணை போய்க் குடிபம்." பார்வதி கூறியபோது மீனாட்சிக்கு ஒரு தெம்பேற் படுகிறது.

சுடச்சுடத் தேநீர் வயிற்றிலிறங்கியதும் தலைச் சுற்றுத் தணிகிறது. வரம்பிலே குந்தியதால் கால்களும் களைப்பாறுகின்றன. அந்த ஓய்வு ஒரு சுகந்தருவதாக அவள் நினைக்கு முன்பே...

மார்பகங்கள் விண்விண் என்று வலியெடுக்கின்றன.

"பிள்ளை பாலுக்கழப்போகுது."

உடலோடும் உணர்வுகளோடும் கலந்த தாய்மை உறவு உறுத்துகிறது. சட்டையில் மெல்லென ஈரம் பரவும் உணர்வு.

''பிள்ளை பாலுக்கழப்போகுது'' மீனாட்சி பார்வதியிடம் தவிப்புடன் கூறுகிறாள்.

"இண்டைக்குப் போய் பால் கொடுக்கப் போறியோ?" பார்வதியின் அந்தக் கேள்விக்குப் பின்னால் நேற்றைய நிகழ்வு நிற்பது அவளுக்குப் புரிகிறது.

"இல்லை" பதில் சொல்லும்போதே வாய்விட்டுக் கதறி அழ வேண்டும்போல் நெஞ்சுக்குள் வேதனை குமுறுகிறது.

நேற்றுத்தான் அவள் பிரசவத்தின் பின்னர் முதன் முதல் வேலைக்கு வந்தாள். இடையில் ஒருமுறை முதலாளியிடம் சொல்லி விட்டுப் போய் பிள்ளைக்குப் பால் கொடுக்கலாமென்ற எண்ணத்துடன் வந்திருந்தாள். காலையிலேயே அதற்கு அனுமதியும் கேட்டுவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி சரி போட்டுக் கெதியாய் வரவேணுந்தெரியுமே." சிடுசிடுப்புடன்தான் அனுமதி கிடைத்தது.

குழந்தை என்ன இயந்திரமா போனதும் பாலைக் கறந்துவிட்டு விடுவதற்கு?

பசிக்குப் பஞ்சமில்லை.

அம்மாவைக் கண்டதுமே பட்டென்று பாலைக் குடிக்க ஆரம்பித்துவிட்டது. ஆனாலும் குழந்தை குழந்தைதானே. தான் ஒரு கூலி வேலை செய்பவளின் குழந்தையென்று அதற்குப் புரியவா போகிறது?

பசி சிறிது தணிந்ததும், அம்மாவைப் பார்ப்பதும் காலை உதைத்துக் கையை அசைத்துச் சேலையைப் பற்றி விளையாடுவதும், பின் பாலைக் குடிப்பதுமாக நேரத்தைக் கடத்தியது.

ஏழை என்றாலும் தாய் தாய்தானே. அரை வயிறும் கால் வயிறுமாகக் குழந்தையைப் போட்டுவிட்டுப் போக மனம் வரவில்லை. தான் மீண்டும் வரும்வரை பசியெழாமல் இருக்க வேண்டுமே என்ற நினைவுடன் சிறிது பொறுமையாக, வழமைபோல் பாலைக் கொடுத்தபின் அவசர அவசரமாக மீண்டும் வேலை செய்யும் வயலுக்கு வந்தாள்.

நடந்து போவதற்கும் வருவதற்குமே அரை மணி நேரத்திற்கு மேல் போய்விட்டதால், அவள் போய்வர ஒரு மணி நேரத்திற்கும் மேலாகி விட்டிருந்தது.

"என்ன மீனாட்சி, நீ வேலைக்கு வராமல் நிற்கப் போறாயெண்டெல்லோ நினைச்சன்." வயற் சொந்தக் காரர் ஏகத்தாளமாகக் கேட்டார்.

"இல்லை. குழந்தைக்குப் பால் கொடுக்க நேரம் போட்டுது. போக வரவே அரை மணித்தியாலத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலை எடுக்குமையா..." அவள் ஏதோ தான் தவறு செய்துவிட்டது போன்ற குறுகுறுப்புடன் விளக்கம் அளித்தாள்.

"குழந்தைக்குப் பால் குடுக்கிறதெண்டால் வீட்டிலை இருக்க வேணும். வேலைக்கு வந்தால் வேலை செய்ய வேணும். இரண்டு தோணியிலை கால் வைக்கக் கூடாது. ஒவ்வொரு நாளும் பிள்ளைக்குப் பால் கொடுக்கப் போய் வந்தியெண்டால் என்னமாதிரி? சிரமதானமே செய்யிறீங்கள்? பின்னேரம் சுளையாய் சம்பளமெல்லே தாறன்." அவர் பொரிந்து தள்ளினார்.

அவள் கண்களும், மனமும் கலங்க நின்றாள். எதுவுமே பேச முடியவில்லை.

தலையைக் குனிந்தபடி போய்க் களைபிடுங்க ஆரம்பித்தாள். நடந்து போய் வந்ததால் களைப்பும் அசதியுமாக இருந்தது.

அடிவயிற்றில் சுள்ளென்று வலித்தது. இந்தப் பிரசவத்தைத் தொடர்ந்து அவளுக்குத் தொல்லை கொடுத்து வந்த அந்த உதிரப் பெருக்கு ஏற்படும் உணர்வு. வேதனை ஒருபுறம், களைப்பு ஒருபுறம்.

இயலவில்லை என்று ஓரிடத்திலே குந்தவும் முடியாமல் முதலாளியின் வார்த்தைகள் மனதைக் குத்தின. நின்று வேலை செய்ய முடியாத வேறுபட்ட வேதனைகள். அவள் பல்லைக் கடித்துக் கொண்டு வேலையில் ஈடுபட்டாள். அதற்குப் பழக்கப்பட்டாக வேண்டிய நிர்ப்பந்தம்.

"இப்படியே இரத்தம் முழுவதும் போனால் உடம்பு கெட்டுப் போகுமடி பிள்ளை. ஆஸ்பத்திரிக்குப் போனியெண்டால் கெற்பப் பையைக் கழுவி விடுவினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகம் வரும்." அவளுடைய பிரச்சினையை அறிந்த சின்னம்மா கூறிய அறிவுரை இது.

மீண்டும் ஒருமுறை வைத்திய சாலையா?

பணத்திற்கு எங்கே போவது. அவள் வேலைக்குப் போகாமல் விட்டால் சாப்பாட்டிற்கே வழியற்றுப் போகும் நிலையில் வைத்தியம் எப்படிச் செய்வது?

வேலை செய்யக் கூடிய நிலையில் இருக்கும்வரை தன் நோயைக் கவனிக்க முடியாத பெண்கள் கூட்டத்தில் அவளும் ஒருத்தியாக நிற்கிறாள்.

"பிள்ளைக்கு என்ன குடுக்கச் சொன்னனீ?" பார்வதியின் கேள்வி. நேற்றைய பிரச்சினைகளின் நினைவுகளிலிருந்து இன்றைய பிரச்சினைக்கு அவளை இழுத்து வருகிறது.

"மல்லித் தண்ணீ"

"அரோடை கிடக்குமே? பாவம் பச்சைக் குழந்தை!"

அவளுடைய மனமும் மார்பகங்களும் விண்ணென்று வலித்தன.

"என்ன செய்ய? நாங்கள் ஏழையள்; உழைச்சுத்தான் சாப்பிட வேணும்; ஒரு ஏழைத்தாயின்ரை பிரச்சினை ஆருக்கு விளங்குது? அந்தப் பச்சைப் பாலன் அங்கை பசியால துடிக்குது. இங்கை நான் பால் குடுக்க மாட்டாமல் கஷ்டப்படுகிறன். ஒரு பொம்பிளைக்கு, வேலைக்குப் போற ஒரு தாய்க்கு மட்டுந்தான் இந்த வேதனை விளங்கும்."

"பிள்ளை மீனாட்சி. அப்பிடி ஒருக்கால் எங்களின்ரை மறை விலைபோய் கொஞ்சம் பாலைப் பிதுக்கிவிடு. பிறகு போய்ப் புளிச்ச பாலும் பிள்ளைக்குக் குடுக்கக் கூடாது தானே".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி சொல்வது சரியென்று அவளுக்குப் பட்டது. வெள்ளத்தேர்டு தன் பால் கலந்து வீணாகும் வேளையிலே தன் பிள்ளை மல்லித் தண்ணீரால் பசி தீராமல் அழுது கொண்டிருக்குமென்ற நினைவு அவளை வேதனைப் படுத்துகிறது.

"பெரிசாய் தாய்ப்பால் கட்டாயம் குழந்தைக்கு குடுக்க வேணுமென்டு பிரசாரம் செய்வினம்; தொண்டை கிழியக் கத்திறது தான் மிச்சம். வேலைக்கெண்டு போற பொம்பிளையள், எங்களைப் போலை கூலி வேலையோ வேறை வேலையோ சரி, எப்பிடிப் பால் குடுக்கிற தெண்டு எந்த மடையராவது நினைச்சுப் பார்த்திருக்கினமே?" பார்வதி தான் பட்ட கஷ்டங்களும் நினைவுக்கு வந்த வளாகச் சொல்கிறாள்.

"கொஞ்ச நாளைக்கு கஷ்டந்தான், இப்பிடிக் குடுக்காமல் விட. கொஞ்ச நாளாலை பாலில்லாமல் போயிடும்" சரசு தன் அனுபவத்தைக் கூறுகிறாள்.

"பாலில்லாமல் போய்விடுமோ? கடவுளே! இரவிலும் என்ரை பிள்ளை பசியிலை துடிக்க வேண்டி வந்திடுமா?" மீனாட்சிக்கு அடுத்த பேரிடி!

"குழந்தைக்கு ஏதாவது மா வாங்கிப் பருக்கு. மல்லித் தண்ணியோடை விடாதை. பாவம், பச்சைக் குழந்தை." சின்னம்மா சொல்கிறாள்.

"குழந்தைக்குக் குடுக்கக் கூடிய மாவாய் குடுக்க வேணும். இல்லலாட்டா வயிற்றுக் கோளாறுகள் வரும்"

"சங்கக் கடையிலை விக்கிற மா மலிவு போய்க் கேட்டுப் பார். ஒரே மாத்தான் குடுக்க வேணும். கூடின விலை யானை வாங்கிப் பிறகு வாங்கேலாமல் கஷ்டப்படாதை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் கூறும் அறிவுரைகளை அவள் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

"பாவம் குழந்தை, பால்மா வாங்கிக் கொண்டுதான் போகவேணும்" அவள் தீர்மானிக்கிறாள்.

வேலை முடிந்ததும் கிடைத்த பணத்துடன் நேரே சங்கக் கடைக்குப் போகிறாள்.

"குழந்தைக்குக் குடுக்கிற பால்மா இருக்கே?"

"அது நாலைஞ்சு ரின்தான் வாறது. முடிஞ்சு போச்சு"

"எப்ப வரும்?"

"சொல்லேலாது. பிரச்சனையாலை கொண்டு வாறதும் கஷ்டம். விலை கூடிய பால்மா இருக்கு. வேணுமே?"

அந்த விலைக்கும் அவளிடமுள்ள பணத்திற்கும் பொருத்தமில்லையே.

அவள் என்ன செய்வதென்று புரியாமல் நின்றாள்.

குழந்தைக்கு பால்மா வாங்கியாக வேண்டும். அவளுடைய மார்பகங்கள் விண்ணென்று வலிக்க சட்டை மெல்ல நனைகிறது.

*வீரகேசரி 1986*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுப்பு, நெருப்பு

"கிரீங்" என்ற மணியொலி காலை மணி நான்கு முப்பது என்பதை உணர்த்தியது. அசதியில் அயர்ந்து தூங்கும் ராஜியை, அவசர அவசரமாக எழுந்து, தன்னோடு போட்டியிட அன்றாடம் அழைக்கும் ஒலி அது.

எழும்பும் போதே அவளது மனம் முழுவதும் ஏதோ ஒரு வேதனையைச் சுமந்திருக்கும் ஓர் உணர்வு.

ஓ! நேற்று முழுவதும் இராகவனைக் காணவில்லை என்று ஏங்கிய ஏக்கம்; அதே நினைவில் - துயரில் மனந்தவிக்க நடுச்சாமம் தாண்டிய பின்பும் உறங்க முடியாமல் உழன்றது; ஒரே கணத்தில் எல்லாமே நினைவிற்கு வருகின்றன.

இராகவன் அவனது தம்பி. கொழும்பிலே வேலை பார்த்து வந்தான். வருகிறவாரம் அவளது தங்கை நிர்மலாவிற்கு நடைபெறப்போகும் திருமணத்தை முன்னின்று நடத்துவதற்கு, இரண்டு வாரங்கள் முன்னதாகவே வந்துவிட வேண்டுமென்ற அவனது திட்டம் கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையேயான புகையிரத ஓட்டம் தடைப்பட்டதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைப்பட்டுவிட்டது. தனியார் பஸ்கள் ஓடத் தொடங்கியதும் அதில் வருவதாக அறிவித்திருந்தான்.

குறித்த தினத்தில் - நேற்று முன்தினம் - அவன் வந்து சேரவில்லை. என்னவோ ஏதோ என்ற திகில். கொழும்பிலிருந்து புறப்படவில்லையோ?

அதை அறிய அவர்கள் அலைந்த அலைச்சல். கொழும்புடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வது கூட எவ்வளவு சிரமமாக இருக்கிறது? அப்படி அங்கு என்ன நடந்தது? இங்கு என்ன நடக்கிறது என்று அறிய முடியாத நிலையில் இந்நாட்டு மக்கள் வாழ்வதும் இன்றைய இந்த நிலைக்கு ஒரு காரணமென்று கூறலாம்.

அவள் எது நடந்திருக்கக் கூடாதென்று எல்லாத் தெய்வங்களையும் பிரார்த்தித்தாளோ, அது நடந்து விட்டதென்பது நேற்று மாலை நான்கு மணியளவிலே தான் தெரியவந்தது!

இராகவன் கொழும்பிலிருந்து தனியார் பஸ் ஒன்றில் யாழ்ப்பாணம் புறப்பட்டு விட்டானென்பது நிச்சயமாகி விட்டது. எவ்வளவோ முயற்சியின் பின் கொழும்பிலுள்ள அவனது நண்பனுடன் தொடர்புகொண்டு அதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டார்கள். பின்னர் என்ன நடந்திருக்கும்?

அவன் ஏன் வரவில்லை?

எத்தனையோ வதந்திகள், ஊகங்கள், கற்பனைகள், ஆயிரம் கதைகள் விதம் விதமாக நேற்று கேட்டாயிற்று. ஆனால், உண்மையில் நடந்தது என்ன? அது யாருக்குமே தெரியவில்லை.

கோ வென்று கதறியழ வேண்டும் போல் ஓர் உணர்வு குமுறி வருகிறது. கணவர் எழுந்துவிடுவாரோ என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகிலுடன் தலையணையில் முகம் புதைத்துக் கண்ணீர் உருக்கின்றாள் ராஜி.

எழுந்து அன்றாட வேலைகளைக் கவனிக்க வேண்டுமென்ற உற்சாகமே வரவில்லை. நினைவுகள் நீள்கின்றன...

அவளது குடும்பத்துடன் யமதர்மராஜனுக்கு ஏதாவது கோபமோ என்னவோ?

1958 ஆம் ஆண்டு அவள் சிறுமியாக இருந்த காலம். சிறிய தந்தையை அப்போது நடந்த கலவரத்திற்குப் பலி கொடுத்துவிட்டு சித்தி வந்து நின்ற கோலம் அவளது மனதில் தூசுபடராத படமாக இன்றும் நிலைத் திருக்கிறது. காலவோட்டத்தில் மறதிப் புழுதி, அந்த நிகழ்வின் சுவடுகளை மறைத்து விடாமல் மெருகூட்டு வதில் பல பெரியவர்கள் ஈடுபட்டதன் பயனாக அவளாலும் மறக்க முடியவில்லைப் போலும்.

1973 கலவரத்தில் அனுராதபுரத்தில், பொறியியலாள ராக இருந்த மாமா என்னவானார் என்பது இன்றுவரை தெரியாது!

1983 இல் இனக்கலவரம் மூண்டபோது வேலைக்குச் சென்றிருந்த இராகவனின் மைத்துனன் என்னவானான் என்பது இன்றுவரை தெரியாது!

இன்று... இன்று... இராகவன்... அவனும் முடிவு தெரியாமலே அந்தக் கதைகளின் தொடராக, இன்று நடக்கும் பல நூறு கதைகளில் ஒன்றாக... மதவாச்சியில் எரிக்கப்பட்ட பஸ்ஸில் சிக்குண்டு...

இல்லை... அவன் வந்துவிடுவான். நல்லூர்க்கந்தா, அவன் வந்து சேர்ந்துவிட வேண்டும்!

இப்படி மனதைத் தேற்றிக் கொண்டு ஏமாற்றுவதே இன்று சகஜமாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய நிகழ்ச்சிகளின் நினைவில் இலயித்திருந்த ராஜிக்கு நேரம் போய்க் கொண்டிருப்பது புரிகிறது. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் எழுந்து அன்றாடக் கடமைகளைச் செய்தாக வேண்டும்.

அன்று சனிக்கிழமை. அத்துடன் வீட்டில் விரவியிருந்த சோகத்தில் கணவன் வேலைக்குப் புறப்படமாட்டான். ஆனால், குழந்தைகளுக்காகவாவது காலை உணவைத் தயாரிக்க வேண்டும்.

அவள் எழுந்து உட்கார்ந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். மனதில் உற்சாகமே இல்லை.

இனந்தெரியாத திகிலும், வேதனையும், வெறுப்புமாக இருந்தது.

பல் துலக்கிக் குளித்துவிட்டு சுவாமிப் படத்தின் முன் போனதுமே அழுகை ஓடி வருகிறது. துன்பம் வரும்போது ஆண்டவன் சந்நிதியில் எவ்வாறு உருகிவிடுகின்றோம்.

சமயலறை விளக்கைப் பொருத்திய பின் அடுப்பினுள்ளிருந்த சாம்பலை அள்ளிவிட்டு அடுப்பை மூட்டலாமெனப் போனால். நேற்றிரவு கனன்று கொண்டிருந்த தணல் சாம்பலாகி அடுப்பு நிறைய கிடந்தது.

"நானும் இப்படித்தான் ஆகிவிட்டேன்," ராஜி தன் மனதுள் தானே சொல்லிக் கொண்டாள்.

பாடசாலை நாட்களில் பல்கலைக்கழகக் காலத்தில் அவளுள் கனன்று கொண்டிருந்த இலட்சியங்கள் இன்று நீறுபூத்து, சாம்பலாகி, அந்தக் கனலையே மூடி....

யாழ்ப்பாணத்துப் பெண்களின் உணர்வுகள் சமயலறை அடுப்பின் நெருப்பைப் போன்றவைதானோ?

அன்றைய வேகத்தோடு அவளைப் போன்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் செயற்பட்டிருந்தால் இன்று பலர் வேகவும் அது கண்டு பலர் மனம் வேகவும் நேர்ந்திருக்காதோ?

அவள் உணர்ச்சிப் பிழம்பாக இருந்த காலத்தை எண்ணிப் பார்க்கிறாள்.

ஏதோ ஒரு விடிவைத் தேடும் முனைப்பில் பாடசாலை மாணவர்களைத் தட்டியெழுப்பி அணி திரட்டி அறப்போராட்டத்தில் கலந்துகொண்ட நாட்கள்.

கச்சேரி வேலைகளை ஸ்தம்பிக்கச் செய்து சத்தியாக்கிரகம் நடத்திய அந்த நாட்கள்.

இந்தத் தேர்தலின் வெற்றியுடன் எமது வெற்றியும் நிச்சயம் என்ற நம்பிக்கையுடன் அந்தத் தொகுதி அபேட்சகருக்காக அல்லும் பகலும் அலுப்பின்றி அலைந்து ஓடியோடிப் பிரசாரம் செய்த நாட்கள்.

கீழ்வானில் தெரிந்த இளஞாயிறு அங்கேயே அஸ்தமிக்கப் போகிறதென்ற உணர்வு மனதில் தட்டுப்பட்டபோது அவளும் ஏன் அதைப் போலானாள்?

ஒவ்வொரு செய்தியையும் கேட்கும்போது அவளது மனம் குமுறத்தான் செய்கிறது. ஆனால்..?

"திருமணம் என்ற பந்தம்" என்று நன்றாகவே சொன்னார்கள். பந்தம் என்றால் கட்டு என்றுதானே பொருள். அந்தக் கட்டுக்குள் அகப்பட்ட அவள் காட்டாறாக கரைபுரண்டு ஓட முடியாமல் அணையுள் சிக்குண்ட வெள்ளம் வாய்க்காலில் வடிந்தோடுவது போல், மற்றவர்களை விரும்பிய திசைக்கே போக நேரிட்டது. அழுவதைத் தவிர ஒன்றுமே செய்ய இயலாதவளாக...

நீண்ட இடைவெளிகளில் நிகழ்ந்த நிகழ்வுகளுக்கே சாவு மணியடிக்கத் துடித்தவள், நித்தம் நித்தம் அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழும்போது சனத்தோடு சனமாக அவற்றைப் பற்றி வாயோயாமல், கதைப்பவளாகிவிட்டாள்.

ஒருவரும் உணராத விதத்தில் நிகழ்ந்த அரிப்புகளைத் தடுக்க ஆவல் கொண்டவள், இன்று காட்டாறு கண்முன்னால் அள்ளிப் போவதை வேடிக்கை பார்ப்பவளாகிவிட்டாள்.

சீ என்னால் என்ன பயன்? இத்தனையும் நடக்கையில் - என் உடன்பிறப்பின் உயிர்கூடப் பறிக்கப்படும் நிலையில் நான் என்ன செய்கிறேன்?

அவள் அடுப்பிலுள்ள சாம்பலை அகற்றத் தொடங்குகிறாள். நேற்றுக் கனன்ற கனல் முழுமையாக ஆறவில்லை.

ஆம். அது முழுமையாக ஆறவில்லை.

அங்கு மிங்கும் பல பொறிகள்.

மனம் நினைவலைகளில் மிதக்கிறது.

அவளுடைய மகனும், மகளும் இன்றைய நிகழ்வுகளைப் பற்றி - ஒரு வெடிச் சத்தத்திற்கே வெருண்டோடும் காரணம் பற்றி - விளக்கங்கள் கேட்டபோது அவள் பழைய ராஜியின் பிரதிபலிப்பாக மாறி சரித்திரத்தையே அவர்களுக்குப் புகட்டியிருக்கிறாள்.

அவள் இருந்த பொறிகளைப் பொச்சு மட்டையில் வைத்து பன்னாடை, பாளை, ஓலை - என்பவற்றையும் வைத்து விறகை அடுக்கி விடுகிறாள். அடுப்பு மெல்லப் புகைந்தது.

அவளது பிள்ளைகள் மாறி, மாறி எத்தனை கேள்விகளைக் கேட்பார்கள்? அவளுடைய பதில்களிலிருந்து அவர்கள் நியாயமான அறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்றுதான் கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பிஞ்சு மனங்களிலும் உத்வேக உணர்வு மெல்லக் கனல்வதை அவள் அவதானித்திருக்கிறாள்.

காய்கறிகளைக் கழுவிப் பரபரவென்று நறுக்குவதற்கிடையிலே அடுப்பில் நெருப்பு கனல்வது தெரிகிறது.

நாளை அவளுடைய மக்களும் அதேபோன்று கனல்வார்களோ?

அது மட்டுமா?

நேற்றய அடுப்பு நெருப்பு நீறுபூத்துப் போயிருக்கலாம். அது இன்று நெருப்புக் கனல்வதற்கு மட்டும் காரணமாய் இருந்திருக்கலாம்.

ஆனால் இன்றைய அடுப்பு நெருப்புக்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மாறி அணைக்கையில் பெருநெருப்பாகி எதிர்த்துள்ளவற்றை எரித்துச் சாம்பராக்கியும் விடலாம்.

"அம்மா, மதவாச்சியிலை மாமாவைச் சாக்கொண்டவனைச் சுடப்போறேன்?"

நல்லூர்த் திருவிழாவில் அடம்பிடித்து ஆசைப்பட்டு வாங்கிய துப்பாக்கியுடன் அவளது மகள் நித்தியா நிக்கிறாள்.

புலரும் பொழுதில் கண் விழித்ததுமே, மகள் கொண்டிருந்த போர்க்கோலத்தைப் பார்த்து பிரமித்து நின்றாள் ராஜி.

அடுப்பு நெருப்பு ஓங்கிச் சுவாலைவிட்டெரிகிறது.

ஈழமுரசு - 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசக்கரங்கள்

1987 ஆம் ஆண்டு அன்று நவம்பர் 17. விடியலை என் மனது வேண்டி நின்றது.

ஒரு மாதத்திலும் கூடிய காலம் போடப்பட்ட ஊரடங்குச் சட்டம் அன்று கோப்பாயில் தளர்த்தப் பட்டது.

வீட்டைப் போய்ப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்தைவிட, என் அன்னை என்ன நிலையி லிருக்கிறார் என்று பார்க்கவேண்டுமென்ற ஆவல் என் மனதை உந்தித் தள்ளிக்கொண்டிருக்கிறது.

என் அன்னைக்கு நான் ஒரே மகன் என்ற காரணத்தால் அவர் என்னைப் பிரிந்திருக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட தில்லை. இறுதிவரை என் அருகிலேயே அவரை வைத்திருக்கவேண்டுமென நினைத்திருந்தேன். இப்படிப் பிரிய நேருமென நான் எதிர்பார்க்கவேயில்லை.

அக்டோபர் பத்தாந் திகதியின் நினைவு வருகிறது. அன்றைய காலைப்பொழுதில் நினைத்திருப்போமா இத்தகைய பயங்கரமொன்று எம்மை எதிர்நோக்கிக் காத்திருக்கிறதென்று.

இங்கு சமாதானத்தை நிலைநாட்ட வந்தவர்கள் எப்படியும் அமைதியை நிலைநாட்டுவார்கள் என்றோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்பு. ஆயுதங்கள் போய் அகிம்சை வந்துவிட்டதென்றோரு நம்பிக்கை.

இவற்றிடையே அமைதியாக விடிந்த அந்தக் காலைப்பொழுதில் அத்தனை நம்பிக்கைகளும் சிறகடித்துப் பறப்பதுபோலப் படபடவென்ற சத்தங்கள். பரபரப்பான வதந்திகள்.

எங்கள் வானில் சூழ்ந்த இருள் விலகப்போவதேயில்லையா என்ற ஏக்கத்துடன் அன்று இரவு படுக்கைக்குச் செல்கிறோம். நட்ட நடுநிசியில் கேட்ட வேட்டுச் சத்தங்களால் விழித்துக்கொள்கிறோம்.

எங்கள் வீட்டின் பின்புறமாக வேட்டுச் சத்தங்கள். யார் சுடுகிறார்கள்? ஏன் சுடுகிறார்கள்? எதுவுமே புரியவில்லை.

அடுத்து ஷெல் விழும் சத்தம். பிள்ளைகள் பயந்து அழுகிறார்கள்.

"கொஞ்சநாளாய் இல்லாமலிருந்ததாலை இப்ப சத்தங்கேட்க என்னவோ செய்யுது." அம்மாவும் எழுந்து வருகிறார்.

ஷெல்லும் ஹெலியின் சூடும் பொம்பரின் தாக்குதலுமாகப் பரிதவித்த காலங்களில் பதுங்குகுழி அமைத்தோம். கூன் விழுந்த என் தாயாரால் அதற்குள் புகுவது இயலாதென்பதால் முன் வராந்தாவில் அவருக்குப் பாதுகாப்பாக ஓர் அறை அமைத்திருந்தோம்.

இப்போது பதுங்கு குழி கைவிடப்பட்ட நிலையிலிருந்ததால் எல்லோரும் அந்த அறைக்குள் ஒதுங்கினோம். ஓயாத சத்தங்கள்.

அருகே வீடுகளின்றித் தனித்துநின்ற எங்கள் வீட்டின் அசௌகரியம் இப்போது புரிகிறது. என்ன நடக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்யலாமென அண்டை அயலிலேகூட விசாரிக்க முடியாத நிலை. விடியலுக்காகக் காத்திருக் கின்றோம்.

எங்கள் வீட்டின் பின்புறமாக இங்கிருந்து செல்லும் வேட்டுகளுக்கு எதிர்வேட்டு மிக அருகிலிருந்து வருவதுபோலத் தெரிகிறது. ஷெல்களும் வருகின்றன.

ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி அருகி லுள்ள இராணுவ முகாமில் பாதுகாப்புத் தேடுமாறு வானொலி அறிவித்திருக்கிறது. நடக்காததையும் நடக்க முடியாததையும் கூறிப் பழகிவிட்ட வானொலி.

நாங்கள் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போய்விடலாம். ஆனால் அம்மா?

"அம்மா என்ன செய்யப்போறீங்கள்?"

"நான் இங்கையே இருக்கப்போறன்"

"ஷெல்லடிக்கிறார்களம்மா. எப்படி இருப்பீங்கள்?"

"அது ஒண்டும் நடவாது. இந்திய ஆமிதானே ஒண்டும் செய்யாங்கள்."

''சண்டையெண்டு தொடங்கினால் என்னவும் நடக்குமம்மா."

"என்னாலை கோயிலுக்கும் அங்கையும் இங்கையும் அலைய ஏலாது. பத்தடி நடக்கிறதே கஷ்டம்." கூன் விழுந்து தடதடக்கும் அவர் சொல்வது உண்மைதான். அதற்காக எப்படி விட்டுச் செல்வது?

'கடவுள் ஒருத்தன் இருக்கிறான். கைவிடமாட்டான். நீங்கள் வாழுற பிள்ளையள். போய்த் தப்புங்கோ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் பிடிவாதம் குறைவதாயில்லை. நானும் முடிந்தவரை விவாதிக்கின்றேன்.

"என்னாலை கண்டது நிண்டது சாப்பிடேலாது. சத்தியெடுக்கும். அலைஞ்சால் வருத்தங் கூடும். வயசு போனதுகள், வருத்தக்காறரெண்டு வசதி செய்து தரப்போகினமே?"

அவரது இயலாமையாலேற்பட்ட பிடிவாதத்தை மாற்ற முடியாத நிலையில் நாங்கள் அவரை விட்டுவிட்டுப் புறப்பட்டோம்.

ஒரு வார காலம் போராளிகள் அங்கே எதிர்த்து நின்றவரை தினந்தோறும் என் கணவர் அம்மாவைப் போய்ப் பார்த்து வருகிறார்.

இதனிடையே அங்கு பலரை ஷெல் பலி கொண்டுவிட்டது. இதனால் நானும் சேர்ந்து போய்ப் பார்த்து வருவதை உறவினர் தடுக்கின்றனர்.

எங்கள் வீட்டைச் சுற்றியும் வீட்டிலும் ஷெல் விழத்தவறவில்லை. ஆனால் 18-10-97 காலையில் போய்ப் பார்த்தவரை அம்மாவை அவர் நம்பிய கடவுள் காப்பாற்றியிருந்தார். 19-10-87 இல் அமைதிப்படையினர் அப்பகுதியினுட் புகுந்துவிட்டதாக அறிகிறோம்.

வேட்டுச் சத்தங்களும் கனரக வாகனங்களின் இரைச்சலும் ஹெலியின் ஏற்றுதலும் விண்கூவிச் செல்லும் ஷெல் வீழ்ந்து வெடிக்கும் ஓசையும் ஓய்வதாகத் தெரியவில்லை.

இந்தியா முழுவதுமே கோலாகலமாகக் கொண்டாடும் தீபாவளி தினத்தன்றாவது அவர்கள் ஓய்வெடுப்பார்கள் என்ற எனது எதிர்பார்ப்பும் வீணாகிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்திய ஆமிதானே ஒண்டும் செய்யான்கள்." என்று என் அம்மாவால் என் மனதில் ஏற்றி வைக்கப்பட்ட நம்பிக்கைச் சுடர் கண்ட கேட்ட செய்திகளால் அல்லாடத் தொடங்குகிறது.

யாழ் நகரில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு நிலைமை வழமைக்குத் திரும்புவதாக வானொலி கூறிக்கொண் டிருந்த நாட்களிலே கூட எங்கள் பகுதி ஊரடங்கால் அடங்கிக் கிடக்கிறது.

ஊரடங்குச் சட்டம் எப்பொழுது நீங்குமென்ற எதிர்பார்ப்புடன் ஒரு மாதங்கழிந்துவிட்டது.

யாழ் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த டாக்டர்களே கொல்லப்பட்டதாக அறிந்தபின் என் நம்பிக்கைச் சுடர் முழுவதுமாக அணைந்திருந்தாலும் ஒரு நப்பாசையின் பிடியில் அந்த விடியற்போதில் இயங்குகிறேன்.

உணவிற்காகத் திண்டாடிய வேளையிலும் அம்மாவிற் கென்று வாங்கிப் பாதுகாத்து வைத்திருந்த நெஸ்ரமோல்ற், பிஸ்கற் பெட்டி எல்லாவற்றையும் எடுத்துக் கொள்கிறேன். நானும் என் கணவருமாகப் புறப்படுகின்றோம்.

"அம்மம்மாவை எங்களுக்கும் வந்து பார்க்க ஆசையாக இருக்கு" பிள்ளைகள் கெஞ்சுகிறார்கள்.

அம்மா வேலைக்குப் போய்விட, அவர்களைத் தாயாக இருந்து சீராட்டி வளர்த்த அம்மம்மாவின் நேசக் கரங்களைக் காண அந்தப் பிஞ்சு உள்ளங்கள் தவிப்பது எனக்குப் புரிகிறது.

ஆனால் கோப்பாய்ச் செக்கிங் பற்றிக் கேள்விப் பட்டவை என்னைத் தயங்க வைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளைக்கு உங்களைக் கூட்டிக்கொண்டு போறம்." அவர்களை ஒரு மாதிரி ஒப்புக்கொள்ள வைக்கிறேன்.

"இந்த முத்தத்தை நாங்கள் தந்ததாக அம்மம்மா விட்டைக் கொடுங்கோ" பிள்ளைகள் எனக்கு முத்தமிட்டு விடைதருகின்றனர்.

அந்த அன்பையும், நேசக்கரங்கள் எம்மை நிச்சயம் காத்திருக்குமென்ற நம்பிக்கையையும் சுமந்துகொண்டு நான் புறப்படுகிறேன்.

கோப்பாய்ச் சந்தியை அண்மித்த வீடுகளில் வசித்த சிலர் சேர்ந்து வெள்ளைக்கொடி சகிதம் செல்கின்றோம். நாங்கள்தான் முதன் முதலாக அப்பகுதிக்குப் போகிறோம் போலத் தெரிகிறது.

வீதி சந்தடியற்றுக் கிடக்கிறது. வீதியருகிலிருந்த வீடுகளனைத்தும், ஒன்று தவறாது, விரித்த கதவுகளுடன் வெறிச்சோடிக் கிடக்கின்றன. உறவினர் இருவரின் வீடுகளை எட்டிப் பார்த்தபோதே உறைந்துபோகிறேன். வீடு முழுவதும் பொருட்கள் சிந்திச் சிதறிக் கிடக்கின்றன.

கடைகளும் வீடுகளும் உடைந்தும் இடிந்தும் எரிந்தும் கிடக்கும் காட்சிகள்.

பூவும் பொட்டுமாகக் கலகலப்புடன் பொலிந்து நின்ற நங்கை, கைம்பெண்ணாகிக் கதிகலங்கி நிற்பதைக் காணும்போது ஏற்படும் கலக்கம் என் மனத்தினுள் விரவுகிறது.

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியைத் தாண்டிச் சிறிது தூரம் செல்கிறோம். ஒரு வீதித் தடுப்பு கண்ணிற்படுகிறது. வேறு யாருமே கண்ணிற்படவில்லை.

சில அடிகள் வைத்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹோல்ற்"

இந்தக் குரல் எங்கிருந்து வருகிறது?

திடீரென்று பெற்றோல் நிலையம் பக்கமிருந்து இருவர் தோன்ற, பஸ் தரிப்பிலிருந்து பலர் வெளிவருகின்றனர்.

கைகளை உயர்த்திக்கொண்டு நாங்கள் நிற்கிறோம்.

துப்பாக்கிகளையும் தூக்கிக்கொண்டு அமைதிப் படையினர் நிற்பதைப் பார்த்தால் எதிரிகளை எதிர்நோக்கும் பாவந் தெரிகிறது.

"டௌன்" சில நிமிடங்களில் அடுத்த உத்தரவு.

கைகளைத் தொங்கவிடுகிறோம். மீண்டும் 'டௌன்' என்ற உத்தரவு. புரியவில்லை.

சில தடவைகள் கூறியபின்தான் இருக்கச் சொல்கிறார்களென்பது புரிகிறது.

நடுவீதியிலே குந்தியிருந்த என் கண்கள் சுற்றுப்புறத்தை மேய்கின்றன. வேதனையை ஜீரணிக்க முடியாமல் மனம் அவதிப்படுகிறது.

எங்கள் கிராமம் மயானமாகிவிட்டதோ!

அதோ வீதியோரம். அது யாராயிருக்கும். நாகமுத்து அப்பாவோ?

ஒரு மாதத்திற்கு முன் என்னைப் பார்த்துச் சிரித்துக் கதைத்த அந்த முகம், மண்டையோடாக வீதியோரத்தில் எரிந்து கிடக்கிறது.

அம்மா எப்படியிருக்கிறாவோ?

ஒரு மாதிரியாக, வருமாறு உத்தரவு கிடைக்கிறது. நாங்கள் எழுந்து நடக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாடியும், தலைப்பாகையுமாக எந்த முகத்திலும் இனிமை தெரியவில்லை. நாம் கேட்பதும் அவர்களுக்குப் புரிவதாகத் தெரியவில்லை.

அட ஆண்டவா! முன்பிருந்தவர்கள் பேசுவதில் நான்கு வார்த்தை நமக்குத் தெரிந்திருக்கும். ஏதோ அரைகுறை பேசிப்புரிய வைக்கலாம். இவர்கள் எங்கேயோ இருந்து எதற்கோவென்று வந்து தொலைந்து..

அம்மா என்ன கூறியிருந்தாலும் இவர்களுக்குப் புரிந்திருக்காதே.

சந்திக்கு அண்மையிலிருந்த வீடொன்றில் அவர்களின் கொமாண்டர் இருக்கிறார்.

எங்கள் வீடுகள் எங்குள்ளன என வினாவுகிறார். ஒவ்வொரு வீட்டையும் சென்று பார்வையிட இரு இராணுவ வீரர்களையும் சேர்த்து அனுப்புகிறார்.

நாங்கள் வீட்டை நோக்கிச் செல்கிறோம். பசுமையாகக் கிடந்த வாழைத் தோட்டங்கள் வெறுமையாகிக் கிடக்கின்றன. மரங்கள் வேலிகள் எல்லாம் சின்னாபின்னமாகி, பெற்றோல் நிலைய மதிலும் உடைந்து நொருங்கிக் கிடக்கிறது. 'செயின் புளக்' அதனால் வந்திருக்குமோ?

வீட்டை அண்மிக்கிறோம். வீட்டுக் கதவு விரிந்து கிடப்பது வீதியில் நிற்கவே தெரிகிறது.

படிக்கும் அறையிலிருந்த மேசை, இழுத்து விடப்பட்ட லாச்சிகளுடன் நடு ஹோலில் கிடக்கிறதே!

நம்பிக்கையின் தளர்வு அதிகரிக்கிறது!

கேற்றைத் திறக்க முடியாதபடி வெட்டிப்போடப்பட்டு உக்கிக் கிடந்த கடதாசிப்பூமர முட்களை அகற்ற அவர்களும் உதவுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை நல்லவர்களாயிருப்பார்களோ? அல்லது சிலபேர் நல்லவர்களாக இருப்பார்களோ?

சில மாதங்களின் முன் வாகனங்களிலிருந்து ஏன் ஹெலிக்கொப்ரரிலிருந்துகூட அசைத்து நமக்கு நம்பிக்கையூட்டிய கரங்கள் நினைவில் பளிச்சிடுகின்றன.

கேற்றைத் தாண்டுகிறோம். அம்மாவுக்காக வீட்டில் பிஸ்கற் வைத்திருந்த தகரம் வழியிலே நெளிந்த நிலையில் கறளேறிக் கிடக்கிறது.

குரோட்டன்களுக்கிடையே ஒரு பதுங்கு குழி.

வீட்டருகே செல்கின்றோம். குப்பென்ற பிணவாடை! பாதுகாப்பிற்காகக் கட்டிய அறையினுள் மண்டை யோடும் எலும்புகளும்!

சந்தேகம் முளைவிடுகிறது.

திறந்த வீட்டினுள் நாயிழுத்துவந்த மண்டையோடாக இருக்குமோ? சந்தேக முளையைக் களைய முனைகிறது நப்பாசை.

“அம்மா, அம்மா,”

“மாமி, மாமி,” எங்கள் குரல்களுக்குப் பதிலளிக்க யாருமேயில்லை. காவலுக்கு வந்தவர்கள் மண்டை யோட்டைக் கண்டதுமே மெல்ல நழுவி கேற்றடிக்குப் போவது தெரிகிறது.

உள்ளே கால் வைக்கிறேன். சுவரில் கிடந்த கடிகாரம் வெறும் ஓடாக என் காலடியில் கிடந்து, “என்னால் நேரத்தைக் காட்ட முடியாவிட்டாலும் இங்கு வந்தவர்களின் வெறியின் அளவைக் காட்ட முடியும்” என்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பறையின் பக்கம் திரும்புகிறேன். எத்தனையோ ஆண்டுகளாகச் சேர்த்த நூல்கள் நிலத்திலே சிதறி, ஷெல்லடியால் திறந்த கூரை வழியே வீழ்ந்த மழைநீரில் உக்கி...

அடுத்த அறையுள் கூடைகள் பொருட்கள் அனைத்தும் கொட்டப்பட்டு, அதன்மேல் நெல்லும் கொட்டப் பட்டு நெற்பயிர் அவற்றின் மேல் முளைவிட்டுப் பயிராக நிற்கிறது.

அடுத்த அறையிலும் அதேபோல் உடைகள் தேவையான சான்றிதழ்கள், கோவைகள் அனைத்தும் உக்கிக் கிடக்கின்றன. நினைவுச் சின்னங்களான புகைப்படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் அனைத்தும் வேண்டுமென்றே அழிக்கப்பட்டனவோ?

சும்மா சொல்லக்கூடாது. ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்குமோவென்று நன்றாகவே தேடியிருந்தார்கள். கைக்கடிகாரம் முதல் தொலைக் காட்சிப் பெட்டிவரை ஒன்றுமே வீட்டிலில்லை.

நாங்கள் வைத்திருந்த போலி நகைகள் அனைத்தையும் உடைத்தும் தெறித்தும் போட்டிருப்பதைப் பார்த்த போது, எனது பரிதாபநிலை மரத்துப்போய் அவர்கள் மேல் பரிதாபமேற்பட்டது.

கடவுள் படமிருந்த இடங்களுக்கு மரியாதை கொடுத்திருந்தார்கள்.

ஓர் அறையின் கூரை ஷீற்கள் அனைத்தும் சென்றிக் குப் போய்விட்டன போலும். வானம் தெரிந்தது.

பாடுபட்டு வளர்த்த வாழைகளனைத்தும் தரையிலே உருக்குலைந்து கிடந்தன. ஷெல்லடி பட்டுச் சாய்ந்தும் முறிந்தும் கிடந்த தென்னைகளைவிட, தப்பி நின்ற சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னம்பிள்ளைகள் அடியோடு வெட்டப்பட்டுக் கிடந்தன.

எத்தனை வருடங்களாக எவ்வளவு பாடுபட்டு அவற்றை வளர்த்திருப்போம்.

இத்தனைக்கும் பிறகு என் அம்மா உயிரோடிக்க லாமென்று எப்படி நம்புவது?

அது- அது- அந்த எலும்புகள்-!

என்னையும் என்பிள்ளைகளையும் அமுதூட்டிச் சீராட்டி வளர்ந்த அன்புக் கரங்கள் உக்கி உருக் குலையும்வரை வந்து பார்க்கவே முடியாத ஒரு நிலை. ஒரு மாதத்திற்கு மேற்பட்ட ஊரடங்குச் சட்டம் உலகிற்குத் தெரியுமா?

அம்மா, நீ ஒரே நிமிடத்தில் போனாயோ?

வேதனையில் எங்களைத் தேடித் துடித்தாயோ? உன் படுக்கையின் பின்புறச் சுவரையே உடைத்திருக்கும் குண்டுகள் உன் உடலை எப்படித் துளைத்திருக்கும்? அன்று வானொலி அலறிய, கொல்லப்பட்ட புலிகளின் எண்ணிக்கையில் நீயும் சேர்க்கப்பட்டாயோ? யார் கண்டார்கள்?

என் இருதயம் நின்றுவிடவில்லை! எனக்குப் பைத்தியம் பிடித்துவிடவில்லை!

இந்த நிலை எனக்கு மட்டுமா?

எத்தனையோ பேர்களுக்கு ஏற்பட்ட ஒன்றுதான். இந்த நாட்டில் வாழும் நமக்கும் பேரிடிகளுக்குத் தாக்குப் பிடிக்கும் மனோவலிமை இருந்துதானாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலில் நின்ற காவலர்கள் வருமாறு உத்தர விடுகின்றனர். காலடி எடுத்து வைக்கிறேன். சிதறிக் கிடந்த நூல்களிடையே அவர்கள் மொழியிலேயே எழுதப்பட்ட பகவத் கீதையும், உபநிடதங்களும் ஈழத்து மண்ணிலிருந்த பிழைக்காகவோ என்னவோ வீரசுதந்திரம் வேண்டிய பாரதியின் வீரத்திருவுருவமும் சுதந்திரப் பாடல்களுங்கூட உக்கி உருக்குலைந்து கிடக்கின்றன. அருகே புறநானூறும், கலிங்கத்துப் பரணியும், மணிமேகலையும் சிலம்பும்.

கண்ணகியின் கோபச் சிரிப்புப்போய் கேலிச்சிரிப்பு பிறந்திருக்குமோ? நீதிகேட்டால் அதை வழங்க எந்தப்பாண்டியன் இங்கிருக்கிறானென்று.

நிமிர்கிறேன். காந்தியும் நேருவும் சேர்ந்தமர்ந்து சிரித்துக்கொண்டிருக்கும் படம். அதை 1967 இல் ஆசையுடன் வாங்கினேன். இந்த இருபது வருடங்களில் எத்தனையோ முறை அந்தச் சிரிப்பை இரசித்திருக்கிறேன். அந்தச் சிரிப்பு...

மில்க்வைற் மேலுறைகளைக் கொடுத்து என் பிள்ளைகள் வாங்கி வைத்திருந்த மூன்று குரங்குகளின் சிலை ஒரு மூலையிலிருந்து மேலே சிந்திக்கவிடாது தடுக்கிறது.

காவலர்களின் கட்டளைப்படி நான் வாழ்ந்து மகிழ்ந்திருந்த வீட்டினின்று வெளியேறி நடக்கிறேன். நாளை நமக்கு நாடும் வீடும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன்.

*ஈழநாதம் 1990*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது எங்கள் காலம்

நவமணி அக்காவையும் அவசர அவசரமாக புறப்படச்செய்து, வீதிக்கு அவளுடன் வந்து மினிபஸ்சின் வரவை மலர் எதிர்பார்க்கத் தொடங்கி பத்து நிமிடங்களுக்கு மேலாகிறது. தெருவை வேடிக்கை பார்ப்பதில் நேரம் கழிந்து கொண்டிருந்தது.

குறித்த நேரத்தில் போய்ச்சேரவேண்டும் என்ற அவதி இல்லாததும் யாழ்ப்பாண வீதியை கவனிப்பதிலிருந்து மனஆர்வமும் நேரம் போவதைப் பற்றிய கவலையை அவளிடம் அதிகமேற்படுத்தவில்லை.

நேரம் காலை எட்டு மணியை அண்மித்துக் கொண்டிருந்ததால் வீதியில் போக்குவரத்து அதிகமாக இருந்தது. அவள் அதுவரை கற்பனை செய்திருந்த மாதிரி வீதி வெறிச்சோடிக் கிடக்காதது ஏதோ நிம்மதியை தந்தது போலிருந்தது.

வீதியில் பெரும்பாலும் சைக்கிள்கள் தான் சென்று கொண்டிருந்தன. சிறுவர் முதல் வயோதிபர் வரை அனைவரும் சைக்கிள்களில் போக வேண்டிய நிலை. வயோதிபர் எனும்போது ஆண்கள் மட்டுமல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும்தான். பாடசாலைச் சீருடையுடன் சிறுபிள்ளைகளை முன்னும் பின்னும் இருத்தி, தாய்மார் சைக்கிள்களில் போய்க்கொண்டிருந்தனர். பிள்ளைகளைப் பாடசாலையில் விட்டுவிட்டு அவர்கள் வேலைக்குச் செல்வார்கள் என அவள் ஊகித்தாள்.

அந்தக் காலத்தில் மலர் சிறுபிள்ளையாக இருந்த போது அம்மா அவளைப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்லும் நினைவு வருகிறது. அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு ஒழுங்கையால் அவள் போன நாட்கள்... இன்று எப்படி மாறிவிட்டது!

மினி பஸ் வருகிறதா என நோட்டமிட்டாள். அதிகதூரம் பார்வையை செலுத்த முடியாது பாதையோரத்தில் சிறுசிறு மட்டை விரிச்சல் கூடுகள் தென்படுகின்றன.

"றோட்டுக்கரையில் என்ன கூடு அடைச்சிருக்கினம்?" நவமணியிடம் கேட்டாள்.

"மரக்கன்றுகள் வளர்க்கினம். திட்டமிட்டு பல ஊக்குவிப்புகளுடன் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது."

நவமணியின் பதில் அவளை அதிசயத்தில் ஆழ்த்துகின்றது. கூட்டிற்கு மேல் எட்டிப்பார்த்த இளம்தளிர் அவளுக்கு அவள் கற்பனையும் செய்யாத பல கதைகளைக் கூறத் துடிக்கிறது.

மினிபஸ் கண்ணிலே படுகிறது. பொருள்களை ஏற்றுவதற்காகச் செய்யப்பட்ட ஓர் சிறிய வான். தன்னுள் அடைய முடியாத அளவு ஆட்களை சுமக்க முடியாமல் சுமந்துகொண்டு அது அசைந்து வருகிறது. அதைப் பார்த்ததுமே அவளுக்கு அந்தப் பிரயாணத்தைப் பற்றிய ஒரு பயம் மனத்தைப் பற்றிக்கொள்கிறது. கொழும்பிலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பிரயாண அனுபவம் மனத்தினுள் ஓடி மறைகின்றது.

"இந்த நேரம் பஸ் இப்படித்தான் வரும். ஆனால், இப்ப போனால்தான் நாலைந்து வீடுகளுக்கும் போய் நேரத் திற்கும் திரும்பலாம்'' மலரின் திகிலைப் புரிந்து கொண்டவள் போல் நவமணி சொல்கிறாள்.

"மாமி வீட்டுக்குப் போய் மனுசிக்குப் பக்கத்தில் ஒரு மணித்தியாலம் என்றாலும் இருந்து கதைக்க வேண்டும். அவவைக் கண்டு ஆறு வருசமிருக்கும்." மாமியின் நினைவு, மலரை மினிபஸ் பயணத்திற்கு தயாராக்குகிறது.

த 18232 இலக்க மினிபஸ் அருகே வந்து நிற்கிறது.

"இறக்கமிருக்கு."

"இறங்கிறவை கெதியாய் இறங்குங்கோ."

ஒற்றைக்காலிலே மிதி பலகையிலே தொங்கி வந்த நடத்துநர் கீழே குதித்ததும் குதியாததுமாகச் சப்த மிடுகிறார்.

நல்லவேளையாக உள்ளேயிருந்த கணிசமானவர்கள் இறங்குகிறார்கள். முண்டியடித்துக்கொண்டு மலரும் நவமணியும் ஏறுகிறார்கள்.

ஓட்டுநரின் பின்புறமாக உள்ளே ஆசனமொன்றில் இருக்க இடம் கிடைக்கிறது.

"நல்லவேளை. நிற்பதென்றால் இந்தச் சின்னவானில் இரண்டாய் மடிய வேணும்.'' மலர் நினைத்துக் கொள்கிறாள்.

மினிபஸ் புறப்படுகிறது. அதிலிருந்து எழுந்த கிறிச், கடபுட சத்தங்கள் மலரின் கவனத்தை ஈர்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மினிபஸ்ஸை நோட்டமிடுகிறாள்.

"மேலும் கீழும் ஓட்டைகள் விழுந்து கட்டையிலே போக வேண்டிய எனக்கு மண்ணெண்ணையும், மரக்கறி எண்ணையும் ஊற்றி இவ்வளவு பாரத்தையும் சுமத்தி ஓட வைக்கிறார்களே" என புலம்புவது போலப்படுகிறது.

முன்புறக் கண்ணாடிக்குப் பதிலாக ஓர் பொலித்தீன் பேப்பர். அதனூடே குண்டும் குழியுமான வீதியைப் பார்த்து, பல்வேறு பாரங்களுடன் போகும் சைக்கிள் காரரையும் கவனித்து, அந்தப் பழமை வாய்ந்த வாகனத்தை முன்புறமிருக்கும் நான்கு பேருடன் ஐந்தாவதாக ஒரு மூலையில் ஒட்டியிருந்து, வெட்டித் திருப்பி ஓட்டும் ஓட்டுநரை ஒரு சர்க்கஸ்காரனை பார்க்கும் வியப்புடன் மலர் அவதானித்துக் கொண்டிருந்தாள்.

"ஆச்சிக்கு மயக்கம் வருகுதாம்" பின்புறமிருந்து ஓர் ஆரவாரம். அவள் திரும்புகிறாள். காற்றுவர வழியற்ற அந்த வாகனத்துள் நெரிபட்டு நிற்கும் மனிதர்களைச் சூழ்ந்து அந்த வாகனத்திலிருந்து எழும் எண்ணெய்ப் புகை! ஆச்சிக்கு மட்டும் என்ன எல்லோருக்கும் மயக்கம் வரத்தான் செய்யும்.

அந்த வயோதிபமாதைப் பார்த்ததும் மாமியின் நினைவு மறுபடியும் வருகிறது.

கொழும்பிலிருந்து வரும்போதே மாமியை எப்படியும் பார்க்க வேண்டுமென்பது அவளுடைய திட்டம். சிறுவயதில் ஏற்படும் உறவுகள் மனத்துடன் நன்றாக ஒட்டிக்கொள்ளும். பள்ளிப் பருவத்தில், பாடசாலையின் அருகிலிருந்த மாமி வீட்டில் அவளுடன் அதிகம் ஒட்டி உறவாடியது அவள் மேல் மிகுந்த பாசத்தை மலருக்கு ஏற்படுத்தியிருக்க வேண்டும். பாடசாலை மதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவேளையின்போதும் மாலையிலும் ஏன் சில சமயம் காலையிலும்கூட அவள் மாமி வீட்டுக்குப் போய் வருவாள்.

என்ன தின்பண்டம் என்றாலும் மலருக்காக ஒரு பங்கை எடுத்து வைத்துக்கொண்டு மாமி காத்திருப்பாள்.

மினிபஸ் ஓர் குலுக்கலுடன் நிற்கிறது.

"அந்த ஆச்சிக்காக நிறுத்துகினமோ?" நவமணி திரும்பிச் சொல்கிறாள்.

"கொஞ்சம் எல்லோரும் இறங்குங்கோ - டயர் காத்துப்போட்டுது மாத்தவேணும்." நடத்துநர் சப்தமிடுகிறார்.

பெரும்பாலானவர்கள் இறங்குகிறார்கள். அவர்களுடன் மலரும் நவமணியும் இறங்குகிறார்கள். ஓட்டுநரும், நடத்துநரும் அவசர அவசரமாக டயரை மாற்றுகிறார்கள்.

"இதென்ன ரயரப்பா! பெரிய பெரிய ஒட்டுகளோடை - இந்தக் கிடங்கும் குழியுமான றோட்டிலை இது எப்பிடி ஓடும் நவமணியக்கா?"

"அரசாங்கம் ரயர், ரியூப் எல்லாத்துக்கும் தடை விதிச்சாலும் நாங்களும் பிரயாணம் செய்து சீவிக்கத்தானே வேணும்" நவமணியின் பதில்.

சீருடையில் பாடசாலை மாணவிகள் மல்லிகைப் பூக்களாய் சைக்கிள்களில் செல்கிறார்கள்.

"எங்கடை காலத்தில் இப்படிச் சைக்கிள்களில் போகேலுமே? நடையிலைதான் போய் வாறது. நாங்கள் பள்ளிக் கூடத்தாலை வரேக்கை மாமி வீட்டை போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லிக்காய் பொறுக்கிச் சாப்பிட்டு தண்ணியும் குடிச்சிட்டு வாறது நினைவிருக்கே?"

"நவமணியக்கா அந்த நாள்களை மறக்கேலுமே? பின்னேரங்களிலை நாடகம் பழக, நெற்போல் பழக, எக்ஸ்ரா கிளாஸ் படிக்க எண்டு மாமி வீட்டைப் போய் முகம் கழுவி ரீ குடிச்ச பிறகு பள்ளிக் கூடம் போறனாங் களெல்லே."

ரியூஷன் கிடையாத காலமது. பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்யவும், திறமை குறைந்த மாணவர்களை முன்னேற்றவும் பாடசாலை ஆசிரியர்களே விடுமுறை காலங்களிலும் மாலை நேரங்களிலும் பாடசாலையில் வகுப்புகளை நடத்துவார்கள். எந்தப் பிரதிபலனையும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை.

தன்னை நல்லநிலைக்கு உயர்த்திவிட்ட பாட சாலையையும், ஆசிரியர்களையும் மலர் நன்றியுணர்வுடன் நினைத்துக் கொண்டாள். அந்த நன்றியை அவள் என்றும் மறந்ததில்லை.

பாடசாலை என்றால் அவளுக்கு உயிர். அதன் உயர்வுக்காக அவள் எவ்வளவோ பாடுபட்டிருக்கிறாள். இலங்கையின் பல பகுதிகளிலும் மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்தும் பழைய மாணவிகள் மூலம் நிதி சேகரித்து அதன் ஆக்கபூர்வமான முன்னேற்றங்களுக்கு உழைத்திருக்கிறாள். சிறிய பாடசாலையாக இருந்த அது மாடிக் கட்டிடங்களுடன் விஞ்ஞான கூடமும் சிறந்த நூல் நிலையமும், திறந்த வெளியரங்குமாக எவ்வளவு முன்னேறிவிட்டது.

"எல்லோரும் ஏறுங்கோ. அண்ணையவை ஒருக்கால் பஸ்ஸைத் தள்ளிவிடுங்கோ. ஸ்ராற் எடுக்க வேண்டும்." நடத்துநரின் வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"றெடி கல்லுக் கட்டினதை எடுத்துப் போட்டுத் தள்ளுங்கோ"

சிறிது தூரம் தள்ளியபின் மினிபஸ் புறப்படுகின்றது.

அந்த ஆச்சி முன்புறமாக அமர்ந்திருந்தார். மாமியின் நினைவை அவளுக்கு ஏற்படுத்தத்தான் வந்தாரோ?

மாமி எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். உதவி செய்யப் பின்னிற்க மாட்டார்.

பாடசாலைக் கட்டடநிதிக்காக கலைநிகழ்ச்சிகள் நடந்தபோது, மலர் லீவு எடுத்துக்கொண்டு வந்திருந்தாள். கலை நிகழ்ச்சிகளுக்கு வந்த விருந்தினர்களை உபசரிக்க, தேவையான பலகாரங்களை தயாரிக்க, மாமி தன் வீட்டிலேயே ஏற்பாடுகள் செய்து மிகவும் உதவி செய்தார்.

"பஸ்ஸை மரத்தடிக்கு கொண்டு போங்கோ. மேலால சத்தம் கேக்குது." நடத்துநர் கூறியதைக் கேட்டு எல்லோரும் வெளியே வர அவதிப்பட்டனர். ஒரே கூக்குரல். மேலே குண்டுவீச்சு விமானத்தின் இரைச்சல்.

"எல்லோரும் இடிபடாமல் ஒவ்வொருத்தராய் இறங்குங்கோ. ஒன்றும் நடக்காது. பயப்படாமல் இறங்குங்கோ." நடத்துநர் தன்னால் இயன்றதை சொன்னாலும் இடிபட்டு எல்லோரும் இறங்குகிறார்கள்.

மலரை இழுத்துக்கொண்டு மரமொன்றிற்குக்கீழ் ஓடுகிறாள் நவமணி.

"விழுந்து படு மலர் கெதியாய்."

எல்லோரும் அங்கங்கே விழுந்து படுத்திருக்கிறார்கள்.

"வொய்ங்'கென்று காதை அடைக்குமளவிற்கு தலைக்குமேல் பறக்கும் சத்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலும் உயிரும் உறைந்து போகின்றன.

எல்லாக் கடவுள்களின் பெயர்களும் கேட்கின்றன.

காதைப் பிளக்கும் டடம்... டடம்.. டடம்... சுமார் பதினைந்து நிமிடங்களாக உயிரைக் கையில் பிடிக்க வைத்துவிட்டது அது. மீண்டும் பயணம் தொடர்கிறது.

அந்த ஆச்சியைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

உயிரைக்காப்பாற்ற அந்தரித்த அந்தரிப்பில் அவலப்பட்டுப் பரிதாப கோலத்தில் சாய்ந்து கிடந்தார்.

"மாமியும் அந்த இரவில் அந்தரித்து ஓடிய ஓட்டத்தில் இப்படித்தான் போயிருப்பாளோ." மனம் மீண்டும் மாமியிடம் ஓடிப்போய் ஒட்டிக்கொள்கிறது.

என்ன மாதிரி அருமையான மனுசி. இன்று அந்த மாமிக்கு இப்படிப்பட்ட பேரிழப்புகள் ஏன்தான் ஏற்பட்டதோ? அந்த நல்ல மனம் இந்த அவலங்கள் எல்லாவற்றாலும் நலிந்து படுக்கையில் வீழ்ந்துவிட்டது.

இரவோடு இரவாக கையில் அகப்பட்டவற்றுடன் புறப்பட்டு வந்த அவர்களது வேதனை நிறைந்த கதைகளைப் பலரும் சொல்லியும் எழுதியும் அவள் அறிந்திருந்தாள். வீடு, தோட்டம், மாடு, ஆடு, சிற்றெறும்பு சேர்த்தது போல் காலம் காலமாக ஆசைப்பட்டதென்று, அருமையானதென்று, தேடித்தேடிச் சேர்த்த பொருட்கள் அத்தனையையும் விட்டுவிட்டு ஓடிவந்து எவ்வளவு காலம். நாட்கள், மாதங்கள், வருடங்கள் என்று காலம் நீண்டுவிட அந்த நினைவுகள் தரும் வேதனை, மனித மனங்களை அரித்து அவர்களை நோயாளிகளாக்கி விடுகிறது.

மாமியால் எழுந்து நடக்கவே முடியாதாம். பாடசாலை மாடிக்கட்டட திறப்புவிழாவில் மாடிப்படிகளில் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறி இறங்கிய சுறுசுறுப்பு எப்படி அவரிடமிருந்து பிரிந்திருக்கும்?

தன்னுடைய பாடசாலையின் மாடிக்கட்டடங்களை யும், ஆய்வு கூடத்தையும், கலையரங்கையும் பார்க்கப் பார்க்க மலருள் ஒரு பெருமகிழ்வும் உற்சாகமும் ஊற்றெடுக்க சிறுமிபோல் ஓட்டமும் நடையுமாகத் திரிந்தாள். மலருக்கு ஈடாக மாமியும் உடன் சென்றார் என்றால் அவரிடம் எவ்வளவு சுறுசுறுப்பு நிறைந்திருக்க வேண்டும்?

"கொட்டில்களைப் போட்டு ரியூசன் நடத்தி நல்லாய் உழைக்கினம் பார்."

நவமணியக்கா வீதியோரத்திலே தெரிந்த சில கொட்டில்களைக் காட்டிச் சொல்கிறாள்.

"பாடசாலை நேரத்தில் சீருடையில் பிள்ளைகள் ரியூசனுக்குப் போவார்களா?"

மனத்தில் சட்டென எழுந்த சந்தேகத்தினால் பெயர்ப்பலகையை மலர் அவதானிக்கிறாள்.

அவளுடைய பாடசாலையின் பெயர், பலகையில் தெரிகிறது.

மலர் அவசரமாக கழுத்தைத் திருப்பி உன்னிப்பாக பார்க்கிறாள்.

அதே பெயர்தான்!

அந்தப் பாடசாலை அந்தக் கொட்டில்களில்...

*வீரகேசரி - 1995*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றாலும்

சைக்கிளில் விறகைக் கட்டி, நிதானமாக அதைத் தள்ளிச் சென்று, இலாவகமாக அதில் ஏறி, அதைச் செலுத்த ஆரம்பிக்கிறான் பகீரதன். அவன் சைக்கிளை வேகமாகச் செலுத்த எண்ணினான். ஆனால், அதற்கு முடியாமலிருந்ததற்குப் பல காரணங்கள்.

சைக்கிளிலிருந்த விறகின் பாரம் ஒருபுறம். பளையிலிருந்து இந்தமேடும் பள்ளமுமான வீதியில் கொதிக்கும் வெய்யிலில் வந்த களை ஒருபுறம். இவ்வளவு காலமும் இந்த வீதியில் பாரத்துடன் ஓடியதால் சைக்கிளின் பழுதடைந்த நிலை ஒருபுறமுமாக சைக்கிளை அவன் நினைத்த அளவு ஓட முடியவில்லை.

யாராவது விறகு விலை கேட்பார்களா என்று எதிர்பார்த்து அவனது கண்கள் சுழன்றன. தகுந்த விலை தந்தால் கொடுத்துவிட்டுப் பாரமின்றி வீட்டிற்குப் போய்ச் சேரலாம். விறகை வீடுவரை கொண்டு சென்றும் என்ன செய்வது?

வீட்டிற்கும் விறகு தேவைதான். அம்மா அலம்பல். சுள்ளிகளை வைத்து அடுப்பெரிக்கப்படும் கஷ்டம் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்ததுதான். ஆனால், அதைவிடப் பணத்தேவையின் சுமை அவனை அதிகம் அழுத்தியது.

இந்தச் சைக்கிளை ஓட்டுவதைவிட, தங்கை நிர்மலாவின் திருமணம் பெரும் சிரமமாக அவன் முன்னே நின்றது. நிர்மலாவை அடுத்து சியாமளா.

'சிறுகக்கட்டிப் பெருக வாழ்' என்பதற்கேற்ப அவர்களுடைய மாவிட்டபுரத்து வீடு சிறியதென்றாலும் அங்கே சீரும் சிறப்பும் மகிழ்ச்சியுமாக வாழ்ந்த காலம் நினைவில் நிழலாடுகிறது. அந்த மகிழ்வைக் குலைக்க வென்றே 1990 இல் போர் ஆரம்பமாகியது.

வானத்தில் கழுகுகள் போல் வட்டமிட்டு குண்டுவீச்சு விமானங்களும் சுற்றிவந்து சுட்டுத்தள்ளிய ஹெலிகொப்டர்களும் தொடர்ந்த ஷெல் வீச்சுமாக நடந்த படையெடுப்பிற்குப் பயந்து, வீட்டையும் தோட்டந் துரவையும் விட்டு இரவோடிவராக அவர்கள் ஓடிவந்தார்கள்.

மறுநாள் வேறுசிலருடன் வீட்டிலிருந்த ஒரு பகுதி பொருட்களை உழவு இயந்திரத்தில். ஏற்றிவந்தபோது கூவிவந்த ஷெல்லொன்று அருகில் விழுந்து வெடித்தது. அதிர்ஷ்டவசமாக அம்மா உயிர் தப்பினாலும் ஷெல் சிதறலொன்று அவரது வலது காலைப் பறித்துக் கொண்டது.

சாதாரணமாகச் சைக்கிளோடுவதே கஷ்டமாக இருக்கும். குண்டும் குழியுமான பாதை, யாழ்ப்பாணத்தின் பெரும் பகுதியைச் சேர்ந்த எல்லா மக்களும் ஓடிவந்து ஒரு சிறு பகுதியில் குவிந்து, எல்லோருமாக உபயோகித்ததால் மேலும் மோசமாகிக் கிடந்தது. அதில் விறகுச்சுமையுடன் ஓட அவன் மிகவும் கஷ்டப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட வருமானமுமில்லாமல், பணக்கஷ்டத்துடன் சொத்தை இழந்த மனவேதனையும் சேர்ந்திருந்தது போதாதென்பதுபோல அப்பாவின் நிலையும் அவர்களது வேதனையை அதிகரிக்கச் சேர்ந்து கொண்டது.

இந்தப் பெருஞ்சுமையைக் குறைக்க வெளிநாடுசென்று உழைப்பதுதான் வழியென்று முடிவுகட்டினான் மூத்தவனான அரவிந்தன்.

நினைத்தவுடன் நடக்கக்கூடியதா அது? இரண்டு இலட்சம் வேண்டுமென்றார்கள் ஏஜென்ஸிகள்.

அம்மா தெரிந்தவர்களிடமெல்லாம் கெஞ்சிப் பார்த்தாள். ஈடுவைக்கவோ விற்கவோ எதுவுமில்லையே. எதை நம்பி பணம் தருவார்கள்? இறுதியாக அம்மாவிடம் ஒரு பொருளை விலைக்குக் கேட்டார் துரைசாமி.

"தங்கச்சி, நீ யோசியாதை. பெடியனை வெளியிலை அனுப்பிறது என்ரை பொறுப்பு. ஆனால், என்ரை பிள்ளை லோஜியை அவன் கலியாணம் கட்டவேணும்."

இதை ஏற்பதா, விடுவதா என்று அப்பாவும், அம்மாவும் இரவுபகலாக ஏதேதோ விவாதித்து, எந்த முடிவும் எடுக்க முடியாமல் குழம்பித் தவித்தது அவனுக்கு நினைவிருக்கிறது. அரவிந்தன்தான் அதில் எந்தப் பிரச்சினையுமில்லையென ஒரு முடிவு கண்டான்.

வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பெற்ற அம்மாவும் ஒரு நிபந்தனை போட்டாள்.

"அரவிந்தனை விட்டால் நிர்மலாவின்ரை கலி யாணத்தை எப்படி ஒப்பேத்துறது? அவன் உழைச்சு அவளின்ரை கலியாணத்தை முடிச்சுப்போட்டு உங்கடை பிள்ளையைக் கட்டட்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் நிபந்தனையின் காரணம் அவனுக்கு அப்போது புரியவில்லை. ஆனால், மனித வியாபாரம் நடப்பது போல் மனதினுள் ஓர் அருவருப்பு நெளிந்தது.

அரவிந்தன் சுவிஸ் போய், பணம் அனுப்பத் தொடங்கியதும் அவர்களது நிதி நிலை சீரடைந்தது...

சாலையின் ஓரமாக ஓரளவு சீராக இருந்த ஓர் ஒற்றையடிப்பாதை போன்ற வழியில் அவன் சைக்கிளைச் செலுத்தத் தொடங்கியதும் சிரமம் குறைந்தது போன்று ஓர் உணர்வு...

ஒரு வருடம் அரவிந்தன் அனுப்பிய பணத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டு, நிர்மலாவுக்குத் திருமணம் பேசத் தொடங்கினார்கள்.

எல்லோருமே சீதனமாக வீடுவேண்டுமென்று கேட்டார்கள். இவ்வளவு காலமாகப் போய்ப் பார்க்கக்கூட முடியாத மாவிட்டபுரம் வீட்டைச் சீதனமாக ஏற்க எவரும் முன்வரவில்லை.

சீமெந்து உற்பத்தி செய்த யாழ்ப்பாணத்தில் அந்த நிலையும்போய், சீமெந்து கொண்டுவருவதும் தடை செய்யப்பட்டதால் வீடுகட்டுவதும் இயலாத காரியம்.

யாழ்ப்பாண நகரத்தில் பெரிய கடைகளாக இருந்த கடைகளெல்லாம் சாலையோரத்தில் போட்ட சிறு கொட்டில்களில் வியாபாரம் செய்ததால் சன நடமாட்டம் அதிகமாக இருந்தது. பகீரதனால் மேற் கொண்டும் சீரான பாதையிலே போக முடியவில்லை. மீண்டும் குழிவிழுந்த பாதையிலே சைக்கிளை சிரமப்பட்டு ஓட்டத் தொடங்கினான்.

அவர்கள் சங்கானையில் ஒரு வீட்டை வாங்கினார்கள். ஆடு, மாடு, கோழி எல்லாம் வளர்த்து, ஓரளவு வருமானம் பெற சொந்த வீடு வசதியாகவும் அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலாவிற்கு திலீபனை மணமுடிக்க நிச்சயித்தபோது வீட்டோடு இரண்டு இலட்சம் சீதனமும் திருமணச் செலவுக்குப் பணமும் கேட்டார்கள்.

அம்மா அரவிந்தனுக்குக் கடிதம் போட்டாலும் போய்ச் சேராது. தபால் அதிகாரிகளின் பெருமுயற்சியால் சில மாதங்களுக்கு ஒரு தடவைதான் கப்பலில் தபால்கள் அனுப்பப்பட்டன. கொழும்பிற்குச்செல்பவர்களிடம் கடிதத்தைக் கொடுத்துப் போட்டாலும் அரவிந்தனின் பதில் வந்து கொழும்பிலே பல மாதங்கள் கிடந்து, இராணுவத்தினர் பிரித்துப் பரிசோதித்தபின் அவர்கள் பெருமனதுபண்ணி அனுப்பும் வேளையிலேதான் கப்பல் மூலம் வந்துசேரும்.

கிளாலியூடாகப் பயணம் செய்யப்பயந்த அம்மாவையும் அரவிந்தனுடன் தொடர்புகொள்ள வேண்டிய அவசரமும், அவசியமும் கொழும்பு செல்ல வைத்தது. கொழும்பிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பணம் பெற்று வருவதுதான் அம்மாவின் திட்டம்.

அரவிந்தனின் கையில் பணமிருக்கவில்லை. அவன் மூன்று வாரங்களின் பின்புதான் ஒருவரிடமிருந்து கடனாகப் பணம் பெற முடியுமெனக் கூறினான். அதனால் பணத்தை வங்கி மூலம் அனுப்பும்படி கூறிவிட்டு அவள் திரும்பினாள்.

பணம் வருமென்ற நம்பிக்கையில் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

அதற்குள் துரைசாமி அவசரப்பட்டுக் கொண்டிருந்தார். மூன்று வருடங்களுக்குமேல் அவர் பொறுத்து விட்டார். சமாதானப் பேச்சுவார்த்தை என்று நிலைமை ஓரளவு பரவாயில்லாமலிருக்கும்போது மகளை அனுப்பி விடவேண்டுமென்பது அவரது ஆசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் தடை சொல்ல முடியாது என்று அவர்கள் சம்மதித்தபோது அரவிந்தன் தயங்கினான். ஏற்கனவே பட்ட கடன்களைத் தீர்க்காமல் தனது திருமணத்திற்குப் பணம் சேர்ப்பது சிரம சாத்தியம் என அவன் கருதினான். ஆனால் துரைசாமியர் பிடிவாதமாக மகளை அனுப்பிவிட்டார்.

அப்போதுதான் அந்தப் பிரச்சனை ஏற்பட்டது. சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்து திடீரென போர் தொடங்கியது. மீண்டும் கடிதங்கள் கொழும்பிலை தேங்கின. அரவிந்தன் அனுப்பிய வங்கி உண்டியல் கொழும்பிலேயே தடைப்பட்டுவிட்டது.

பணம் வந்து சேர்ந்ததும் தருவதாகக் கூறி திருமணத்தை நடத்த தாயும், தந்தையும் எவ்வளவோ முயன்றனர். ஆனால், திலீபன் பணந்தான் முக்கியம் என்ற தோரணையில் வெட்டொன்று துண்டு இரண்டாக மறுத்துவிட்டான். துரைசாமியரின் அழுத்தத்தினால் அரவிந்தனின் திருமணம் நடந்தேறிவிடுகிறது.

இந்த நேரத்திலேதான் போர் உச்சக்கட்டத்தை அடைந்து வலிகாமம் பகுதியைவிட்டு மக்கள் இடம்பெயர்ந்து தென்மராச்சிக்கும் வடமராச்சிக்கும் சென்றனர். உடுப்பதற்குத் தேவையான அளவு உடைகளைக்கூடக் கொண்டுவராமல், அரவிந்தனின் உழைப்பில் வாங்கிய அத்தனை பொருட்களையும் விட்டுவிட்டு, ஓரளவு வருமானம் தந்த கால்நடைகளையும் விட்டுவிட்டு அவர்கள் மீண்டும் இடம்பெயர்ந்து சாவகச்சேரிக்கு வந்து சேர்ந்தனர்.

இரண்டாவது வீட்டையும் இழந்து கொட்டிலொன்றில் வாழத் தொடங்கினர். வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய அவன் விறகுவெட்டிவந்து விற்கத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வாரம் வங்கிக்குச் சென்றபோது பணம் வந்துவிட்டதாக வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

அம்மா வெள்ளிக்கிழமை மாப்பிள்ளை வீட்டிற்கு திருமணநாள் குறிப்பது பற்றி முடிவுசெய்யச் சென்ற போது அங்கு அவருக்கு வரவேற்புச் சரியாக இல்லை. எந்த முடிவுமில்லாமல் வந்தது மட்டுமல்ல, அன்று முதல் ஏதோ பயமும் ஏமாற்றமுமாக உணர்ந்து ஏங்கிப் போயிருந்தது வீட்டின் அமைதியையே கெடுத்திருந்தது.

யாருமே விறகு கேட்கவில்லை. துரதிஷ்டம் அவனைத் தொடர்ந்துகொண்டே இருந்தது. களைப்புடன் வீட்டின் முன்னே போய் இறங்குகிறான்.

வேப்பமரத்தடியிலிருந்த கல்லில் திலீபனின் அண்ணன் அமர்ந்திருக்க, அப்பா அருகிலிருக்க, அம்மா அருகே நின்றிருந்த கோலம் ஒரு பீதியை மனதில் ஏற்படுத்துகிறது. அவனும் அருகே செல்கிறான்.

"நீங்களும் யோசிக்கவேணும். திலீபனும் கையிலை மடியிலை ஒண்டுமில்லாமல் வந்திருக்கிறான். இனிச் சங்கானைப்பக்கம் போகும் மாதிரியும் தெரியேல்லை. இந்தக் காசோடை மட்டும் கலியாணத்தை முடித்து என்ன செய்யிறதெண்டு அவன் கேட்கிறது சரிதானே?"

திலீபனின் அண்ணனின் சொற்கள் அவனது காதுகளில் விழுந்து, மனதில் பட்டு அதனால் எழுந்த அடக்க முடியாத சீற்றத்தை அவன் சொற்களாக்குவதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்ல முடியாதது

சர்மிளா தனது கைப்பையிலிருந்த பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்து வெளியே வைத்துக் கொண்டிருந்தாள். தெரிந்தெடுத்து மிக அத்தியாவசிய மான சிலவற்றை மட்டும் சிறு பர்ஸினுள் வைத்தாள்.

சில மாதங்களின் பின் "இது ஹாண்ட்பாக்கா? மூட்டையா?" என்று அவளது தோழிகள் கேலிசெய்வது நினைவிற்கு வருகிறது.

இடம்பெயர்ந்து அவர்கள் ஊரூராக ஓடிக் கொண்டிருந்த சமயம், அத்தியாவசிய தேவைகளுக்கான பொருட்கள், பாதுகாப்பாக வைக்கவேண்டிய பொருட்க ளென்று நிறைந்திருந்த கைப்பை இன்று வெறுமையாக வேண்டிய கட்டாயம்.

ஒரு காலத்தில் அவளுடைய அறையினுள் மிக நெருங்கிய தோழி வந்தாற்கூட அவளுக்குப் பிடிப்ப தில்லை. படிப்படியாக வீடில்லை, ஊரில்லை, கட்டிய குடிசையில்லை என்று ஆகி அவளது அந்தரங்கம் பேணும் மனோபாவத்திற்குப் படிப்படியாக அடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து, இன்று சிறு கைப்பையினுள் வைத்திருக்கும் பொருட்களையே ஒரு கிலோ மீட்டர் தூரத்தினுள் ஐந்தாறு இடங்களில் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துத்தேடும் நிலை. அதன் பயனாக ஏற்பட்ட முடிவையே அவள் செயற்படுத்திக் கொண்டிருந்தாள்.

"ஆசை மாமி.. ஆசை மாமி..". செல்லராசா அத்தானின் குரலைக்கேட்டுக் கதவைத் திறக்கிறாள், சர்மிளா.

"ஆர் செல்வராசாவே? வா வா. என்ன விடிய முத்தி வந்து நிக்கிறாய்?" அம்மா விஷயமறியும் ஆவலோடு அடுப்படியிலிருந்து வெளியே வருகிறாள்.

"விடிய முந்தி வந்தகாலம் போட்டுது. அப்பாவுக்கு இராத்திரி சரியான வயிற்றுவலி. அவரைக்கூட காலமை ஊரடங்கு முடியத்தான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனனான்." செல்வராசா இரவு அனுபவித்த அவஸ்தை அவனது குரலிலே தெரிகிறது.

"சரியான கடுமையே? ஆஸ்பத்திரியிலை என்ன சொல்கினம்?"

"அவை முதலே பார்த்து, கொழும்புக்குக் கொண்டுபோகச் சொன்னவைதானே. வயித்திலை பெரிய ஓப்பரேஷன் செய்யவேணும். இங்கை டொக்ரர்மாரும் இல்லை. மருந்துகள் வசதிகள் எல்லாம் குறைவு." செல்வராசா நிலைமையை விபரிக்கிறான்.

"ஏன் கொழும்புக்குக் கொண்டு போகேல்லை?" அம்மா கேட்கிறாள்.

"கொழும்புக்குப் போகத் தவமெல்லோ இருக்க வேணும். இவ்வளவு தவமிருந்தால் கடவுள்கூட வந்திடுவார். ஆனால் இந்தக் கொழும்புப் பயணம் சித்திக்காது. இனிக் கதைச்சென்ன? இப்ப அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை மோசமாய்ப் போச்சு. உங்களுக்குச் சொல்லிப் போட்டு, தங்கச்சிக்கும் சொல்லிப்போட்டு வர எண்டுதான் வந்தனான்."

"ஆர் மனோன் மச்சாளுக்குச் சொல்லவோ? சொல்லப்போறது கலட்டி சென்றியாலை போயிடலாம். ஆனால், தட்டாதெரு சென்றியாலை வாறது கஷ்டம். நீங்கள்தான் சொல்லப் போகவேணுமே?" அவனைத் தடுக்க விரும்புபவள்போல சர்மிளா கூறுகிறாள்.

"வாறது கஷ்டமெண்டது தெரியும். இதாலைதானே நான் தங்கச்சி வீட்டுப்பக்கம் போயே கனநாள். ஆனால், அப்பாவும் மனோன் மனோன் எண்டுதான் தேடுகிறார். அவருக்கு ஒண்டென்டால் உதிலை இருக்கிற தன்னைக் கூப்பிடேல்லையெண்டு அவளும் வந்து சண்டை பிடிப்பள்." செல்வராசா தன் பிரச்சினையை விளக்குகிறான்.

"என்ன பிள்ளை கதைக்கிறாய்? உதிலை மில்க் வைற்றுக்கு எப்பன் தள்ளி இருக்கிற மனோன் வீட்டை போறதுக்கு ஏதோ தூரம் தொலைக்குப் போற மாதிரியெல்லே வர ஏலாது எண்டு சொல்லுறாய்" அம்மா அவளுடைய கூற்றை நம்பத் தயாராக இல்லை.

"அத்தான், மனோள் மச்சாளுக்குச் சொல்லப்போய் நீங்களும் வந்து சேரமாட்டியள். அவருக்கொண்டெண்டால் இரண்டு பேருமில்லாமல்தான் காரியம் நடக்கும். யோசிச்சுப்பாருங்கோ. வாற திங்கள்தான் நீங்களோ மச்சாளோ வரலாம்.

"அப்ப என்ன செய்ய?" செல்வராசா யோசனையுடன் தயங்குகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தகப்பனுக்கு வருத்தமெண்டால் கனடாவிலை இருக்கிற பிள்ளை அடுத்தநாள் வரக்கூடிய காலத்திலை இதென்ன கூத்து?" அம்மா புறுபுறுக்கிறாள்.

"அம்மா சும்மா புறுபுறுக்கிறதை விட்டிட்டு, இப்ப என்ன செய்யலாமெண்டு சொல்லுங்கோ. வேலை செய்யிற ஆக்களும் பள்ளிக்கூடப் பிள்ளையளுந்தான் பண்டுக்கு அங்காலையிருந்து ஒவ்வொரு நாளும் வந்து போகலாம்."

"அதென்ன மேனை பண்டு?"

"அதம்மா பாதுகாப்புக்காக அணை மாதிரிக் கட்டி இருக்கும். விவரம் கேக்கிறது பிறகு கேக்கலாம். கதைக்க விடுங்கோ. மாலினி அங்காலையிருந்துதான் வேலைக்கு வாறவ. அவகிட்ட ஒரு கடிதம் குடுத்துவிடுவம். எழுதித் தாறீங்களே?" ஒரு தீர்வுகண்ட ஆசுவாசம் அவளது பேச்சிலே தெரிகிறது.

"நீங்களே எழுதிக் குடுங்கோ" சகோதரிக்கு அறிவிக்க முடியாத நிலையே ஒரு அவஸ்தையாகி நெஞ்சுள் உருள அவனுக்கு எதையுமே செய்யத் தோன்றாத நிலை.

"வாறன் மாமி. வாறன் சர்மி." அவன் திரும்பி நடக்கிறான்.

"பெட்டையெண்டால் அண்ணைக்கு உயிர். பாவம். மனோன் வந்து கண்ணிலை முழிச்சிட வேணும்." அம்மா சொல்லிக்கொண்டே உள்ளே போகிறாள்.

சர்மிளா அவசரமாக ஒரு கடிதத்தை எழுதிக்கொண்டு புறப்படுகிறாள்.

"அம்மா போட்டு வாறன்." சைக்கிளை அவள் எடுக்கவும் அம்மா தொடங்குகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப சாளி புதிசாய் நிறைய வந்திருக்காமெல்லே. நெடுக உப்பிடிச் சைக்கிளோடை கஷ்டப்படாமல் ஒண்டை வாங்கன் பிள்ளை."

அவளுக்குச் சிரிப்பு வருகிறது. நேற்று அலுவலகத்திற்கு ஒருவர் கொழும்பிலிருந்து எழுதியிருந்த புகார் நினைவிற்கு வந்தது. கொழும்பிலிருந்து அனுப்பும் கடிதம் உடனடியாக யாழ்ப்பாணம் வரும் நிலை ஏற்பட்டும். தன் கடிதத்திற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லையென அவர் எழுதிய கடிதம் இரண்டு மாதங்களின் பின் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது. 'பாவம் அவர் கொழும்பிலிருக்கிறார். இந்த அம்மா யாழ்ப்பாணத் திலேதான் இருக்கிறா.'

அடிக்கடி செக் பொயின்ரில் கழற்றப்படும் செயின் கவரைச் சரிசெய்யவே அவள் கஷ்டப்படுகிறாள். மண்ணெண்ணையிலேதான் சாளி ஓடவேண்டும். வீதி குண்டும் குழியும். அடிக்கடி இறக்கி உருட்டி, அக்குவேறு ஆணிவேறாக்கி சோதித்து... சீ இதைவிட நடந்து போகலாம்.

"அதுக்கு முதல் அம்மா தண்ணி அள்ளக் கஷ்டப்படாமல் ஒரு மோட்டர் வாங்கப்போறன்."

"விசர்க்கதை கதையாதை பிள்ளை. கறன்ற் ஒழுங்காய் வராதாம். வந்தாலும் லைற்றே மூண்டு பல்புக்கு மேலை போடக்கூடாதெண்டு கட்டுப்பாடு." சர்மிளா எதிர்பார்த்த பதில் வருகிறது.

"எல்லாம் அப்பிடித்தானம்மா, குடிக்கிறது கூழ் கொப்பளிக்கிறது பன்னீர்" அவள் கூறிக்கொண்டே புறப்படுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐடென்ரிக்காட் எடுத்திட்டியே?" இப்போது அம்மா வழியனுப்புவது இப்படித்தான்.

சந்தியிலுள்ள சோதனையிடத்தில் இறங்கும்போதே அவளது கண்கள் நீண்டிருந்த வரிசையைக் கணக்கெடுக்கிறது.

பஸ்ஸில் வந்தவர்களும் இறங்கி நின்றதால் கூட்டம் அதிகமாக இருந்தது. காலை உணவை அரைகுறையாக முடித்ததற்கு அடையாளமாக எதையோ மென்றபடி வாயைத் துடைத்துக்கொண்டு தனது சகாவிற்கு உதவியாக வந்த வீரரைப் பார்த்ததும் சோதனை விரைவுபடுத்தப்படும் என்ற ஆறுதல் அவளுக்கேற் பட்டாலும் அடைப்பினுள் நின்ற பெண் ராணுவ வீரரைக் கண்டதும் கசப்புணர்வு விரவுகிறது. அன்பும் பணிவுமான இவர்களது நடத்தை உண்மையானது தானோ என்றொரு சந்தேகத்தை ஏற்படுத்த இவர்களது சோதனை நடைமுறையும் ஒரு காரணம் எனலாம். ஓர் அடைப்பிற்குள் பரிசீலிப்பதாக ஒரு பாவனை. ஆனால் அதனை எத்தனைபேர் கவனிக்கிறார்கள் என்பதை அவள் கவனித்திருக்கிறாள். கைப்பை சைக்கிள் என்பவற்றுடன் அவளையும் தடவிப் பார்த்து, பரிசீலனை முடிகிறது. நல்லவேளையாக அவள் யாழ்ப்பாணத்திற்கேயுரிய நாற்பது வயது கடந்த குமர் என்ட தால் தடுத்துவைத்து நடைபெறும் கேலிப்பேச்சுகளுக்கே ஆளாவதில்லை.

சிறிது தூரம் நடந்துசென்று அவள் சைக்கிளில் ஏறிச் செல்கிறாள். இப்படி ஏறி இறங்கிக் காரியாலயத்தைச் சென்றடைய அரைமணி நேரமாகிறது.

மாலினி வர நேரமாகும். அணைக்கு அப்பாலுள்ள பெரிய பிரதேசத்திலிருந்து வரும் அனைவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டாதெரு பரிசோதனைச் சாவடியால் மட்டுமே வருவதென்றால் எப்படி இருக்கும்?

அவள் வேலையில் ஈடுபடத் தொடங்கியபோது வாகீசன் வந்து அந்தப் பரபரப்பான செய்திகயைக் கூறினான்.

தட்டாதெரு செக்பொயின்ரிலை பெடியள் அடிச்ச ஆர்பிஜியோ கிறனைற்றோ வெடித்து கனபேர் காயமாம்.

"கிறனைற்றாலை கொஞ்சப்பேர், சூடுபட்டுக் கொஞ்சப்பேர் எண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் செத்து முடியப்போறம்." திவாகரன் வேதனையோடு கூறுகிறான்.

"உலகத்திலை எந்த மூலைக்குப் போனாலும் எங்களுக்கு நிம்மதியில்லை. அதைவிட ஏதோ எங்கடை இடத்திலையே கிடந்து சாவம்" தேவகி பேசியது தனக்குத்தானே சமாதானம் கூறுவதுபோலிருந்தது.

மாலினி இனி வரமாட்டாளென்பது சர்வநிச்சயம். அவளோ வேறு தெரிந்த யாருமோ இதற்குள் அகப்பட்டிருப்பார்களா?

அலுவலகத்திலிருந்து இருவர் அதுபற்றி அறிந்துவரப் புறப்படுகிறார்கள்.

'இப்போது என்ன செய்யலாம்? மனோன் மச்சாளுக்கு யாரிடம் விவரம் சொல்லியனுப்பலாம்? மாமாவுக்கு ஏதாவது நடந்தால்...?' சர்மிளாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

"சீ இது என்ன வாழ்வு?" அன்று இருபத்தைந்தாவது தடவையாக அவளது மணம் சலித்துக்கொண்டது.

மதிய உணவுவேளையில் போய் மாமாவையும் பார்த்துவிட்டு அத்தானிடம் விடயத்தைச்சொல்லி ஏதாவது முடிவு செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிய உணவு நேரம் அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டு வைத்தியசாலைக்குப் போகிறாள். யுத்தத்தின் கோரப் பிடிக்குள் உடைந்து, இடிந்து, வைத்திய சாலையின் பெரும்பகுதி பரிதாப நிலையிலே கிடக்கிறது.

மாமா மயங்கி உணர்வற்றுக் கிடப்பதுபோலப் படுத்திருந்தார். செலாயின் குழாய் பொருத்திய அவரது கையைப் பற்றியபடி செல்வராசா அமர்ந்திருந்தான்.

"அப்பா, சர்மி வந்திருக்கிறாள் பாருங்கோ." அவளைக் கண்டதும் தந்தையின் தலையை வருடி நெற்றியிலே கைவைத்து மெல்ல அவரை விழிக்கச் செய்ய முயன்றான்.

"மாமா, மாமா, என்ன செய்யுது?"

அவர் மெல்லக் கண்விழித்தார். சிறிது நேரம் வெறித்துப் பார்த்தபின் உதடுகளை அசைத்தார். குரல் சரிவர எழும்பவில்லை.

"பிள்ளை மனோன்" அதுதான் அதன் அர்த்தமென்பது அவளுக்குப் புரிந்தது.

நெஞ்சுக்குள் குமுறிய ஓர் உணர்வு கண்ணீராய்ப் பரிணமித்துத் ததும்பியது.

"இண்டைக்குத் தட்டாதெருவிலை கிறனைற் எறிஞ்சிட்டாங்களாம்."

"ஓமோம். இரண்டு பேர் சரி. எட்டுப்பேர் காயம். இங்கை கொண்டந்ததெண்டு கதைச்சவை." செல்வராசா தனக்குத் தெரிந்ததைக் கூறுகிறான்.

"அதாலை மாலினி வேலைக்கு வரேல்லை. மனோன் மச்சாளுக்கு சொல்லியனுப்ப என்ன செய்யலாம்?" அவள் ஆலோசனை கேட்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இண்டைக்குச் சொல்லிவிட ஏலாதே. அப்பா கண்ணை முழிச்சா மனோான் எண்டுதான் கூப்பிடுகிறார்." செல்வராசா தவிப்புடன் கூறுகிறான்.

"என்ன தம்பி அப்பாவுக்குக் கடுமையாம்." சாந்தலிங்கம் சித்தப்பா வந்தார்.

செல்வராசா தன் மனச்சுமை முழுவதையும் இறக்கி வைக்கிறான்.

"இண்டைக்குப் போய் வரேலுமோ தெரியாது. நாளைக்குக் காலமை நான் மனோானுக்குச் சொல்லிப் போட்டு வாறன்" அவரின் கூற்று அவனுக்கு ஆறுதல் தருகிறது.

"அப்பநான் வாறன். வேறை ஏதும் செய்யேலுமோ எண்டு பாக்கிறன்" சர்மிளாவும் விடைபெறுகிறாள்.

யாழ்ப்பாணத்து வயோதிபப் பெற்றோரின் நிலை வரவர இப்படியாகிவிட்டதே. பிள்ளைகளை வெளி நாட்டிற்கு அனுப்பிவிட்டு, அவர்களைக் காணத்துடித்து கண்மூடிய காலம்போய், கொழும்பிலிருந்தவர்களுக்கு அறிவிக்க முடியாத மரணங்கள் வந்து, பரந்தனிலிருந்த பிள்ளைகூடப் பார்க்க முடியாமல் மாறி, இன்று யாழ்ப்பாணத்தில் பக்கத்திலிருப்பவர்கள் கூடப் பார்க்க முடியாத நிலை. சர்மிளா சிந்தித்துக்கொண்டே திரும்புகிறாள்.

மாலையில் வீடுசென்றதும் அம்மாவின் முதற்கேள்வி "மனோனுக்குச் சொல்லி அனுப்பிப்போட்டியே பிள்ளை? அந்தாள் அடிக்கடி அவளைத்தான் கூப்பிடுது." தன் அண்ணனின் இறுதி ஆசையை நிறைவேற்ற அம்மா முயல்வதும், தன் ஒரே மகளை மாமாவின் பெற்ற மனம் தேடித்தவிப்பதும் அவளுக்குப் புரிகிறது. ஆனால்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடி பிள்ளை யோசிக்கிறாய்? உதிலை இருக்கிற வீடு ஏலுமெண்டா நடந்துபோய் வந்திடுவள்."

சர்மிளா அம்மாவைப் பரிதாபமாகப் பார்க்கிறாள். கையகல யாழ்ப்பாணம். அதன் போக்குவரத்துச் சிக்கல் தட்டாதெரு சென்றியில் தவமிருந்து பரலோகம்கூட போக நேரும் நிலை இங்கேயிருக்கும் அம்மாவுக்கே விளங்கவில்லையே.

"அவங்களுக்கென்ன இரக்கமில்லையே?"

அம்மாவின் கேள்வி அவளை, பழைய நினைவுகளுள் மூழ்கச் செய்கிறது.

'எங்கள் வீடு எங்கள் ஊர்' என்று அங்கலாய்த்த மனம், சுடுகாட்டைச் சந்திக்கும் மனோநிலையில், நெருப்பில் கால் மிதிக்கும் ஜாக்கிரதையுடன் புத்தூர்ச்சந்தியில் கால் பதித்த கணம்!

அந்தக் கணம்.

உள்ளே புரண்டு வியாபித்த வேறுபட்ட உணர்வுகள்...

அதே வயது. அதே உடை... பழக்கமற்ற கண்களுக்கு வேறுபாடே தெரியாத சிரித்த முகங்கள்...

ஆனால் இப்படிச் சிரித்த எத்தனையோ பேரை பின் எப்படியெல்லாமோ சந்தித்து...

பொன்னென்று அள்ளப்போய் கை புண்ணாகிப் புண்ணாகி பாலைவனமாகிவிட்ட எங்கள் மனங்கள் அத்தனை சுலபத்தில் பசுமை கண்டுவிடாது.

"அவர்களோடை போய்க் கதைச்சுப் பார் பிள்ளை"

அவள் அம்மாவைப் பார்த்து விரக்தியாகச் சிரித்தாள்.

"ஊரடங்குச் சட்ட நேரம் தொடங்கப்போகுதம்மா. நாளைக்கு யோசிப்பம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் வேலைக்குப் புறப்படும்போதும் அவளுக்கு இதே மன உளைச்சல்.

"நான் போட்டுவாறனம்மா."

"ஐடென்ரிக் காட் எடுத்திட்டியே? மச்சாளுக்குச் சொல்லியனுப்பிற வழியைப்பார். மாமாவை மத்தியானம் போய்ப் பார்." அம்மா சொல்லிக்கொண்டே வழியனுப்பவர, கேற்றைத் திறந்துகொண்டு செல்வராசா வந்தான்.

"சர்மி, சித்தி சித்தப்பாவைப் போகவிடமாட்ட னெண்டு நிக்கிறா. நேற்று நடந்ததைக் கேட்டு அவ பயப்பிடுகிறா. சூடுபட்டும் சிலருக்குக் காயமாம். பண்டுக்கு அங்காலை திலீபன் நினைவு தினமாம்." செல்வராசாவின் குரல் அழப்போகிறானோ என்று பயமூட்டுகிறது.

"எங்கடை சித்ராவின்ரை பெடியனை விடுவமே? வரமுடியாதெண்டால் அங்காலை மனோன் வீட்டை நிப்பன்தானே." அம்மாவின் ஆலோசனை.

"பெரிய ஆக்களே போக யோசிக்கினம். பெடியனை அனுப்பச் சொல்லுறியள்."

"பெடியனைத்தானே போகச் சொன்னனான். பெட்டையையே போகச்சொல்லுறன்." அம்மாவின் பேச்சு அவளுக்கு எரிச்சலை மூட்டுகிறது.

"பெட்டையளும் சரி, பெடியளும் சரி போன இடத்திலை காணாமல் போகுதுகள். ஊரிலை நடக்கிறது கள் தெரியாமல் கதைக்கிறியள்." அவள் அம்மாவுக்குக் காரணமாகவே சொல்கிறாள்.

வேலைக்கு வாறவை ஆரிட்டையும் கேட்டுப் பாக்கிரன்" சர்மிளா சொல்லிக்கொண்டு புறப்படுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் அந்தப்புறத்து மனிதர்கள் எவரும் வேலைக்கு வரவில்லை. தட்டாதெருப் பக்கம் சுற்றிவளைப்பாம்.

சர்மிளா என்ன செய்வதென்று புரியாமல் மூளையைக் கலக்கிக் கொள்கிறாள். மதியம்வரை வேலையும் ஓடவில்லை. மதியம் வைத்தியசாலைக்கு அவசரமாகப் போகின்றாள்.

செல்வராசாவின் மனைவி கலைமகள் அங்கே நிற்கிறாள்.

“செல்வராசா அத்தான் எங்கே?”

“அவர் மனோான் மச்சாளுக்குச் சொல்லப்போட்டார்.” கலைமகளின் இந்தப் பதிலை அவள் எதிர்பார்க்கவில்லை.

“அவர் போட்டாரே. வரேலாவிட்டால்...”

“அவரும் என்ன செய்ய? எங்கடை அலுவலுக்கு ஆரையும் அனுப்ப முடியுமே? எல்லாரும் போகமாட்டனெண்டு சொல்லுகினம். மாமாவும் எவ்வளவு நேரம் தாக்குப் பிடிப்பரோ?”

மெல்லிய விக்கல் இடைக்கிடையே வர மாமா நினைவிழந்து கிடக்கிறார்.

“மனோான், பிள்ளை மனோான்,” நேற்றைய அந்த உதட்டு அசைவுகூட நின்று... அது இப்போது மனதினுள் துடிக்குமோ?”

“மாமா, மாமா” சர்மிளா தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுகிறாள்.

திடீரென்று மாமா வாயைத் திறந்து கஷ்டப்பட்டு மூச்சு விடுவதுபோல் ஒரு சத்தம் வருகிறது.

மாமாவின் நிலை அவளது அழுகையை நிறுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமகளும் சர்மிளாவும் அவரது நெஞ்சை வருடி கையைப்பிடித்துப் பார்க்கிறார்கள். மனோரன் மட்டுமல்ல, செல்வராசாவும் அருகில்லாமல் அவர் போய்விட்டார்.

கலைமகள் அழத் தொடங்குகிறாள்.

சர்மிளா திகைத்து நிற்கிறாள்.

வைத்தியசாலை விதிமுறைகளின்படி உடலை இனி அவர்கள்தான் எடுத்துச் செல்லவேண்டும். அதுவல்ல பிரச்சனை.

பிள்ளைகள் வரும்வரை அவ்வுடலைப் பழுதுபடாமல் செய்யவேண்டும். அவர்கள் வர எத்தனை நாட்கள் செல்லுமென்று சொன்னால் அதற்கேற்ற, ஒழுங்குகள் செய்வார்கள். அவளால் எத்தனை நாட்கள் செல்லு மென்று சொல்ல முடியாமலிருப்பதுதான் இப்போதைய பிரச்சனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோகங்களும் சுமைகளாகி...

ஷெல்லொன்று விழுந்து வெடித்த பெருஞ்சத்தத்தில் வேணி திடுக்குற்று விழிக்கிறாள்.

உறக்கத்திலிருந்ததால் ஷெல் விழுந்த திசை புரியவில்லை. ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்த மகன் ரமணணையும் மகள் ரதியையும் எழுப்பி இழுத்துக் கொண்டு பங்கருக்குப் போகவேண்டுமா இல்லையா என்பதும் விளங்கவில்லை.

நேரம் என்னவாக இருக்கும்?

அதுவும் தெரியவில்லை. நேரத்தைச் சட்டென்று பார்ப்பதற்கு வெளிச்சம்தர மின்சாரமில்லை. பற்றரி இல்லை. எங்களின் வாழ்வு இருண்டே இருக்கவேண்டுமென்றோ என்னவோ தீப்பெட்டிக்குக் கூடத் தட்டுப்பாடு. என்றாலும் ஒரு தீக்குச்சியைத் தட்டி கை மணிக்குட்டைப் பார்க்கிறாள். நடுச்சாமம் 12 மணி 15 நிமிடங்கள்.

இந்த நேரத்திலே ஷெல்வீச்சு. கொஞ்சங்கூட ஈவிரக்கமில்லாமல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈவிரக்கமுள்ளவன் ஷெல்லடிக்கமாட்டானே. அவளது நினைவை அவளது அறிவே தடுத்துத் திருத்துகிறது.

எப்பொழுது இந்தக் கொடுமை ஓயும்?

அவளது கணவன் சசிதரன், அவளுடைய வீடு, அதைச் சுற்றியிருந்த தோட்டந்துரவு. சிறிது சிறிதாகப் பணஞ் சேர்த்து, அவள் பார்த்துப் பார்த்து வாங்கிச் சேர்த்த பொருட்கள், ஒவ்வொன்றாக நினைவுவர, கண்களிலிருந்து உறக்கம் ஓடிவிட கண்ணீர் பெருகி ஓடுகிறது.

புரண்டு புரண்டு படுக்கிறாள். உடலின் அயர்ச்சி கண்களைச் சூழ்கிறது.

காகங்குருவிகளின் சப்தம் கண் விழிக்கச் செய்தபோது, அந்தப் பனிக்குளிரில் எழுவதற்கு மனமில்லாமலிருக்கிறது.

அதற்காகப் படுத்திருந்துவிட முடியுமா? எவ்வளவு வேலைகள் அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன.

எழுந்து பல்துலக்கி காலைக்கடன்களை முடித்தபின் அடுப்பை மூட்டவென்று அந்தச் சிறு கொட்டிலினுள் நுழையும்போது ஒருபுறத்தில் உட்கார்ந்து அழலாம் போலிருக்கிறது.

சுற்றிவரப் பனைமட்டையால் வரிந்து, கிடுகால் வேய்ந்த கொட்டில், மண் அடுப்பு, பனியின் ஈரலிப்பில் புகையும் விறகு.

அவள் தன்னுடைய வீட்டைக் கட்டியபோது மிகக் கவனஞ் செலுத்தி, தனது விருப்பத்திற்கேற்பக் கட்டுவித்தது சமையலறைதான். அலுவலக வேலையுடன் வீட்டு வேலையையும் கவனிக்க வேண்டியிருந்ததால் மின்னுபகரணங்களையும் வாங்கி வசதி செய்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமி வருகுதாம். ஓடி வாருங்கோ." என்றதுமே கையில் கிடைத்த ஓரிரு பொருட்களுடன் ஓடிவந்தபோது ஓர் அறையும் இந்தக் கொட்டிலும் கிடைத்ததே பெரிய விடயம்.

மழை நாட்களில் தூவானமும், ஈரவிறகும் குப்பி விளக்குமாக அவள்பட்ட பாட்டில், பத்துத் தரம் அவளு டைய மனம் தனது வீட்டிற்குப் போய் வந்து, அடம் பிடித்து அழும்.

அடுப்பைப் பற்றவைத்து, கேத்திலை வைத்தபின் ரமணனையும் ரதியையும் எழுப்பினாள்.

"விடியற்காலையிலை படிக்கிறது மனதிலை பதியும். எழும்பிப் படியுங்கோ."

"உந்த விளக்கிலை இரண்டுபேரும் படிக்கேலாது. அண்ணனைப் படிக்கச் சொல்லுங்கோ" ரதி சோம்பல் முறிக்கிறாள்.

ஏதேதோ சொல்லி அவர்களை எழுப்பிப் படிக்கச் செய்து, தேநீர் கொடுத்துவிட்டு, சமையலை முடிக்கிறாள். பணிமனைக்குப் புறப்படுவதற்கிடையில் வேலைகள் வரிசையாக நீள்கின்றன.

பிள்ளைகள் இருவரும் சைக்கிளில் பாடசாலைக்குப் புறப்பட, அவளும் சைக்கிளில் வேலைக்குப் புறப்படுகிறாள். முன்னர் மகளையும் தன் சைக்கிலேயே கொண்டு சென்று பாடசாலையில் விட்டுவந்தாள்.

இப்போது ஒரு மாதமாக ரதியும் தனது சைக்கிளில் பாடசாலைக்குப் போகத் தொடங்கியிருந்தாள். ஒரு மாதிரி தம்பி அனுப்பிய காசில் ரதிக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் தம்பி, எவ்வளவு பாடுபட்டு, காசு அனுப்பினானோ? கொழும்பிலேயிருந்து சீவிக்கவே உழைப்பும் போதாது. காணி, வீடு, சொத்து எல்லாவற்றையும் இழந்த பிறகு வேணிக்கும் இதே நிலை. சசிதரன் இருந்தவரை இரண்டு பேரின் உழைப்பு.

அவனும் கொழும்பிற்கென்று புறப்பட்டுப் போனவன், "வருவான் வருவான்" என்று மூன்று வருடங்களாக அவள் காத்திருக்கின்றாள். இராணுவம் கைது செய்ததாகச் சிலர் சொன்னார்கள். அப்படி ஒருவரைக் கைது செய்யவில்லையென்று இராணுவம் கூறிவிட்டது. அவனது கதை விடுபடாத புதிராக நீள்கிறது.

அதன்பின் வேணியின் தம்பி ரங்கன், அவளது குடும்பத்தைச் சீர்செய்யவென்று, வெளிநாடு செல்லப் புறப்பட்டான்.

ஓடிவரும்போது கொண்டுவந்த நகைகள் வங்கியில் கிடந்த பணம் எல்லாவற்றையும் எடுத்துச் சென்றவன், ஏஜென்ஸியிடம் காசைக் கொடுத்துவிட்டு, இந்த மாதம் அடுத்த மாதமென்று ஒரு வருடத்திற்கு மேலாக கொழும்பிலே காத்திருகின்றான். தன் நிலைமை தெரிந்த அவன், கொழும்பு சென்று சில மாதங்களானதுமே உறவினர் ஒருவரின் கடையில் வேலை செய்ய ஆரம்பித்ததால் தனது செலவைச் சமாளித்தான்.

குண்டு வெடித்த பெரிய சத்தம் அவளது நினைவோட்டத்தை நிறுத்துகிறது.

யொய்யென்ற சுப்பர்சோனிக் விமானத்தின் குலைநடுங்கச் செய்யும் சத்தம், சைக்கிளோட்டத்தை நிறுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தப் பிளேன் குண்டுபோட்ட பிறகுதான் பிளேனின்ரை சத்தங் கேட்கும். முதலாவது குண்டுக்குத் தப்புறது கஷ்டம். சத்தங்கேட்டால்தானே ஓடி ஒளிய?"

அவள் சைக்கிளைப் போட்டுவிட்டு வீதியோரத்தில் விழுந்து படுத்திருக்கும்போது அருகே ஒருவரது பேச்சுக்குரல் காதில் விழுகிறது.

"முதல் குண்டு எங்கே விழுந்திருக்கும்? தென்மேற்குத் திசையாக அண்மையிலேதான் விழுந்திருக்க வேண்டும்." அப்படியென்றால் ரமணனும் ரதியும்...?

டமார்...

மீண்டும் குண்டுவீச்சு.

மூச்சு நின்று வருவதுபோல் ஒரு பிரமை. உடல் அவளது வசமின்றி நடுங்குகிறது.

"கடவுளே, பிள்ளையாரே"

இத்தனைக்குப் பிறகும் இவ்வளவு மனித சக்திகளையும் கடந்த ஒரு சக்தியில் அவளுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது.

விமானத்தின் சத்தம் தூர மறைகிறது. வீதியோரத்தில் விழுந்து படுத்திருந்தவர்களும் மரங்களின் கீழே ஒதுங்கியவர்களும் வீதிக்கு வருகிறார்கள்.

சைக்கிளைத் தூக்கியதும் "பிள்ளைகளைத் தேடிப் போவதா? வேலைக்குப் போவதா?" என்று மனம் தடுமாறுகிறது.

"சுப்பர்சோனிக் போட்ட குண்டு அந்த வெயிளிலை தான் விழுந்து வெடிச்சதாம்." யாரோ சொல்லிக் கொண்டுபோனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது மன ஆறுதலுடன் பணிமனைக்கு அவள் புறப் பட்டாள்.

"குண்டு விழுந்து கனபேர் சரியாம்" யாரோ அவளைக் கடந்து செல்கையில் கூறியது காதிற்படுகிறது.

அப்படியென்றால் ரமணனும்... ரதியும்...? மனம் குழம்பும்போது பணிமனையும் சமீபிக்கிறது.

அவள் உள்ளே நுழையும்போதே பணிமனை சாதாரண நிலையிலில்லை. கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து ஏதோ பரபரப்பாகக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மனம் பதறுகிறது. சத்தியா நின்ற இடத்திற்கு அவள் போகிறாள்.

"என்ன குண்டு போடேக்கை நீங்கள் வெளிக்கிட்டீங் களா? உங்கடை ஊருக்குத் தள்ளி ஒரு வயிரவர் கோயிலடியிலைதான் குண்டு விழுந்ததாம்.

"ரமணனும் ரதியும் அந்த வயிரவர் கோயிலுக்குக் கிட்டத்தான் அந்த நேரத்தில் போய்க்கொண்டிருந் திருப்பார்கள். முதல் சத்தம் கேட்டிருந்தாலாவது அவர்கள் எங்கேயும் ஒதுங்கி இருந்திருக்கலாம். அந்தச் சந்தர்ப்பங்கூடக் கிடைத்திருக்காதே."

மனதின் கவலை கண்ணில் வழிகிறது.

"ஏன் வேணி, அழுகிறீங்கள்? என்ன நடந்தது?" சத்தியா பதறுகிறாள். மற்றவர்களின் கவனமும் அவளது பக்கம் திரும்புகிறது.

"ரமணனும் ரதியும்..." அவளது குரல் அடைத்து வார்த்தைகள் வெளிவர மறுத்து விம்முகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழாதேங்கோ. அழாதேங்கோ. அவைக்கு என்ன?" சத்தியா அவளை அணைத்து ஆறுதற்படுத்துகிறாள்.

"அவை பள்ளிக்கூடம் போனவை. வழியிலைதான் குண்டு விழுந்திருக்கு" அவள் திக்குத் திணறிக் கூறுகிறாள்.

"அதுக்கேன் பயப்பிடுகிறியள்? ஒண்டும் நடந்திருக்காது. அப்பிடி ஏதாவது நடந்தால் ஆரும் வந்து சொல்லுவினம் தானே?" அந்தக் கூற்றை வேணியின் மனம் நம்பத் தயாராக இல்லை.

எல்லோரும் எத்தனையோ சொல்லியும் மனதினுள் ஒரு கலக்கம்.

மேசையிலே போய் அமர்கிறாள். மனம் வேலையில் ஈடுபட மறுக்கிறது. கோவைகளை எடுத்து வைக்கிறாள். எதுவுமே செய்ய முடியாதிருக்கிறது.

"இண்டைக்குக் குண்டுபோட்டதிலை கனக்கப் பள்ளிக்கூடப் பிள்ளையள் செத்துப் போயிட்டினமாம்." பணிமனைக்கு வந்த ஒருவர் அங்கிருந்த தன் நண்பருக்குக் கூறுகிறார்.

"ஐயோ"

அவளால் இனிப் பொறுக்க முடியாது.

"நான் போய்ப் பிள்ளையளைப் பார்க்கவேணும். இண்டைக்கு லீவு தாங்கோ." அழுகை எட்டிப்பார்க்கும் அவளது பதற்றமான குரல், அதிகாரிக்கும் அனுதாபத்தை ஏற்படுத்த, "கூட யாரையாவது கூட்டிக்கொண்டு போகப்போகிறீர்களா" என அன்பாக கேட்கிறார்.

"வேண்டாம். தாங்ஸ். நான் தனியப்போவன்" அவள் பவ்வியமாக மறுத்துவிட்டுப் புறப்படும்போது சத்தியா உட்பட பல நண்பர்கள் அவளுக்கு உதவியாக வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வருகின்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டு அவள் பணிமனையிலிருந்து புறப்படுகிறாள்.

"முதலில் பாடசாலைக்குப் போவதா? வைத்திய சாலைக்குச் செல்வதா?" இதைச் சிந்திக்கத் தொடங்கி அதிலிருந்து பின்னிவளர்ந்த நினைவுகள் சசிகரனில் போய் நிற்கின்றன.

"அவனும் இருந்திருந்தால்..."

இப்போது அவன் ஒருபுறமும் அவள் ஒருபுறமுமாகத் தேடியிருக்கலாம். அவள் மனதிற்கு ஒரு தெம்பு கொடுத் திருப்பான். இப்படித் தனித்தே சுமைகளைச் சுமந்து சுமந்து களைத்துவிட்ட ஆயாசம்.. வேதனை..

எதிரே சைக்கிளில் வந்த கௌரி கையைக்காட்டி நிறுத்துகிறாள்.

"வேணி, தெரியுமே ரஜனின்ரை மகளைக் காணேல்லை"

"ஏன்? என்ன நடந்தது?"

"காலமை பள்ளிக்கூடம் வெளிக்கிட்ட பிள்ளை, ஒரு இடத்திலும் காணேல்லையாம். குண்டு விழுந்த இடத்திலை பள்ளிக்கூடப் பிள்ளையள் போய்க் கொண்டிருந்தவையாம். கனபிள்ளையள் கை காலில்லா மல் ஆஸ்பத்திரியிலை கிடக்குதுகளாம். சிலதைக் காணேல்லை. குண்டு நேரை விழுந்தா ஏதாவது மிஞ்சுமே? குங்குமக் குளம்பு மாதிரி ரத்தக்குளமாய் அந்த இடம் கிடக்காம்."

வெண்புறாக் குஞ்சுபோல் சீருடையில் புறப்பட்ட சிறிசு இரத்தக் குளம்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ என்ரை பிள்ளையள்.." சித்த சுவாதீனமற்றவள் போல் அவள் சைக்கிளில் ஏறிப்போவதைப் பார்த்துக் கொண்டு திகைத்துப்போய் நிற்கிறாள் கௌரி.

"என்ரை பிள்ளையள் கடவுளே... கடவுளே..." அவசரமாகச் சென்று பாடசாலை வாயிலில் சைக்கிளை நிறுத்துகிறார்.

பாடசாலையில் பிள்ளைகளையே காணவில்லை.

"இண்டைக்குப் பள்ளிக்கூடம் நடக்கேல்லை. பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பியாச்சு" விபரம் தெரிவிக்கிறான் காவலாளி.

'அடுத்தது வைத்தியசாலை."

அவள் விரைந்து போகிறாள்.

வைத்தியசாலையே கண்ணீரும், கதறலும் சோகமுமாய்க் கிடக்கிறது. விழிநீரைத் துடைத்தபடி அவள் காயமடைந்தவர்களின் பெயர்ப்பட்டியலையும் இறந்தவர்களின் பெயர்ப் பட்டியலையும் பார்வை யிடுகிறாள். அதற்குக்கூட ஒரு கும்பல். ரமணனின் பெயரோ, ரதியின் பெயரோ இல்லை. இனங்காணப் படாத சடலங்கள் இன்னுமிருக்கின்றன. அவற்றைப் பார்ப்பதற்காக அவளை அழைத்துச் செல்கின்றனர்.

அந்தக் காட்சி...

வேணியின் தலை சுற்றுகிறது.

அவள் கண் விழித்தபோது படிப்படியாகப் பழைய நினைவுகள் வருகின்றன. அருகே நின்ற நர்ஸ் ஆதரவாகச் சிரிக்கிறாள்.

"என்ரை பிள்ளையள்.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவைக்கு ஒன்றுமில்லை. சுகமாயிருக்கினம். இந்த ரீயைக் குடியுங்கோ." நர்ஸ் அவளை இருத்தி அணைத்து தேநீரைத் தருகிறாள்.

"பிள்ளையள் எங்கை?"

"ரீயைக் குடிச்சிட்டு கொஞ்சம் ஆறி, வீட்டை போங்கோ. அங்கை இருப்பினம்."

"உண்மையாகத்தான் சொல்கிறாளா?" வேணிக்கு நம்பிக்கையில்லை. மடமடவென்று தேநீரைக் குடித்துவிட்டு எழுகிறாள்.

"ஆறுதலாக எழும்புங்கோ. கவனமாய்ப் போங்கோ. மனதைக் குழப்பாதேங்கோ."

வேணியின் மனம் வீட்டிற்குப் பறக்க விரும்புகிறது. ஆனால் உடல் அதற்கு இடந்தர மறுக்கிறது. சோர்வாக உணர்கிறாள்.

அவள் கண்ணில் தெரியும்போதே ரமணன் வாயிலில் நிற்பது தெரிகிறது.

"ரமணன் ரதி எங்கே? உங்களுக்கு ஒண்டு மில்லைத்தானே" அவள் ஓடிவந்து ரமணனை அணைத்து முத்தமிடுகிறாள்.

"எங்களுக்கு ஒண்டுமில்லையம்மா. பயந்து போயிட்டீர்களே? ஆரும் ஏதும் சொன்னவையே?" ரமணன் அவளது கழுத்தைக் கட்டிக்கொண்டு கேட்கிறான்.

"என்னைத் தூக்கிக் கொஞ்சுங்கோ" ரதி ஓடி வருகிறாள்.

"கிழவியைத் தூக்கேலுமே" ரதியையும் அணைத்து முத்தமிடுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் வயிரவர் கோயிலடிக்கு போகமுன்னம் ரஞ்சி அன்ரி வீட்டுக்குப்போக, குண்டு விழுந்திட்டுது. ரஞ்சி அன்ரி வீட்டு பங்கருக்குள்ளை போயிருந்திட்டு பள்ளிக்கூடம் போகாமலே வீட்டை வந்திட்டம்" ரமணன் நடந்ததை விபரிக்கிறான்.

அவள் கும்பிட்ட பிள்ளையார் கைவிடவில்லை.

ஓய்ந்த உடலை நாற்காலியில் இருத்துகிறாள்.

"அம்மா, மா முடிஞ்சிட்டுது எண்டனீங்கள். மா வாங்கிளனீங்களோ? பாலும் கிடைக்காதெல்லே?"

இதுவரை அவள் மறந்துவிட்டிருந்த ஏனைய சுமைகள் மனதுள் ஏறுகின்றன.

"குடும்ப அட்டையைப் புதுப்பிக்க இரண்டு நாள்தான் இருக்காம். பக்கத்துவீட்டு அன்ரி உங்களிட்டைச் சொல்லச் சொன்னவ."

வரிசையில் நின்று அதைப் புதுப்பிக்க நாளைக்கும் லீவு எடுப்பதென்றால்...

அவள் சோர்வோடு நாற்காலியில் சாய்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வின் நிழல்கள்



திருமதி. **யோகேஸ்வரி சிவப்பிரகாசம்** அவர்கள் ஈழத்தின் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்புக் காலத்திலிருந்தே சிறுகதை, கவிதை, நாடகம் ஆகிய படைப்புத் துறைகளில் தம்மை இனங்காட்டிக் கொண்டவர். அங்கு நடைபெற்ற போட்டிகளில் பரிசுகள் பெற்றவர்.

வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற தேசிய இதழ்களில் வெளிவந்து பாராட்டும் பெற்ற கதைகளை இத்தொகுதியில் காணலாம். இரு கதைகள் **தகவம்** பரிசு பெற்றவை. பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள், சோதனைகள், வேதனைகளை ஆழ்ந்த கருத்தமைதியுடனும், கலையழகுடனும் இத் தொகுதியில் தரிசிக்கலாம்.

ஆசிரியர் யாழ்ப்பாணத்திலுள்ள கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளராகப் பணிபுரிகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org